Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24 ரூபா 30.00
செப்ரெம்பர் 03 -09, 2015

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1133

# தேசிய அரசு எப்படி இருக்கும்?

## ஈரான் உடன்படிக்கையுடன்



## ஒபாமா



## நலிவுற்றோருக்கான குரல்



## ஒய்ந்து போனது!

## மக்கள் தீர்ப்பும் தலைமைகளும்

## சனி தோசம் விலக்கும் அனுமன் வழிபாடு

சனி பகவானால் ஒரு கட்டத்திற்கு மேல் சுமையை தாங்கமுடியவில்லை. இதனால் அனுமனின் தலையிலிருந்து கீழே குதித்தார். இதைக் கண்ட அனுமன், "சனி பகவானே, ஏழரை ஆண்டுகள் என்னிடம் இருக்கப் போவதாகச் சொல்லிவிட்டு, இவ்வளவு சீக்கிரம் இறங்கிவிட்டீர்களே?" என்றார். அதற்கு சனி பகவான், "அனுமனே, உன்னிடம் ஏழரை நிமிடங்கள் மட்டுமே என்னால் இருக்கமுடிந்தது. இதன்மூலம் நான் தோல்வியடைந்தாலும், இராமனுக்கான சேது பாலம் அமைக்கும் பணியில், தங்கள்மூலம் நானும் பாறைகளைச் சுமந்த நற்பேறு பெற்றேன். அதற்காக நான் உனக்கு ஏதாவது நன்மை செய்யவிரும்புகிறேன்" என்றார்.

அனுமன், இராமனின் பெயரைப் பக்தியுடன் உச்சரித்து வணங்குபவர்களை ஏழரைச் சனிக் காலத்தில் ஏற்படும் துன்பங்களில் இருந்து காத்தருளவேண்டும் என வரம் கேட்டார். சனிபகவானும், இராமன் பெயரை உச்சரித்து வணங்குபவர்கள் மட்டுமின்றி, உன்னை நினைத்து வழிபடுபவர்களுக்கும் துன்பங்களைத் தராமல் நற்பலன்களை அளிப்பேன் என்று வரம் அருளினார்.

(தொடரும்)

ஆன்மீகம்

## விசுவாசமே நமது வலிமை

ஒரு அழிக்கும் சக்திக்கு அவ்வளவு ஆற்றல் இருக்கிறது என்றால் ஒரு நல்லவனுக்கு அதே ஆற்றல் இல்லையா? இருக்கிறது. அதை அடையாளம் காணவேண்டும். அவனுக்குள் இருக்கின்ற ஆன்மீக சக்தியே அந்த ஆற்றல். இயேசுவோடு உள்ள உறவே அந்த வலிமை. நற்செய்தி காட்டும் மதிப்பீட்டின்படி வாழ்வதே அந்த சக்தி. மனிதத்தையும் மனிதநேயத்தையும் மதித்துப் போற்றி வாழ்வதே அந்த வல்லமை. உண்மைக்காக, நீதிக்காக போராடும் உணர்வே அந்த பலம். இது ஒரு கடுகளவு இருந்தால்போதும். அதன் தாக்கம் ஒரு பெரிய ஆலமரத்தின் கிளைபோல பரந்துவிரிந்து பல பறவைகள் தங்குவதற்கும் பல விலங்குகள் ஒதுங்குவதற்கும் ஏற்ற இடமாகிறது.

நாம் பெற்றுள்ள ஆற்றல் அவ்வளவு வலிமை வாய்ந்தது என்பதால், அது அளவில் மிகச் சிறியதாயினும், எண்ணிக்கையில் மிகக் குறைந்ததாயினும், கொஞ்சம் புளிப்புமா, மா முழுவதும் புளிப்பேற்றுவதுபோல் உலகின் எல்லா இடங்களிலும் எல்லா சூழலிலும் வாழ்வுக்குச் சுவையூட்டக்கூடியது.

எனவே, நாங்கள் கொஞ்சம் பேர். நான் ஏழை. நான் படிக்காதவன். நான் சிறியவன் என்றெல்லா காரணம் கூறுவது விசுவாச வாழ்வின் வல்லமையை உணராமை. கடுகு சிறிதாயினும் காரம் குறையாது. கடுகளவு விசுவாசம் இருந்தாலும்போதும் மலையையும் நகர்த்தலாம்.

## அண்ணல் நபியின் சொத்துக்கள்

ஒரு நாள் கடைத்தெருவிற்கு சொன்ற ஹஸ்ரத் அபூஹுறைரா (ரலி) அவர்கள் அங்கிருந்த மனிதர்களைப் பார்த்து நீங்கள் இங்கு உட்கார்ந்துகொண்டிருக்கிறீர்கள். அங்கு மஸ்ஜிதில் அண்ணல் நபி(ஸல்) அவர்களுடைய சொத்துக்கள் பங்கு வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று கூறினார்கள்.

இதனை கேட்ட மனிதர்கள் மஸ்ஜிதை நோக்கி ஓடினார்கள். அங்கு அதுவும் பங்கிடப்படாததைக் கண்ட அவர்கள் திரும்பிவந்து அபூஹுறைரா (ரலி) அவர்களிடம் மஸ்ஜிதில் எதும் நடைபெறவில்லையே என்றார்கள்.

அதற்கு அபூஹுறைரா (ரலி) அவர்கள் அப்படியானால் அங்கு என்ன நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்று அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு அவர்கள் மஸ்ஜிதில் சில மனிதர்கள் அல்லாஹ்வை திக்ரு செய்வதிலும் சிலர் குர்ஆன் ஓதுவதிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படியா அவைகள்தான் அண்ணல் நபியின் சொத்துக்கள்.

எம்.சி.கலீல், கல்முனை - 05

---

## கவிதைப்போட்டி 1130



● பாராட்டுக்குரியது ●

### எதிர்காலம்

வறுமைக்குள் வளர்ந்த
உள்ளங்கள்
வாழ்வதற்கு உதவாத
இல்லங்கள்
எதிர்காலம் தேடியே
இவர்களின்
வெளிநாடு போன
தாயவள்
எதிரே வருவதாலோ - இந்த
சிறுவர்களின் சிரிப்புக்குக்
காரணமோ!

இளம்பிறை யோகன்,
புத்தளம்.




## கவிதைப் போட்டி இல 1133



### ஏளனம்

ஆறு வருடங்கள்
தம் தொகுதி பக்கமே
தலைகாட்டா அமைச்சர்
புதுப்புது வாக்குறுதிகளுடன்
வந்துகொண்டிருப்பதைக் காண
பிள்ளைகளின்
முகங்களில்கூட
ஏளனச் சிரிப்பு.

அ.சந்தியாகோ,
கண்டி.

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தாபலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 14. 09. 2015

**கவிதைப் போட்டி இல. 1133 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

### தஞ்சம் கொண்ட கவலைகள்

வஞ்சமில்லா பிஞ்சுகளின்
நெஞ்சங்களிலே மகிழ்ச்சிகள்
மிஞ்சி வழிகிறதோ முகங்களில்
கொஞ்சும் அன்னையைக் கண்டதாலோ
தஞ்சம் கொண்ட கவலைகளெல்லாம்
பஞ்சாப் பறந்ததோ - இன்று
இவர்களின் உள்ளங்களில்

இளம்பிறை, அநுராதபுர வீதி.

### சிரிப்பு

புன்னகை
இருந்தால்
பொன்னகை
தேவையில்லை
சின்னஞ்சிறுசுகள்
சிரிப்பது இதுவே.

எம்.சி. கலீல்,
கல்முனை - 05.

### நான் உங்களுக்கு...

நான்கைந்து வருடத்தின் பிறகு
நானுங்கள் வீடுநாடி
வருகின்ற தாய்மாமன்!
என்னை வரவேற்க
இத்துணை மகிழ்ச்சிப்
புன்னகை உங்களுக்கு
கள்ளங்கபடமில்லா - என்
கண்மணி மருமக்காள்!
என்னுள்ளமும் மகிழ்கிறது
இதற்கெல்லாம் ஈடாக
நான் உங்களுக்கு
என்ன தரப்போகிறேன்?

பாண்டியூர்
பொன் நவநீதன்

## உங்கள் பக்கம்

### புனரமைக்கப்படுமா சிறுவர் பூங்கா?

கிளிநொச்சி, முட்கொம்பன் பகுதியில் உள்ள சிறுவர் பூங்கா, இன்றுவரை பாவனையின்றி பற்றைக்காடாக இருப்பதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யுத்தம் நிறைவுற்ற பின்னரும் தற்போது எந்தவித பயன்பாடுமின்றி பற்றைக்காடாகக் காணப்படுவதுடன் விளையாட்டு உபகரணங்களும் சேதமடைந்து பராமரிப்பின்றி காணப்படுகின்றன. ஆகவே, இதனை பயன்படுத்துவதற்கு வழி ஏற்படுத்தித்தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிறுவர்களின் பொழுபோக்கிற்காக பற்றைக்காடாக இருப்பது கவலையளிக்கிறது. பாம்பு, பூச்சிகளின் வாழ்விடமாக மாறிக் கொண்டிருக்கிறது இச்சிறுவர் பூங்கா.

கடந்த 2013ஆம் ஆண்டில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான கிராமிய மற்றும் சிறுநகர அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், பொருளாதார அமைச்சினூடாக 3.6 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த சிறுவர் பூங்கா நிர்மாணிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே சிறுவர்களின் இப்பூங்காவை விரைவில் புனரமைத்து தருவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென உங்கள் பக்கமூடாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆர்.கே.ஆனந்தன், முட்கொம்பன்


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்: (E-mail):-
thinamurasu@live.com


## வாசகர்சாலை

### வெற்றி உனக்கே!

தினமுரசுக்கு வணக்கம்.

முரசு சென்றவாரம் வரவில்லை. ஆனாலும் மீண்டும் எம் கைகளில் தவழவிட்டுவிட்டாய். காலம்கொண்ட கோலத்தால் எதுவும் மாறலாம். எப்போதும் நம் இலக்கை என்றுமே மாற்றிக் கொள்ளக்கூடாது. பல பகீரதப்பிரயத்தனங்களைக் கண்ட முரசு இனி என்றுமே சோர்ந்துவிடக் கூடாது. என்றுமே முரசின் வெற்றிக்கு வாசகர்களாகிய நாமும் உறுதுணை யுடன் என்றுமே நிற்போம்.

**எம்.சேதுராமன், வவுனியா.**

### ஏமாற்றம்

தினமுரசின் அனைத்துப் பக்கங்களும் அருமையிலும் அருமை. கண்டிக்கு தினமுரசு பத்திரிகை வருவதற்கு தாமதமாகிறது. முரசு இதை கவனிப்பதற்கு ஏன் பின்நிற்கிறது. நீண்டநாள் வாசகர்களாகிய கண்டியில் பலபேர் உள்ளனர். இருந்தும் முரசு இதில் அதிக அக்கறை கொள்ளவேண்டும்.

தினமுரசு கையில் கிடைக்காதது பெரும் ஏமாற்றமாகவே இருக்கிறது. இது நீண்டநாள் பிரச்சினையாக உள்ளது.


**எம்.குமாரசுவாமி, கண்டி.**

### மாற்றம் மாறாதது!!

தினமுரசில் சில மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கின்றது. இன்னும் நிறையவே அது தேவை. முரசின் இந்த மாற்றம்தான் எனக்குப் பிடித்து இருக்கின்றது. சில பக்கங்களைத் தவிர, சிலவற்றிலேதான் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். மற்றப்படி எல்லா முரசின் நன்றாகத்தான் இருக்கின்றது.

**கா.சர்மி, கொள்ளுப்பிட்டி.**

### செப்ரெம்பர் - 03



"மனம்போன விதத்தில் ஒருவன் பாடத் தொடங்கினால், இனிமைதருவதற்குப் பதிலாக இசையே துன்பமாகிவிடும். அதுபோல, ஒழுக்கமில்லாத வாழ்வு தீமைக்கு வழிவகுக்கும்."

**கமலாத்மானந்தர்**

# தேசிய அரசாங்கத்திற்கு ஆதரவளிப்போம்

## டக்ளஸ் தேவானந்தா பி.பி.சி.க்கு தெரிவிப்பு




இலங்கையில் அமையவிருக்கும் தேசிய அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக பி.பி.சி. தமிழோசையிடம் பேசிய அவர், தேசிய அரசாங்கம் அமைப்பது ஒன்றிரண்டு கட்சிகளாக இருக்கமுடியாது. நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யும் சகல கட்சிகளையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டுமென டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கூறியுள்ளார்.

அமைச்சர் பதவியை எதிர்பார்த்து அரசுக்கு ஆதரவளிக்க வில்லையென்றும், அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவளிக்கத் தாங்கள் தயாராக இருப்பதாகவும் டக்ளஸ் தேவானந்தா கூறியிருக்கிறார்.

இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் குறித்து உள்ளக விசாரணைக்கு அமெரிக்கா ஆதரவளித்திருப்பதாக செய்திகள் வெளிவந்திருக்கும் நிலையில், எம்மாதிரியான விசாரணையாக இருந்தாலும் மக்களுக்கு நீதி கிடைப்பதே முக்கியம் என டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

# எட்டாவது பாராளுமன்ற சபாநாயகர் கரு ஜெயசூரிய



இலங்கையின் 8ஆவது நாடாளுமன்ற சபாநாயகராக ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர் கரு ஜெயசூரிய தெரிவுச் செய்யப்.பட்டுள்ளார்.


கருஜெய சூரியவை சபாநாயகராக பிரதமர ரணில் விக்கிரமசிங்க முன்மொழிந்தார். இதனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வா வழிமொழிந்தார்.

இந்தநிலையில் ஏனைய யோசனைகள் அற்ற நிலையில் கரு ஜெயசூரிய சபாநாயகராக பொறுப்பேற்றுக்கொண்டார்.

பிரதி சபாநாயகராக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசாங்கத்தின் பிரதம கொறடாவாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க நியமிக்கப்பட்டுள்ளார். இதேவேளை, ஐக்கிய தேசியக்கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல அவைத்தல்லவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# வெலே சுதா வழக்கு ஒத்திவைப்பு



பிரபல சர்வதேச போதைப் பொருள் வர்த்தகர் என்று கூறப்படும் வெலே சுதாவுக்கு எதிரான வழக்கு இம்மாதம் 8ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரிதி பத்மன் சுர சேனவின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மேற்கண் உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேகநபரான வெலே சுதா, 7.05 கிராம் ஹெரோய்ன் விற்பனை செய்ததாக முறைப் பாட்டாளர் தரப்பில் முறையிடப்பட்டுள்ளது.

இரசாயன பகுப்பாளர் அறிக்கையின் பிரகாரம் ஹெரோய்ன் 7.05 கிராம் என்று கூறப்பட்ட போதிலும் வெலே சுதா கைதுசெய்யப்படும் சந்தர்ப்பத்தில் அவரிடம் 84 கிராம் இருந்ததாகவும் 1 கிராமில் 200 பக்கற்றுகள் வியாபாரத்துக்கு தயாராக இருந்ததாகவும் அரச சட்டத்தரணி, நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தார். எனினும், பிரதிவாதிக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு போதியளவான சாட்சிகள் இல்லையென்று பிரதிவாதி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தார். இதனையடுத்தே வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# வவுனியாவில் 'செவ்வரத்தை' நூல் வெளியீட்டு விழா

வவுனியா தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்தும் 'செவ்வரத்தை' நூல் வெளியீட்டு விழா 06 ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா ஆதி விநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் இலங்கையில் நடத்திய சிறுகதைப் போட்டியில் பங்குபற்றிய 141 சிறுகதைகளில் 50 சிறுகதைகளின் தொகுப்பாக 'செவ்வரத்தை' நூல் விளங்குகிறது.

வவுனியா தமிழ்ச்சங்கத்தின் செயலாளர், தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக வவுனியாவின் முன்னாள் அரசாங்க அதிபரும் கல்வியமைச்சின் ஓய்வு நிலை செயலாளருமாகிய உடுவை தில்ல நடராஜா கலந்துகொள்வார். தமிழ் வாழ்தினை திருமதிகள் தாட்சாயினி கணேசநாதன், கலைவாணி ஏகானந்தராஜா(ஜேர்மனி) ஆகியோர் பாடுவர். அறிமுகவுரையினை யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் முன்னாள் செயலாளர் தமிழ்மணி கே.கே.அருந்தவராஜாவும் (மேழிக்குமரன்) வாழ்த்துரையை வவுனியாத் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் எஸ்.என்.ஜி.நாதனும் நிகழ்த்துவர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறும் நூல் வெளியீட்டில் முதற்பிரதியை லண்டனைச் சேர்ந்த விரிவுரையாளர் க.சிறிஸ்கந்தராஜா பெற்றுக்கொள்வார். நூல் ஆய்வினை வவுனிய தேசியக் கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் ந.பார்த்திபனும் சிறப்புரையினை யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் கவிஞர், எழுத்தாளர் திருமதி.கலைவாணி ஏகானந்தராஜாவும் வழங்குவர். இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பரிசில் பெற்றவர்களுக்கான கௌரவம் இடம்பெறும். இந்நூல் விற்பனையின்மூலம் பெறப்படும் நிதி இலங்கையில் உள்ள ஆதரவற்ற மாணவர்களின் கல்விக்காக வழங்கப்படும்.

## நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு விசேட பேரூந்து சேவை

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்வசத்தை முன்னிட்டு வெள்ளவத்தை புகையிரத நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான விசேட பேரூந்து சேவை ஆரம் பித்துள்ளது.

இப்பேரூந்து முதலாம் திகதி தொடக்கம் தினமும் இரவு 8.30 மணிக்கு வெள்ளவத்தை புகையிரத நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருவதற்கு இவ்விசேட பேரூந்து சேவையை ஆரம்பித்துள்ளது.

இப்பேரூந்து வெள்ளவத்தையில் இருந்து புத்தளம் பாதையினூடாக சேவை ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இலங்கைப் போக்குவரத்து சபை (வடக்கு) அறிவித்துள்ளது.


# இலங்கைக்கு ஆதரவுவழங்கும் அவுஸ்திரேலியா

இலங்கை அரசாங்கத்திற்கு அவசியமான அனைத்து ஆதரவுகளையும் வழங்கவுள்ளதாக அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

அபிவிருத்தி, வர்த்தகம் மற்றும் முதலீடு உட்பட பல அவற்றில் உள்ளடக்கப்படும் என அவுஸ்திரேலியாவின் உயர்ஸ்தானிகர் ரொபின் மூடி தெரிவித்துள்ளார். இருதரப்பு வர்த்தகம் பெறுமதி தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகின்றதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்வித்துறையில் இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் அதிக தொடர்புள்ளதாக அவுஸ்திரேலியாவின் உயர்ஸ்தானிகர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பின்லேடன் சாகவில்லையாம் பரபரப்பு தகவல்



சர்வதேச பயங்கரவாதியான ஒசாமா பின்லேடன் இன்னும் சாகவில்லை. அவர் அமெரிக்க உளவுத்துறையின் பாதுகாப்பில் சொகுசாக வாழ்ந்துவருகிறார் என எட்வர்ட் ஸ்னோடன் பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க பாதுகாப்பு இரகசியங்களை வெளியிட்டதாக குற்றம்சாட்டப்பட்ட எட்வர்ட் ஸ்னோடன். 2013ஆம் ஆண்டு முதல் ரஷ்யாவில் இருந்துவருகிறார். இவர், சமீபத்தில் இணையத்தளம் ஒன்றில் வெளியிட்டுள்ள கட்டுரையில் ஒசாமா பின்லேடன் சாகவில்லை என்ற பரபரப்பு தகவலை தெரிவித்துள்ளார்.

ஒசாமா எங்கிருக்கிறார் என எனக்கு சரியாக தெரியாது. ஆனால், 2013ஆம் ஆண்டிலிருந்து தனது 5 மனைவிகள் மற்றும் ஏராளமான குழந்தைகளுடன் அமெரிக்க உளவுத்துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறார்.

ஒசாமாவின் உடலையும் யாரிடமும் அவர்கள் காண்பிக்கவில்லை. இவைகளை பயன்படுத்தி தான் ஒசாமாவை தலைமறைவாக்கி உள்ளனர். தாடி இல்லாமல், இராணுவ உடையில் இருப்பதால் அவரை யாரும் இதுவரை அடையாளம் காண முடியவில்லை. போலியான ஆவணங்களை வெளியிட்டதால் அவர் இறந்துவிட்டதாக அனைவரும் நம்பிவிட்டனர்.

ஒசாமா உயிருடன் இருப்பதற்கான பல ஆதாரங்களையும், அமெரிக்கா ஒசாமாவுக்கு உதவி வருவதற்கான ஆதாரங்கள் அடங்கிய புத்தகத்தை இம்மாதம் மாதம் வெளியிட உள்ளதாக தெரிவித்துள்ளார்.

## புதிய நாணயத்தை வெளியிடவுள்ள ஐ.எஸ்.

விரைவில் தங்களுக்கென புதிய நாணயத்தை வெளியிடவுள்ளதாக ஐ.எஸ் தீவிரவாதிகள் அமைப்பு செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த தகவலை அந்த அமைப்பினர் ஒரு வீடியோ செய்தியின் மூலம் வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் வெளியிட்டுள்ள வீடியோவில், தங்களது இந்த செயல் வர்த்தக மைய தாக்குதலை போன்று, அமெரிக்காவுக்கான 2வது பதிலடியாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வெளியான இவர்களது இந்த வீடியோவுக்கு திகலிபாவின் எழுச்சியும் தங்க திணாரின் மறுவருகையும் என்ற தலைப்பிடப்பட்டுள்ளது. மேலும் குறித்த வீடியோவில் தங்கம் உள்ளிட்ட பல நாணயங்களை தயாரிக்கும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

மனித மற்றும் மிருகங்களின் உருவங்கள் இல்லாத தங்களுக்கென்ற தனிவடிவிலான நாணயத்தை ஐ.எஸ் வெளியிடவுள்ளதாக பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# களுதாவளையில் 5000 கிலோ நெத்தலி மீன்

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுதாவளை கடற்கரையில் சுமார் 5000 கிலோவுக்கு மேற்பட்ட நெத்தலி மீன் கரைவலையில் பிடிபட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மீன் அறுவடைமூலம் அதிகளவான இலாபம் கிடைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய மீனினங்களின் அறுவடைக்காக கரை வலை வீசியபோது குறித்த நெத்தலி மீன் இனம் பெருவாரியாக கிடைத்த தாக மீனவர்கள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.



தினமுரசு
த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## ஏமாற்றுகிறதா? ஏமாறுகின்றோமா?

எட்டாவது நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து அமையவிருக்கும் புதிய அரசாங்கத்தை தீர்மானிக்கும் சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இருக்கும் என்று கூட்டமைப்பு கூறிய ஆருடத்தை பெரும்பான்மை கட்சிகள் வெற்றிகரமாக பொய்யாக்கியுள்ளன.

இப்போது கூட்டமைப்பு பேரம்பேசும் சக்தியாகவும் இல்லை. ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாகவும் இல்லை. புதிய அரசில் மீண்டும் ஒரு எதிர்ப்புக் குழுவாக பார்வையாளர்களாகவே இருக்கப்போகின்றார்கள்.

கூட்டமைப்போடு அரசாங்கம் நெருக்கமாக இருக்கவேண்டியதற்கான அவசியம் இப்போது மெல்ல வலிமை இழந்துகொண்டிருக்கின்றது. இறுதி யுத்தத்தில் நடந்த படுகொலைகள், மனித உரிமைகள் தொடர்பான விடயத்தை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் என்ற கோரிக்கைகளுக்கு சர்வதேசம் செவிசாய்ப்பதாக காட்டிக் கொண்டிருந்தபோது, கூட்டமைப்போடு அரசு நெருக்கமாக இருந்தது.

இப்போது உள்ளக விசாரணை ஒன்றை நடத்தப்போவதாக இலங்கை அரசு கூறியிருப்பதை ஆதரித்து சர்வதேசம் எனப்படும் அமெரிக்கா அறிக்கை ஒன்றை வெளியிட்டு இலங்கை அரசுக்கு ஆதரவாக காய்களை நகர்த்தப் போவதாக அறிவித்துள்ள நிலையில் அரசாங்கம் தன்னிச்சையான உற்சாகத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

இந்த நிலையில் சர்வதேசம் எனப்படும் அமெரிக்கா, இலங்கையின் ஆட்சியாளர்களுடன் இணைந்து பணியாற்றத் தொடங்கிவிட்டது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்த்தோ, ஆதரித்தோ எதையும் செய்யமுடியாது. அமெரிக்காவின் இந்த நகர்வுகளை கூட்டமைப்பு விரும்பாவிட்டாலும் அதற்கான எதிர்ப்பை கடுமையாக வெளிப்படுத்தும் திராணியற்றே இருக்கின்றனர்.

அதற்குக் காரணம், இவர்களை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக மதிக்கின்றோம் என்று அமெரிக்கா காட்டிக்கொண்டு கோட்டு சூட்டோடு இவர்களை அழைத்து கைலாகு கொடுப்பதை பெரும் கௌரவமாக கருதுவதால் அதை இழக்க விரும்ப மாட்டார்கள்.

தமிழ் மக்கள் மத்தியில் "நாங்கள் உள்ளக விசாரணையை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை, சர்வதேச விசாரணையையே வலியுறுத்துவோம்" என்றெல்லாம் கூறுவார்கள். ஆனால் தாம் இப்படியெல்லாம் கூறவேண்டியிருக்கும் என்பதை அமெரிக்காவால் புரிந்துகொள்ள முடியாதா? என்று தெரியப்படுத்திவிட்டே இனி வீராவேசம் காட்டுவார்கள்.

சர்வதேச சமூகத்துடன் நல்லுறவு வலுப்பெறும்போது கூட்டமைப்பினரின் அரசாங்கத்துக்கான அழுத்தங்கள் வலிமை இழந்துவிடும். கூட்டமைப்பை நெருக்கமாக வைத்துக்கொள்வதற்கு காணிகளை விடுவிப்பதும், காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதும், அரச தீர்மானங்களில் கூட்டமைப்பையும் அழைத்து நெருக்கமாக அமர்த்துவதும் போதுமானதாக தென் இலங்கை சிந்திக்கும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# தேசிய அரசு எப்படி இருக்கும்?





தேசிய அரசாங்கம் தொடர்பான தெளிவு இன்னும் நாட்டு மக்களுக்கு கிடைக்கவில்லை. ஜனவரி எட்டாம் திகதி ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்ததும் ஏற்படுத்தப்பட்ட நல்லாட்சியைப்போலவே எட்டாவது நாடாளுமன்றமும் தொடரும் என்று கூறப்பட்டது.

ஆனால் நல்லாட்சி என்பதற்கு ஆரம்பத்தில் அதாவது முதல் மூன்று மாதங்களுக்கு நாடாளுமன்றத்தில் அங்கம்வகித்த அனைத்துக் கட்சிகளும் தமது ஆதரவை வழங்கியிருந்தன.

அது ஜனாதிபதியின் நூறு நாட்கள் வேலைத்திட்டமாக அறிவிக்கப்பட்டது. அதை எதிர்ப்பவர்கள் ஜனாதிபதி மைத்திரிபாலவிற்கு ஆணை வழங்கிய பெரும்பான்மை மக்களின் தீர்மானத்திற்கு எதிரானவர்களாக கருதப்படுவார்கள். என்ற அச்சத்திலும் மகிந்த ராஜபக்ச எனும் பெருந்தலையை அசைத்துப் போட்டிருக்கும் அரசியல் மாற்றத்திலும் நூறு நாட்கள் வேலைத்திட்டத்திற்கு விரும்பியோ, விரும்பாமலோ ஆதரவு தெரிவித்திருந்தனர்.

நூறு நாட்களுக்குள் ஜனாதியதியும், தற்காலிக பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்கவும் மக்களுக்கு கொடுத்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்ற முடியாவிட்டாலும் கணிசமானவற்றை நிறைவேற்றியிருக்கின்றன.

ஆகவே ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் இணைந்து நாட்டுக்கு தலைமை கொடுப்பதற்கான ஆணையை மக்கள் மீண்டுமொருமுறை இவர்களுக்கு வழங்கியிருக்கின்றார்கள். ஆனால் இம்முறை நல்லாட்சி என்று அதை எவரும் அழைக்கவில்லை.

மாறாக தேசிய அரசாங்கம் அல்லது ஐக்கிய தேசிய அரசாங்கம் என்று குறிப்பிடுகின்றனர். இந்த அரசாங்கத்தின் பிரதானியாக பிரதமர் ரணில் விக்ரம சிங்கவே முன்னிலைப் படுத்தப்படுகின்றார். ஆனால் மறுபக்கத்தில் ஜனாதிபதி மைத்திரி பாலவும் இந்த அரசாங்கத்தில் தனது பிடியும் சமமானதாக இருக்கவேண்டும் என்பதற்கான காய்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றார்.

ஜனாதிபதியின் முயற்சிகள் இரண்டு பிரதான நோக்கங்களைக் கொண்டதாக பார்க்கப்படலாம். ஒன்று, சுதந்திரக் கட்சியை மீட்பதாக கூறிக்கொண்டு சுதந்திரக் கட்சியை மகிந்த ராஜபக்சவின் ஆளுமைக்குள் இருப்பதைத் தடுத்து அவர்களை எதிர்க்கட்சி வரிசையில் இருக்கவிடாமல் ஆளுங்கட்சியாக அவர்களுக்கு அமைச்சுப் பொறுப்புக்களை வழங்கி வைத்திருப்பதாகும்.

மறுபக்கத்தில் 106 ஆசனங்களைக் கொண்டுள்ள ஐக்கிய தேசிய முன்னணியானது தமிழ்த் தேசியக் கட்சியிடம் வெளியிலிருந்து ஆதரவைப் பெற்றுக்கொண்டு ஆட்சியை அமைக்குமாக இருந்தால் அது முழுக்கவும் பிரதமர் ரணில் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் அரசாகவே இருக்கும்.

அதன் அமைச்சரவையையும், செயற்பாடுகளையும் ஜனாதிபதி என்ற ஒரேயொரு துடுப்பை மாத்திரம் வைத்துக்கொண்டு நீண்ட பயணத்தை செய்யமுடியாது. என்பதால் அமைச்சரவையில் தனது கட்சிக்காரர்கள் சரிபாதி அமைச்சர்களாக இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதை உறுதி செய்துகொள்ளவேண்டும். அமைகின்ற புதிய அரசு தனியே ரணிலுடையதாக இருக்காமல் ஜனாதிபதியின் சம ஆழுமையும் கொண்டிருப்பது அவசியம் என்பதை வெளிப்படுத்துகின்றது.

முப்பது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் அதில் பதினைந்து பேர் ஐக்கிய தேசிய முன்னணியினர் என்றும், மிகுதி பதினைந்துபேர் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்பட்டதிலிருந்தே இருபக்க இழுபறிகள் வெளிப்பட்டன.

ஐக்கிய தேசிய முன்னணியினரும், ஜனாதிபதியால் உள்ளீர்க்கப்படும் சுதந்திரக்கட்சியினரும் சேர்ந்து அமைச்சரவையை பங்கிட்டுக்கொண்டு அமைக்கும் ஆட்சியை தேசிய அரசாங்கம் என்று சிலர் கூறினாலும், தேசிய அரசாங்கம் ஒன்றின் உள்ளடக்கம் தொடர்பான கேள்விகள் இப்போது மேலெழுந்து நிற்கின்றன.

அண்மையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மனோகணேசன், தேசிய அரசாங்கமானது நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கும் அனைத்து கட்சிகளையும் உள்வாங்கி இருக்கவேண்டும். மாறாக ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் சேர்ந்துகொண்டால் அது தேசிய அரசாங்கமாகாது என்பதை தெளிவாக கூறியிருந்தார்.

தேசிய அரசாங்கமானது, பெரும்பான்மை மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் சிங்களக் கட்சிகளையும், முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் முஸ்லிம் கட்சிகளையும், வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்க் கட்சிகளையும், மலையகத் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்க் கட்சிகளையும் உள்வாங்கிய அரசாங்கமாக அமையவேண்டும்.

ஆனால் கட்சிநலன், தமது சுயநலன் என்றவகையில் சிறுபான்மை கட்சிகளுக்குள்ளே உள்குத்துக்களும், காய்வெட்டல்களும், காட்டிக்கொடுப்புக்களும் நல்லாட்சியிலும் நடந்தது. இப்போதும் நடக்கின்றது.

அதாவது அரசுக்குள் தாமே இருக்க வேண்டும் ஏன்பதற்காகவும், தமது அரசியல் எதிராளிகள் அரசுக்குள் உள்வாங்கப்பட்டு அவர்களுக்கு அமைச்சுக்கள் வழங்கப்பட்டுவிடக்கூடாது என்பதையும் வலியுறுத்தியும் வருகின்றனர்.

முன்னர் அமையப்பெற்ற நூறு நாட்கள் வேலைத்திட்டத்தின்போது இதுபோன்ற குத்துவெட்டுக்களுக்கு ஜனாதிபதியும், பிரதமரும் செவி சாய்த்திருந்தபோதும் தற்போதைய புதிய அரசில் இவ்வாறான அழுத்தங்களுக்கு இவர்கள் கட்டுப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே புதிய அரசு எவ்வாறான உள்ளீடுகளைக் கொண்டிருக்கவேண்டும் என்பதை மிகுந்த கவனத்தோடு தீர்மானிப்பதில் அக்கறையாக இருக்கின்றனர்.

ஆகவே தேசிய அரசாங்கம் என்பது முடியுமானவரை ஜனாதிபதியோடும், பிரதமரோடும் இணைந்து பணியாற்ற விருப்பம் கொண்டிருப்பவர்களையும், அரசியலில் ஓரளவுக்கேனும் நிலையான தீர்மானங்களையும் உள்வாங்கியதாக அமையவேண்டியதன் அவசியத்தை உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

ஐக்கிய தேசிய முன்னணியும், சுதந்திரக் கட்சியும் அரசாங்கமொன்றை அமைத்துக்கொள்வதற்கான உடன்படிக்கை ஒன்றை செய்துகொண்டிருக்கின்றனர். இந்த உடன்படிக்கை இரண்டு வருடங்களுக்கே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஏன் உண்மையில் இருதரப்புக்குமிடையே உளப்பூர்வமான இணக்கப்பாடொன்று இருக்குமானால், ஜனாதிபதியாலும், பிரதமராலும் ஏற்படுத்தப்பட்டிருக்குமானால் இந்த உடன்படிக்கையை ஐந்து ஆண்டுகளுக்குச் செய்திருக்கலாமே என்ற கேள்வி மக்களிடத்தில் உள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால நிறைவேற்றிய பத்தொன்பதாவது திருத்தச் சட்டத்தின்படி நாடாளுமன்றத்தில் தேர்தல் ஒன்றின்பின் ஆட்சி அமைக்கப்படுமாக இருந்தால், புறக்காரணங்களால் நாடாளுமன்றத்தை கலைக்கும் காலம் ஜனாதிபதிக்கு முன்னர் ஒரு வருடமாக இருந்ததை பின்னர் இரண்டு வருடமாக பத்தொன்பதாவது திருத்தம் மாற்றிக் கொண்டுள்ளது.

ஆகவே ஏதோ ஒரு காரணத்திற்காக ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைக்கும் காலம் இரண்டு வருடமாக சட்டம் வரையறுத்துள்ளது. அந்தக் காலம்வரை இருதரப்புகளும் ஒப்பந்தத்தைச் செய்துள்ளனர். இதில் ஆச்சரியம் எதுவாக இருக்கும்.

இரண்டு வருடங்கள் கடந்தநிலையில் மீண்டும் இவர்கள் உடன்படிக்கையை புதுப்பித்துக் கொள்வார்களா? என்பதை இப்போதே யூகிக்கமுடியாது. ஆனால் அமையவிருக்கும் எட்டாவது நாடாளுமன்றத்தில் ஒரு கலப்பு அரசசொன்று ஐக்கிய தேசிய முன்னணியின் பாராளுமன்ற பலத்தை கேள்விக்குட்படுத்திக் கொண்டே இருக்கப்போகின்றது.


நண்பர்களாகவும் இல்லாமல், எதிரிகளாகவும் இல்லாமல் இரண்டு வருடங்களுக்கு இருதரப்பு உடன்படிக்கை பல சுவாரஸ்யங்களை மக்களுக்கு கொடுக்கவிருக்கின்றது. இதில் 106 ஆசனங்களைப் பெற்றவர்களும், ஆட்சியில் பங்கெடுக்க உள்வாங்கப்பட்டவர்களுக்கும் சம அதிகாரம் என்பது தர்மசங்கடங்களைக் கொடுப்பது நிச்சயம்.


இந்த சூழலை ஜனாதிபதியும், பிரதமரும் எப்படி சமாளிக்கப்போகின்றார்கள், இரு சாரதிகள் ஒரு விமானத்தை இயக்கும் நிலைதான். காலநிலை சவால்கள், இயற்கை அனர்த்த அச்சங்கள் இந்தப் பயணத்தை பாதியில் தடுத்து நிறுத்தாமல் இருந்தால் நல்லது.



# புதுமைப்பித்தன்

## சிறுகதைகளும்





திரு.பா.பாலகணேசன் M.A
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசியக் கல்வியற் கல்லூரி

பதினெட்டாம் நூற்றாண்டும், அதன்பின் தொடங்கிய குடியரசின் மலர்ச்சி, கல்வியின் பரம்பல், அச்சு இயந்திரங்களின் பெருக்கம், கைத்தொழில் புரட்சி என்பனவும், இலக்கிய உலகிலும் பல புதிய பரிமாணங்களை வெளிப்படுத்தியது. இதன்காரணமாக, ஆக்க இலக்கிய வடிவங்கள் இலக்கிய உலகிலே வெளிவந்தன. அவற்றிலே ஒன்று சிறுகதை. இது இர்விங், அலன்போ போன்றவர்களால் அமெரிக்காவில் முதன்முதலில் தோன்றியது. பின்துர்னோவ், செய்கொவ் முதலியோரால் ருஷ்யாவிலும், மாப்பஸான் ஓஹென்றி, பால்ஸாக், கிப்ளிங், பாக்னர் போன்றோரால் பிரான்சிலும் எழுதப்பட்டது.

இது கைத்தொழில்மயமான நாடுகளில், மக்களின் தேவைக்கு ஏற்றவாறு, குறுகியநேரத்தில் இலக்கிய இன்பத்தைபெறுவதற்கு ஏற்ற வடிவில் அமைந்ததன் காரணமாக, ஐரோப்பாவிலும் ஏனைய மேலைத்தேசங்களிலும் செல்வாக்குப்பெற, அந்நியர் ஆட்சியின் விளைவால் ஏற்பட்ட ஆங்கிலக் கல்வி, ஆங்கில இலக்கியங்களின்பால் கீழைத்தேசத்தவர்களில் கவனத்தை ஈர்த்தது. இதனால் ஆங்கிலம் போன்ற மேலைத்தேச மொழிகளின் புதிய வரவான இலக்கியங்கள், கீழைத்தேச மொழிகளுக்கும் புதிய வரவு ஆயின. அந்த அடிப்படையிலேயே சிறுகதை எனும் வடிவம் தமிழில் புதிய வரவானது.

இந்நிலையில் வ.வே.சுப்பிரமணிய ஐயரின் (1881 - 1925) 'குளத்தங்கரை அரசமர மங்கையர்கரசியின் காதல்' என்கின்ற சிறுகதைத் தொகுப்பு அறிமுகமானது. வ.வே. சுப்பிரமணிய ஐயருக்குப்பின் தமிழ் இலக்கிய கர்த்தாக்களில் முக்கியமானவர்கள் என 1930 தொடக்கம் 1940 வரையான காலப்பரப்பில் எழுதிவந்த மணிக்கொடி எழுத்தாளர்களைக் குறிப்பிடலாம்.

மாதவையா (1872 - 1925) குரு சிகரின் குட்டிக்கதைகள் காந்தியின் சிந்தனைகளால் சமூக அடிப்படைகள் தகர்ந்தன. அரசியல் பொருளாதாரம், சமூகம் அனைத்திலும் புதிய சிந்தனைகள் தோன்றின. சாதி, பெண்ணடிமை, அறியாமை தொடர்பான புதிய சிந்தனைகள் உருவானது. இந்த நிலையில், தமிழ் சிறுகதை வரலாற்றிலும், இது முக்கிய காலப்பகுதி எனலாம். தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்று கூறத்தக்க வகையில் தமிழ்ச் சிறுகதைக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட புதுமைப்பித்தன், இந்தக் காலப் பகுதியில்தான் பல வியக்கத்தக்க சிறு கதைகள் எழுதினார். கு.ப.ராஜகோபாலன், ந.பிச்சைமூர்த்தி, பிரஸ்.இராமையா, சி.சு. செல்லப்பா, மௌனி, கர்சி முதலிய பல சிறந்த சிறுகதை ஆசிரியர்கள் தமிழ்ச் சிறுகதைக்கு ஒப்பற்ற பணியை, இக்காலத்திலே ஆற்றினார்கள். இக்காலத்தில் தோன்றிய மணிக்கொடி பல இலக்கிய கர்த்தாக்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்தது. இது தமிழ் சிறு கதையின் வேரைப் பலப்படுத்தி தமிழ் மண்ணில் ஊன்றச் செய்தது.

இவ்வாறு 'மணிக்கொடி' இல் ஆரம்பித்த சிறுகதை வளர்ச்சிப் போக்கு, சுதந்திரத்துக்குப் பின் அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்களை உள்வாங்கிப் புதிய உத்வேகத்துடன் செல்லவும் ஆரம்பித்தது.

தமிழ்ச் சிறுகதையின் ஒப்பற்ற செல்வமான புதுமைப்பித்தன், சோ.விருத்தாசலம் என்னும் பெயரைக் கொண்டவர். 1906ஆம் ஆண்டு, ஏப்ரல் 25ஆம் திகதி பிறந்தவர். அவரது இறப்பு 1948, ஜூன் 30 ஆகும். பொருளாதார பட்டதாரி. இவரைப் பத்திகை உலகிற்கு கொண்டுவந்தவர் வ.ரா.வ.ராமசாமி. குறைந்த சம்பளம், நிரந்தர வேலை இல்லை. திருமணம், 'தினமணி' வேலை. வறுமை காரணமாக நகையை அடைவுவைத்து வந்து வாழ்க்கை நடத்தியதால் சலிப்பு, வெறுப்பு, நிராசை. இவை கதையிலும் பிரதிபலிப்பு. 42 வருடங்கள் வாழ்ந்த புதுமைப்பித்தன், 1930 களில் தொடங்கி சுதந்திரச் சங்கு, மணிக்கொடி, காந்தி, ஆனந்த விகடன், கலைமகள், நவசக்தி, ஆகிய பத்திரிகைகளில் 97 சிறுகதைகளையும் ஒரு குறுநாவல் ஒன்றையும் எழுதினார்.

1934ஆம் ஆண்டு 04 ஆம் மாதம் 29 ஆம் திகதி, பத்திரிகையில், ஆற்றங்கரைப் பிள்ளையார் எனும் முதல் கதையை எழுதினார். புதிய பரிசீலனைக்கு முகங்கொடுக்கும், அதனை வரவேற்கும் பத்திரிகை என அவரால் விமர்சனம் செய்யப்பட்ட மணி க்கொடி இல் மட்டும், 45 சிறுகதைகளை எழுதினார். 'கிராம ஊழியன்' இல் 13 கதைகளும், 'தின-மணி' இல் உதவி ஆசிரியராக இருந்த போது, மூன்று கதைகளும், 'ரங்கூன் ஜோதியின்' ஐந்து கதைகளும், 'சூறாவளி' இல் இரண்டு கதைகளும், 'கலைமகள்' இல் பதினொன்றும், 'தமிழ் மணி' இல் ஒரு கதையும் எழுதினார். 'நவசக்தி' இல் ஒன்றும், கவிக்குயில் மலரில் ஒன்றும் அடங்கும்.

அவரின் முதல் கதைத் தொகுப்பு, 1940 இல் 'புதுமைப்பித்தன் கதைகள்' என்ற தலைப்பில் நவயுகப் பிரசுராலய வெளியீடாக வந்தது. அதன்பின் 'நாசகாரக் கும்பல்', புதுமைப்பித்தனின் உலகத்துச் சிறுகதைகள், 'கபாடபுரம்', 'காஞ்சனை', 'ஆண்மை', 'புதுமைப் பித்தன் கதைகள்', 'விபரீத ஆசை', 'புதிய ஒளி' எனப் பல தொகுப்புக்கள் வெளிவந்தன.

புதுமைப்பித்தன் - சே.வி.மாத்துரு, கூத்தன், நந்தன், ரசமட்டம் கபாலி, சுக்கிரச்சாரி போன்ற புனைபெயர்களில் - சிறுகதைகளை எழுதியுள்ளார்.

"என் கதையின் கவர்ச்சிக்கு ஓரளவு காரணம் நன் புனைந்துகொண்ட புனைபெயராகும்", என்பது அவரின் கூற்று. "கருத்தின் வேகத்தையே பிரதானமாகக்கொண்டு வார்த்தைகளை வெறும் தொடர்புசாதனமாக மட்டும் கொண்டு, தாவித்தாவிச் செல்லும் நடை ஒன்றை நான் அமைத்தேன். அது நானே எனக்கு வகுத்துக்கொண்ட ஒரு பாதை. அது தமிழ்ப்பண்புக்கு முற்றிலும் புதியது", என 'ஆண்மை' முன்னுரையில் அவரே குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

இவைதவிர புதுமைப்பித்தன் சமூக சமூக விமர்சனத்தையே உயிராகக் கொண்ட ஒரு படைப்பாளி. இவரின் படைப்பை நவீனம் சார்ந்தோ அல்லது நவீனத்துக்கு பிற்பட்ட பார்வை சார்ந்தோ மதிப்பிடலாம். நவீனத்துக்கு பிற்பட்ட பார்வை வலுவானதாக அமைவதாக குறிப்பிடுவோர், அதற்குக் காரணம், "அவர் ஒரு யதார்த்தப் படைப்பாளி. அத்துடன் அவர் பாரதிக்கு ஆரோக்கியமான நேர்மையான விமர்சனத்தை முன்வைத்தார். மேலும், அவர் மரபில் இருந்து வேறுபட்ட யதார்த்தப் பார்வைகளும், வெளியீட்டுப் பாங்கில் சிந்தனை குமிழியும் விமர்சனமும்கொண்டவர். சிறுகதை மர்மங்களை நன்கு அறிந்துகொண்ட அவரின் கதைகளுக்கிடையே திரியும் போது, ஒரு கவியுலகில் திரியும் உணர்வு வரும்", எனக் குறிப்பிடுவார்.

தெ.மு.சி.ரகுநாதன், "அவரின் ஒவ்வொரு கதையும் ஒரு தனி அனுபவ முத்திரை. அவரின் கதைகளில், ஒரு கவியுள்ளத்தின் சோகவாழ்க்கை பேசப்படுகின்றது. அத்துடன் கதைசொல்லும் மேன்மைகளும் சொந்த கற்பனை ஆராய்ச்சியும் புதுமைப்பித்தனுக்கு கைவந்து இருப்பதுபோல, தமிழில் இந்த நூற்றாண்டில் வேறு ஒருவருக்கும் இல்லை என்பது சந்தேகத்துக்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்டுவிட்ட விடயம்." எனக் கூறுவார். க.நா.சுப்பிரமணியம், "அவரது சிறுகதைகளில் மற்றொரு முக்கியம்சம் நூதனமான தெறிப்புக் களும் வீச்சுக்களும் கொண்ட அவர் மொழி, கிண்டல், விமர்சனம், அனாயசமான எழுத்துப் போக்குகள், பொருள் சார்ந்தும், வடிவம் சார்ந்தும் மரபை மீறிச்செல்லும் ஆவேசம், எல்லைக்கோடுகளை அழித்துச்செல்லும் சுதந்திரத்தின் வீச்சுக்கள், சகல மதிப்பீடுகளையும் பாரபட்சமின்றிப் பரிசீலனைக்கு உட்படுத்தல் ஆகிய குணங்களை நெடுகிலும் பார்க்கலாம்", எனக் குறிப்பிடுகின்றார்.

புதுமைப்பித்தனை ஒரு படைப்பாளி யாக்கியது. அவர் வாழ்க்கை அனுபவமும், அனுபமுத்திரைகளை வாசகன் மனதில் இரசனையாக்கும் கலையும் ஆகும். கற்பனைக் கதை களில்கூட, மீண்டும் மீண்டும் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தும் சுயஅனுபவங்கள், வாழ்வியல் அனுபவங்கள் என்பன ஏனைய படைப்பாளிகளில் இருந்து புதுமைப்பித்தனைத் தனிப்படுத்தின. அவை இந்துமதம் மனித சுதந்திரத்தை நெரிக்கும் விதம், ஒடுக்கப்பட்ட மக்கள் படுந்துயரம், கிறிஸ்தவ சம்யப் பிரிவினர் செயற்பாடு சார்ந்த விமர்சனம், எதிர்நீச்சல் போடத் தெரியாத அபலைகள்மீது படியும்கொடுமை, மத்தியதர வாழ்க்கையின் பற்றாக்குறை சார்ந்த இழுபறிகள், பிழைப்பின் சுழற்சி மனி தனை இயந்திரமாக்கும் கீழ்நிலை, வறுமையின் கொடிய சோகங்கள், நினைப்புக்கும் நிஜத்துக்கும் உள்ள வேறுபாடு, மனதை மீறும் உடல் ஆன்மீகத்தை ஏமாற்றும் லௌகீகம், புனிதர்களின் ஒப்பனை கலையும் விதம், இன்றைய தாழ்வுகளை பாராது, பழம் பெருமைகளில் வாழ்தல், தர்மத்துக்குப்பின்னால் இருக்கும் பச்சை அதர்மங்கள் என்பனவாகும். இத்தகைய முரண்பாடுகள், பெருமளவில் வாழ்வில் ஊடுருவி நிற்கும் நிதர்சனத்தை, இரண்டாயிரம் வருட தமிழ் மரபிற்கு எதிராக, இலக்கிய ஆர்வத்தைத் தூண்டக்கூடிய வகையில் அவரது சிறுகதைகளில், நாடகப்பாங்கில் அமைத்தது குறிப்பிடத்தக்கது.

தமிழ் வாழ்வின் வெவ்வேறு கோலங்களைக் காட்டி அதன் முழுப் பரப்பையும் தன்அனுபவத்துக்குள் அடக்கிவிட்டதன்மூலம், படைப்பாகப் பரிணமிக்கச் செய்து, வாசகனுக்கு வாழ்க்கையில் பிடிப்பை அளிப்பதாக அமைவது, அவரின் மற்றொரு சிறப்பம்சம். அவரது கதையின் களங்கள் காஞ்சி, திண்டிவனம், திருநெல்வேலி, சென்னை, பூனா, நெல்லை ஆக அமைந்தது. நெல்லைப் பேச்சுமொழிச் சொற்கள் அவரது சிறுகதையில் உள்ளன. பண்டைத்தமிழ் சொற்களும் சமஸ்கிருதமும் விரவிவருகின்றன. எழுத்து, பேச்சு ஆகிய இரண்டு திறன்களிலும் பாதிப்பை ஏற்படுத்தியவர்.

(தொடரும்...)

# நிலமெல்லாம் இரத்தம்

168

பா.ராகவன்

கணக்கு வழக்கு விவகாரங்களில் வெளிப்படையான அணுகுமுறை இல்லை என்றெல்லாம் குறை சொன்னார்கள். அவர் ஒரு சர்வாதிகாரிபோல் நடந்துகொள்கிறார் என்றும் சொன்னார்கள். ஆனால் யாராலும் எதையும் ஆணித்தரமாக நிரூபிக்கமுடியவில்லை என்பதை கவனிக்கவேண்டும்.

ஆனால் இவற்றால் மட்டுமே அரபாத் செய்தது முழு நியாயம் என்றும் ஆகிவிடாது. பல இலட்சக் கணக்கான பலஸ்தீனிய அரேபியர் பி.எல்.ஓ., இஸ்ரேலின் இந்தத் திட்டத்துக்கு ஒப்புக்கொண்டு செயற்பட ஆரம்பித்துவிட்டதும், பலஸ்தீனியர்களின் சுதந்திர தாகத்தைத் தணிக்கக்கூடிய இயக்கம் என்று வேறு எதுவுமே இல்லாமல் ஆகிவிட்டது. ஹமாஸைத் தீவிரவாத இயக்கம் என்று முத்திரை குத்திவிட்டார்கள். அவர்கள் குண்டுவைக்கலாமே தவிர, இஸ்ரேலுக்கு எதிராக ஒரு முழு யுத்தம் நடத்தமுடியுமா என்பது சந்தேகமே. அப்படியே நடத்தினாலும் எந்த தேசமும்



கள் 1948 யுத்தத்தைத் தொடர்ந்து, அகதிகளாக சிரியாவுக்கும் ஜோர்டனுக்கும் எகிப்துக்கும் இன்னபிற தேசங்களுக்கும் போய் வசிக்க வேண்டிவந்தது நினைவிருக்கும். அவர்களுக்கெல்லாம் இருந்த ஒரே நம்பிக்கை, என்றைக்காவது இழந்த தாயகம் மீண்டும் கிடைக்கும். அப்போது இழந்த வாழ்க்கையைத் திரும்பப் பெறலாம் என்பதுதான்.

ஒஸ்லோ ஒப்பந்தத்தின்படி அரபாத் நடந்துகொள்ளத் தொடங்கியதன் விளைவு என்னவெனில், அவர்களின் கனவு தகர்ந்துபோனது. இஸ்ரேல்தான் அதிகாரமுள்ள தேசம். பலஸ்தீன் அத்தாரிடி என்பது, இஸ்ரேலின் மேலாண்மைக்குக் கட்டுப்பட்ட ஓர் உள்ளாட்சி அமைப்பு. தனியாட்சி அதிகாரம் என்று சொல்லப்பட்டாலும், எந்தக் கணத்திலும் இஸ்ரேல் அதை ரத்துசெய்யும் தகுதியைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டிருக்கிறது.

மேலும் பலஸ்தீனியர்களின் ஒரே நம்பிக்கை நட்சத்திரமான உதவிக்கு வராது. ஒரு தீவிரவாத இயக்கத்துக்கு யார் உதவி செய்ய வருவார்கள்?

ஆக, நோக்கம் எத்தனை உயர்வானதாகவே இருந்தாலும், அரபாத் இஸ்ரேலின் வலையில் விழுந்தது உண்மை என்றாகி விட்டது. இஸ்ரேலை அவர் அங்கீகரிக்கவும் செய்துவிட்டார். இதற்குமேல் எந்த முகத்தை வைத்துக்கொண்டு இண்டி∴பதாவைத் தொடருவது?

இன்னொரு விஷயத்தையும் சொல்லவேண்டும். இண்டி∴பதா உக்கிரமாக நடைபெற்றுவந்த காலத்தில் மொத்தம் சுமார் பதினான்காயிரம் அரேபியர்களை இஸ்ரேலியக் காவல்துறை சிறைப்பிடித்து அடைத்துவைத்திருந்தது. ஒஸ்லோ ஒப்பந்தப்படி அரேபியர்களின் தன்னாட்சி உரிமையை அவர்கள் அங்கீகரிப்பது உண்மையென்றால், நல்லுறவின் அடையாளமாக முதலில் அவர்களை விடுவிப்பது குறித்தல்லவா பேசியிருக்கவேண்டும்?

**(தொடரும்)**

அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P)
யாழ்ப்பாணம்

18



# விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா

**தென்னாபிரிக்காவின் தேசத் தந்தையாக மட்டுமல்லாமல், உலக மக்களின் உள்ளங்கவர் கள்வராகவும் வாழ்ந்து விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை அந்த மக்களுக்கு பெற்றுக்கொடுத்த விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா அவர்களின் வாழ்க்கைப் பாதையை மீண்டுமொரு தடவை புதிய சிந்தனையுடன் மீட்டுப்பார்ப்பது பொருத்தம் என்ற அனேக வாசகர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப புதிய பகுதி தொடங்கப்படுகின்றது. வாசிப்பதோடு மட்டுமல்லாமல் வாசகர்கள் தமது அபிப்பிராயங்களையும் முரசுக்கு அனுப்புங்கள். அதையும் இதே பகுதியில் பிரசுரித்து அனைவரும் மகிழ்ச்சியடைவோம்.**

ஜோங்கிந்தாபா நிச்சயித்த திருமணம் மண்டேலாவுக்கும் ஜஸ்டிஸ"க்கும் அறவே பிடிக்கவில்லை. இதை மண்டேலாவும் ஜஸ்டிஸ"ம் எதிர்பார்க்கவில்லை. இந்தத் திடீர் முடிவு அவர்களுக்கு கொஞ்சமும் விருப்பமில்லாமல் இருந்தது. தந்தையே ஏன் இப்போது திருமணத்திற்கு அவசரம்? இப்போது வேண்டாம். பின்னாட்களில் அதைப் பற்றி யோசிப்போமே என்று மண்டேலா கூறியவுடன் ஜோங்கிந்தாபா இருவரையும் பார்த்து முறைத்துவிட்டு நான் சொன்னால் சொன்னதுதான். என் முடிவில் மாற்றம் எதுவுமில்லை. பெண்வீட்டார்களுக்கு வாக்கு கொடுத்துவிட்டேன். எல்லாம் முடிவாகிவிட்டது. உங்கள் இருவருக்கும் லொபாலா" (வரதட்சணை) கொடுத்து விட்டேன். என்று தன் முடிவை ஆணித்தரமாக சொல்லி விட்டு சென்றார். (மணமகனின் தந்தை மணமகளுக்கு வரதட்சணையாக குறிப்பிட்ட கால்நடைகளை கொடுப்பது தெம்பு இன மக்களின் வழக்கமாக இருந்தது.)

ஜோங்கிந்தாபாவின் முடிவை இருவராலும் கொஞ்சங்கூட ஏற்றுக் கொள்ளமுடியாதிருந்தது. தலையை தொங்கவிட்டபடி இருவரும் திரும்பி விட்டார்கள். மண்டேலா என்ன செய்வது ஏது செய்வது என்று தடுமாறினான். நேரடியாக ஜோங்கிந்தாபாவின் முடிவை எதிர்த்து போராடமுடியாமல் திண்டாடினான். தன்னை வளர்த்து ஆளாக்கிய தந்தையை எதிர்க்க முடியாமலும் அவரெடுத்த முடிவை ஏற்றுக்கொள்ள முடியாமலும் மனதிற்குள்ளே புழுங்கினான். அனலில் விழுந்த புழுவாய்த் துடித்தான். என்னை வளர்த்து ஆளாக்கியது அவர்தான். அதற்காக என் விருப்பமில்லாமலே அவர் பெண்ணை தேர்ந்தெடுப்பது சரியா? என்னை கலந்தாலோசிக்காமல் இந்த விடயத்தில் அவர் முடிவெடுப்பது எப்படி நியாயம்? நான் திருமணம் முடிக்கப்போகும் பெண்ணை நான் தானே தேர்ந்தெடுக்கவேண்டும். அதற்குக் கூட எனக்கு உரிமை. இல்லையா? என்று ஜஸ்டிஸிடம் தன் மனவருத்தங்களை கொட்டித் தீர்த்தான்.

ஜஸ்டிஸின் நிலைமையும் அவ்வாறு தான் இருந்தது. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் ஜோங்கிந்தாபா மண்டேலாவுக்கு பார்த்திருக்கும் பெண் ஜஸ்டிஸின் காதலி. ஜஸ்டிஸ"ம் அந்த பெண்ணும்



ஒருவரையொருவர் மனப்பூர்வ மாகக் காதலித்துக் கொண்டிருப்பவர்கள். இந்த விடயம் மண்டேலாவுக்கு ஏற்கனவே தெரியும். ஆனால் ஜோங்கிந்தாபாவுக்கு இவர்களது காதல் பற்றி எதுவுமே தெரியாது. **(தொடரும்)**



# நலிவுற்றோருக்கான குரல் ஓய்ந்து போனது!

ஒப்பற்ற ஆளுமைத்திறன் கொண்டவரும் சமுதாயத்தின் நலிவடைந்தோருக்கான மற்றொரு மாற்று விழிப்புக் குரலாகத் திகழ்ந்தவருமான அம்மணி சாந்தி அனுஷா சச்சிதானந்தம் ஓய்ந்துவிட்டார்.

அவரது பெயருக்கு ஏற்றாற் போலவே அமைதிக்குப் பெயர்தான் "சாந்தி" என்று அவர் வாழ்ந்தும் காட்டினார். அல்லல்படும் மக்களும் இந்த நாடும் அமைதிப் பூங்காவாகத் திகழவேண்டும் என்று அயராது கனவு கண்டுகொண்டிருந்த அந்த சாந்தி இப்பொழுது சாந்தியடைந்துவிட்டார்.

தலைசிறந்த ஆங்கில மற்றும் தமிழ்ப் புலமை, தலைமைத்துவப் பண்புகள், இனத்துவேஷமில்லாத குணநலன்கள், பல்வேறுபட்ட ஆளுமைத் திறன்கள், இவை எல்லாவற்றையும்விட எளிமையப் பண்புகள் நிறைந்த சாந்தி மிஸ் என்றழைக்கப்படும் சாந்தி அனுஷா சச்சிதானந்தம் கடந்த வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் நீண்டகாலமாக புற்றுநோயினால் சுகயீனமடைந்திருந்த நிலையிலும், சமூகப் பணிகளிலேயே தொடர்ந்தும் ஆர்வம் காட்டிவந்தார்.

"விழுது" ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஸ்தாபகராகவும், அதன் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் பதவிவகித்த அவர், ஐக்கிய நாடுகள் சபையிலும் ஆரம்ப காலங்களில் பணியாற்றியிருந்தார்.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சாந்தி சச்சிதானந்தம், மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பட்டதாரியாக விளங்கியபோதிலும், அந்தத் துறையில் ஈடுபடாது, சமூகப் பணிகளிலேயே கூடுதலாக ஆர்வம் காட்டிவந்தார்.

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும், அவர் ஆக்கங்களை எழுதியிருந்தார். மட்டக்களப்பிலுள்ள மன்று என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் ஸ்தாபகராக விளங்கிய அவர், கிழக்கு மாகாணத்திலும் பல சமூக அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டார்.

அவர் தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும் அவரது சமூகப் பணிகள் தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்கள் மத்தியிலும் வியாபித்திருந்தன.

வடக்கு, கிழக்கு என்றில்லாது தென் பகுதியையும் அவரது சமூக சேவைகள் சென்றடைந்துள்ளன.

விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்தில் மிகத் தீவிரமாக ஒரு மனிதாபிமானச் செயற்பாட்டாளராக ஈடுபட்ட இவர், அவ்வப்போது மாறிமாறி வந்த பேரினவாத அரசாங்கங்களின் நடவடிக்கைகளை விமர்சித்து பல ஆக்கங்களையும் எழுதியிருந்தார்.

"கூடம்" எனும் சமூக அறிவியல் சஞ்சிகை, "அகவிழி" எனும் ஆசிரியர்களுக்கான சஞ்சிகை, "இருக்கிறம்" எனும் சமூக சஞ்சிகை உட்பட இன்னும் பலதரப்பட்ட நூல்கள், வெளியீடுகள்

**ஏ.எச்.ஏ. ஹுஸைன்**

வெளிவரக் காரணமாக இருந்தவர் மறைந்த சாந்தி அவர்கள்.

எழுத்துறையில் மிகுந்த ஈடுபாடுள்ள அவர், இருக்கிறம் சஞ்சிகையில் "மிஸ்டர் க்ரோ" என்ற அரசியல் கட்டுரையையும், வாழ்வியல் கோலங்களுடனான பண்பினை எடுத்துக்கூறும் "தத்துவ விசாரம்" என்ற பத்தியினையும் எழுதிவந்தார். இதற்கு வாசகர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பும் காணப்பட்டது.

அத்துடன் அவர் "தலைவி" மற்றும் "உரிமைக்குரல்" என்ற பத்திரிகைகளையும் வெளியிட்டு வந்தார். கிழக்கு மாகாணத்திலிருந்து முதலாவது தினசரியாக வெளிவந்த "தினக்கதிர்" பத்திரிகையையும் அவரே துவக்கி வைத்தார்.

பெண்கள் அரசியலில் நுழைய வேண்டும் என்பதற்காக அவர் அரும்பாடுபட்டார். அதன் ஒரு அங்கமாக "செங்கோல் தூக்க விளைந்தோம்" என்ற புத்தகத்தினையும் வெளியிட்டார்.

பெண்கள் மத்தியஸ்தர்களாகவும் சமாதான நீதிவான்களாகவும் இருக்க வேண்டும் என்று அவர் எடுத்த முயற்சிகள் வெற்றியளித்துள்ளன.

கல்வி வெளியீடுகளில் ஆர்வம் கொண்ட சாந்தி சச்சிதானந்தம் "அக[illegible]" என்ற ஆசிரியர்களுக்கான [illegible]ாட்டி சஞ்சிகையையும், பாஸல - கல்லூரி என்ற மாணவர்களுக்கான விழிப்புணர்வு சஞ்சிகையினையும் வெளியிட்டு வந்தார்.

அத்துடன் இளம் தலைமுறையினரின் நலன்கருதி ஆறு மாத ஊடகத்துறைப் பயிற்சியினையும் இலவசமாக வழங்கி வந்தார்.

விழுது உட்பட பல சமூக நலன் அமைப்புக்களை அவர் உருவாக்கினார்.

சாந்தி தனது கருத்துக்களை துணிவுடன் தெரிவிக்கும் ஆழுமைகொண்டவர். பல பெண்நலன் சார்ந்த அமைப்புக்களை நிறுவி போர்க்காலத்திலும் அதன் பின்னரும் பணியாற்றியவர்.

கிழக்கு மாகாண போர்க் களத்தில் பெண்களுக்கு ஏற்பட்ட எல்லா சவால்கள், கொடுமைகள், அச்சுறுத்தல்களுக்கும் அவர் முகம் கொடுத்தார்.

போரால் நலிவுற்ற மக்களுக்குப் பணியாற்றும் அவரது நெஞ்சுறுதியை அச்சுறுத்தல்களால் தளர வைக்க முடியவில்லை.

கிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அவர் ஆற்றிய மனித உரிமை மற்றும் புனர்வாழ்வு புனர் நிர்மாணப்பணிகள் நினைவூட்டப்படக் கூடியவை.

அரசியல் விமர்சகரும், சமூகவியல் ஆய்வாளரும், பெண்ணியல்வாதியுமான சாந்தி சச்சிதானந்தம் சமகால அரசியல் நிலைமைகளையும் நாளேடுகளில் விமர்சித்து வந்தார்.

சாந்தி அவர்கள், மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் பல நெருக்குதல்களை சந்தித்ததோடு அவரது அலுவலகம் உடைக்கப்பட்டு பரிசோதனைக்கும் உள்ளாகியிருந்தது.

சாந்தி சச்சிதானந்தின் இறுதிக் கிரியை கடந்த ஞாயிறன்று கொழும்பு கனத்தை மயானத்தில் இடம்பெற்றது.

இறுதியஞ்சலி நிகழ்வில் முன்னாள் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, றவூப் ஹக்கீம், வாசுதேவ நாணயக்கார, மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா உள்ளிட்டோரும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் பலரும் தமிழ், முஸ்லிம் சிங்களப் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.



சாந்தி அவர்களின் மரணத்தையிட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் அனுப்பிவைத்திருந்த அனுதாபச் செய்தி இறுதி நிகழ்வில் வாசிக்கப்பட்டது, அதில், ஜனாதிபதியவர்கள் சாந்தியின் சமூக சேவைகளைப் பாராட்டியிருந்தார். அச்செய்தியில் ஜனாதிபதியவர்கள் மேலும் குறிப்பிட்டிருந்ததாவது,

"மனித உரிமை ஆர்வலரும் பெண்ணிலைவாதியுமான சாந்தி சச்சிதானந்தம் அவர்களின் மறைவுச் செய்திகேட்டு மிகுந்த துயருற்றிருக்கின்றேன்.

சாந்தி சச்சிதானந்தம் அவர்கள் சிறு பராயம் முதல் தான் சமூகத்தில் அவதானித்துவந்த சமூக அநீதிகள், ஆண், பெண் ஏற்றத்தாழ்வுகளுக்கெதிராக தனது அறிவையும் நிறுவன சக்தியையும் பயன்படுத்தத் தீர்மானித்தார்.

கட்டடக் கலைஞராக அவர் இருந்த போதிலும் சமூகசேவைப் பணிகளிலேயே மரணிக்கும்வரை ஈடுபட்டார்.

தனது தலைமையின்கீழ் "விழுது" எனும் மனிதவள ஆற்றல் மேம்பாட்டு மையத்தை அமைத்து யுத்தம் காரணமாக விதவைகளான வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பெண்களுக்காகவும் வன்முறைகளுக்கு இலக்கான பெண்கள் பிள்ளைகளுக்காகவும் சாந்தி சச்சிதானந்தம் செய்த பணிகள் இன எல்லைகளைக் கடந்ததாகும்.

நிருவாகக் கட்டமைப்புக்கள் சரியான ஜனநாயக வழிக்கு வரவேண்டுமானால் பெண் பிரதிநித்துவம் உரிய விகிதாசாரத்தில் பேணப்படவேண்டும் என்பதை மிக உறுதியாக நம்பிய சாந்தி சச்சிதானந்தம் அவர்கள் அந்த நோக்கத்தை அடைவதற்காக மரணிக்கும் வரை செயலுறுதியுடன் பணியாற்றினார்.

சமூக மேம்பாட்டிற்காக சாந்தி சச்சிதானந்தம் அவர்கள் செய்த பங்களிப்புக்களை நான் பாராட்டுகின்றேன். சாந்தி சச்சிதானதத்தின் மறைவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கும் அவருக்குத் தோளோடு தோள் நின்று பணியாற்றிய சகலருக்கும் எனது துயரத்தைப் பகிர்ந்துகொள்கின்றேன்." என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

1958ஆம் ஆண்டு பிறந்த சாந்தி சச்சிதானந்தத்திற்கு 2 பெண் பிள்ளைகளும், ஒரு ஆண் மகனும் உள்ளனர். இவரது கணவர் மனோராஜசிங்கம் 2009ஆம் ஆண்டு காலமாகியிருந்தார்.

சாந்தி அவர்கள் எல்லோருடனும் மிகவும் அன்பாகப் பழகினார். அநேகரின் வளர்ச்சியில் அவர் முக்கிய பங்கு வகித்துள்ளார். அவர்களில் பலர் அமரர் சாந்தியின் வழியில் நலிவுற்ற மக்களுக்கு வழிகாட்டுவதுதான் நம்மை விட்டுப் பிரிந்த சாந்திக்குச் செய்யும் நன்றிக்கடனாக இருக்கும்.



# மக்கள் தீர்ப்பும் தலைமைகளும்

தேர்தல் திருவிழா முடிவுக்கு வந்துள்ளது. ஜனவரி 8ஆம் நாள் ஏற்பட்ட மாற்றம் மீண்டும் நடைமுறைக்கு வந்துள்ளது. ஒருவர் மீது ஒருவாரமாக சேறுவாரிப் பூசி பொய்யினையும், புரட்டினையும் சொல்லி எப்படியோ பதவிகளைப் பிடித்து விட்டனர். இடையிலே சூறாவளிவீசி கடும் புயலடித்து இடியுடன்கூடிய மழை கொட்டாதுவிட்டால் இன்னும் ஒரு ஐந்தாண்டுகளுக்கு இவர்களே பதவிகளில் இருக்கப்போகின்றனர்.

இம்முறை நடைபெற்ற பாராளுன்றத் தேர்தலிலே பல புதுமுகங்கள் தெரிவாகியுள்ளனர். பல பழைய முகங்கள் தோற்றுப் போயுள்ளனர்.

இருந்தும் மக்களின் இந்தத் தீர்ப்புக்கு மதிப்பளித்தே ஆகவேண்டிய கட்டாயம், தோற்றுப்போனவர்களுக்கு இருக்கவேண்டும். அரசியலுக்குள் நுழைவதற்கு கோடி கோடியாக கொட்டிச் செலவழித்தவர்கள் தோல்வியிலே இருக்கின்றனர். வெற்றியடைந்தவர்களும் ஆயிரம், இரண்டாயிரம் செலவளிக்கவில்லை. மாறாக கோடி கோடியாக கொட்டியுள்ளனர்.

இவ்வாறெல்லாம் கோடிகளைக் கொட்டி செலவுசெய்து மக்கள் பிரதிநிதிகளாகிவிட்டனர். மக்கள்வழங்கிய தீர்ப்பே இவர்களைச் சிம்மாசனம் ஏற வைத்துள்ளது என்பதனை எத்தனை அரசியல்வாதிகள் புரிந்துவைத்துள்ளனர் என்ற கேள்வியினைக் கேட்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

ஏனெனில், தேர்தல் காலங்களிலே ஒவ்வொரு அரசியல்வாதிகளும் என்ன செய்ய சொன்னார்கள், பேசினார்கள் வாக்குறுதி வழங்கினார்கள் என்பதெல்லாம் சிந்திக்கவேண்டிய காலகட்டமிது, சொன்னவற்றை செய்வார்களா?? அல்லது செய்ய எண்ணுவார்களா?? என்று கேட்டால் பெரியதொரு பூச்சியமே பதிலாக வரும்.

தேர்தல் முடிவடைந்த மறுகணமே உட்கட்சி மோதல்கள், பதவிக்கான போட்டிகள் என்பன நடந்தேற ஆரம்பித்து விட்டன. நான் இவ்வாறு கூறுவது தேசியக் கட்சிகளையும், இனம்சார்ந்த வெற்றிபெற்ற கட்சிகளையுமாகும். உதாரணத்துக்கு தமிழர் தாயகப் பிரதேசங்களிலே வெற்றிபெற்ற தமிழ் கட்சிகள், முஸ்லிம் கட்சிகள், தேசியக் கட்சிகளான பெரும்பான்மை இனக் கட்சிகள் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

ஆனாலும் என்னுடைய கட்டுரைகள் குறிப்பிட்ட தமிழ்க் கட்சி ஒன்றை குறைகூறுவதாக உள்ளதாக சிலர் என்னிடம் சுட்டிக்காட்டுகின்றனர். நான் ஒருபோதும் யாரையும் குறைகூற வேண்டும். குற்றம்சாட்டவேண்டும் என்று விரும்புவதில்லை. தவறுகள் எங்கு நடந்தாலும் அதனைச் சுட்டிக்காட்ட வேண்டியது ஒரு பத்திரிகையாளனுக்கு, கட்டுரையாளனுக்கு இருக்கவேண்டிய பண்புகளாகும். அந்தவகையிலேயே என் கட்டுரைகள் எழுத்துருவம் பெறுகின்றன. இருந்தும் இக்கட்டுரை வாயிலாகவும் குறித்த தமிழ்க் கட்சியின் தில்லுமுல்லுகளையும், அவர்கள் மக்களை ஏமாற்றும் செயல்களையும் எழுதப்போகின்றேன்.

எனவே இவற்றினைப் படித்துவிட்ட பின்னர் நான் குற்றவாளியா?, இல்லையா? என்பதனை நீங்களே புரிந்துகொள்வீர்கள். சரி நான் எடுத்துக் கொண்ட கட்டுரையின் விடயத்துக்குள் நுழைகின்றேன்.

மக்கள் இந்தப் பாராளுமன்றத் தேர்தலிலே வழங்கிய தீர்ப்பின் சூடுகூட ஆறவில்லை. அரசியல்வாதிகள் பதவிகளுக்காக குடும்பிச்சண்டையிலே ஈடுபட்டுவருகின்றனர். தேசியப் பட்டியலில் இடம்பிடிக்க படும்பாடு சொல்லிமாளாது. இத்தகைய காட்சிகள் வடக்குக் கிழக்கிலே மட்டுமன்றி இலங்கைத் தீவு முழுக்க நடைபெற்றுவருகின்றது.

தேர்தல் காலங்களிலே பச்சையும் நீலமும் தெற்கிலே கடும் போட்டி போட்டது. ஒருவர்மீது ஒருவராக குற்றச்சாட்டுக்களை அடுக்கினார்கள். அடிபிடி, சண்டை, கொலைகள் வரை முன்னேறியது. இவைகளுக்கு மத்தியிலேயே மக்கள் புள்ளடியிட்டு வழங்கிய தீர்ப்புக்கு எதிர்மாறான விளைவுகளே தெற்கிலே அரங்கேறி வருகின்றன. பச்சையும் நீலமும் கடும் போட்டிக்குள் சிக்கியபோதிலும் பச்சை சொற்ப வித்தியாசத்திலே வெற்றியீட்டியது. இந்த அற்பவெற்றினை வைத்துக்கொண்டு ஆட்சிப்பீடமேற முடியாத துயர் பச்சை அணியினருக்கு உண்டானது.

அரசியலில் எதிரியும் இல்லை. நண்பனும் இல்லை என்பார்கள். அதற்கு இணங்க தோல்வியின் விளிம்பிலே உள்ள நீலஅணியினர் மகிந்த புகழ்பாடியவர்கள் உடனேயே தமது அரசியல் புத்தியை காட்டத் தொடங்கிவிட்டனர். பச்சையும் நீலமும் இணைந்து ஆட்சி அமைக்க முற்பட்டனர். கோபம், மற்றும் தூற்றியவைகளையெல்லாம் மறந்து பதவிகளுக்காக பச்சையிடம் சரணாகதி அடைந்துள்ளனர்.

நான் இக்கட்டுரையினை எழுதிக் கொண்டிருக்கும் இறுதிநேரம் வரைகூட தெற்கிலே பச்சை - நீலக்காரர்களுக்கு இடையிலே இணக்கப்பாடு உண்டாகவில்லை.

இன்று, நாளை என்று நாட்கள்

**• அளவெட்டி ப. உதயகுமார் •**

நகர்ந்துகொண்டிருக்கின்றன. தேர்தல் வேளையிலே நஞ்சுடைய மருந்துப் போத்தல்களுடன் கூட்டம் நடத்தியவர்களும், நீ வேண்டாம் என்று தூற்றியவர்களும் ஒரே குடையின்கீழ் ஒன்று கூடியுள்ளனர். இது மக்கள் வழங்கிய தீர்ப்புக்கு ஆணைக்கு மதிப்பளிக்காமல் பதவி, பட்டங்களுக்காக மதிப்பளிக்கும் செயலாகும்.

நிலைமை இவ்வாறிருக்கும்போது ஒரு காலத்திலே நூறு நூற்றி பத்து அமைச்சர்களை உருவாக்கி நாட்டினை ஆட்சிசெய்த மகிந்தவை பார்த்து தூற்றியவர்கள் வேறு யாருமில்லை. பச்சை அணியினரே - அதிகூடிய அமைச்சரவை என்றும் நாட்டின் வருமானமெல்லாம் அமைச்சுக்களின் செலவுகளுக்குள் முடங்கிப் போவதாக சொன்னார்கள். தாம் ஆட்சி அமைத்தால் அமைச்சர்களின் எண்ணிக்கையை முப்பதுக்குள் முடக்கிவிடுவோம் என்றவர்கள், இப்போது முப்பதையும் மிஞ்சி மெகா அமைச்சரவையை உருவாக்கப் போகின்றார்கள். இவையும் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியினை மீறும் செயலாகும்.

நல்லிணக்க அரசு, நல்லாட்சி அரசு என்றெல்லாம் சொல்லி வாக்குக்கேட்டனர். இந்த நல்லாட்சி, நல்லிணக்கத்துக்கும் களங்கம் உண்டாகக்கூடிய வகையிலே அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் நடந்தேறிவருவது வேதனைக்குரிய ஒன்றே. பட்டம், பதவி, சுகபோக வாழ்க்கை வேண்டும் என்பதற்காக மக்கள் வழங்கிய தீர்ப்பினை அடமானம் வைக்காமல் செல்பவர்களே உண்மையான அரசியல்வாதிகளாக இருக்கமுடியும்.

தேர்தல் என்று அறிவிப்பு வெளியாகி விட்டால்போதும் நான், அது செய்வேன், இது செய்வேன் அரச ஊழியர்களுக்கு ஒருவர் 25 தருவேன் என்றார். இதற்கு போட்டியாக மற்றவர் 31 தருவேன் என்றார். இவை எல்லாம் வெறும் வார்த்தை ஜாலங்கள் மட்டும்தானா?? இவைகளை நிறைவேற்றப் பணம் எங்கிருந்து வந்தது. அல்லது வரும் என்பதனை அரசியல்வாதிகள் மறந்து விடுகின்றனர். பின் வெற்றியடைந்த பின்பு, வெற்றிக்களிப்பிலே இவற்றினையெல்லாம் மறந்துவிடுவார்கள். இதுதான் இலங்கையிலுள்ள அரசியல்வாதிகளின் நிலைப்பாடாக உள்ளது.

இவ்வாறான நிலைமைகள் பெரும்பான்மைக் கட்சிக்கு மட்டுமில்லை. தமிழ், முஸ்லிம், மலையகக் கட்சிகளுக்கும் பொருந்தக்கூடியதாகவே உள்ளன. பதவியினைப் பிடித்துவிடவேண்டும் என்பதற்காக கோடி, கோடியாக செலவு செய்யும் பணம் எங்கிருந்து வந்தது? என்பது பாவம் பலருக்கு தெரிவதில்லை.

தேர்தல் முடியும்போது எல்லாமே முடிந்துவிடும். பத்து முதல் போட்டால் இருபதை எடுக்கலாம் என்பது அரசியல்வாதிகளின் நிலைப்பாடாகும். நிலைமை இவ்விதம் இருக்கும் போது தமிழ் மக்களின் வாக்கிலே வெற்றியடைந்த ஒரு தமிழ் கட்சியினரின் நிலைப்பாடுகளையும் தெளிவுபடுத்த வேண்டிய தேவை இக்கட்டுரைக்கு உள்ளது.

இந்தத் தமிழ் அணியினர் தேர்தல் காலங்களிலே நடந்துகொண்டமுறைக்கும், தேர்தல் முடிந்து வெற்றியடைந்த பின்பு நடந்துகொள்ளும் முறைகளிலும் கடும் மாற்றம் தென்படுகின்றது.

பேரம்பேசும் சக்திக்காக இருபது ஆசனத்தை தாருங்கள் என்றனர். தேர்தலுக்கு முதல் நாள் இந்த தமிழ் அணியின் தலைவர் சொன்னார், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைத்தால் நாம் எந்தவித நிபந்தனையும் இல்லாமல் ஆதரவு வழங்குவோம் என்று அறிக்கை விட்டார். எவ்வித நிபந்தனையுமின்றி ஆதரவு என்றால் யாருடன் பேரம் பேசுவது! ஆட்சி அமைக்கும் அரசுடன் தான் தமிழர் பிரச்சினைக்கு பேரம் பேசுவோம். வாக்குப் போடுங்கள் என்றனர்.

இப்போது பேரம்பேசவே முடியாது. நாங்கள் உங்களுக்கு வெளியே இருந்து ஆதரவு வழங்குவோம் என்று வெளியே உள்ளனர். வாக்குக் கேட்ட போது வெளியே இருப்போம் என்பதனை மக்களுக்கு ஏன் சொல்லவில்லை.

இதேவேளை போர்க்குற்ற விசாரணை சர்வதேச மட்டம்வரை செல்லும். சர்வதேச விசாரணை ஒன்றின்மூலமே தீர்வு கிடைக்கும் என்று சொன்னவர்கள் சர்வதேச விசாரணையை வலியுறுத்துவோம் என்று வாக்குக் கேட்டனர்.

இப்போது சர்வதேசம் என்பது மாற்றப்பட்டு, உள்ளக விசாரணை என்று முடிவாகிவிட்டது. உள்ளக விசாரணையில் எமக்கு நம்பிக்கை இல்லை என்ற தமிழ்க் கட்சியினர் இப்போது மட்டும் உள்ளக விசாரணையை ஏற்றுக்கொண்டு விட்டார்களா?? இதுபற்றி வாயே இவர்கள் திறக்கவில்லை. இவையெல்லாம் மக்கள்வழங்கிய ஆணைக்கு மதிப்பளிக்காத நிலையாகும்.

அமையும் அரசுடன் பேரம்பேசி தீர்வு ஒன்றினைப் பெற்றுத் தருவார்கள் எனும் நம்பிக்கை வீணாகியுள்ளது! இவையெல்லாம் காலத்துக்கு காலம் ஏமாற்றும் செயலினைத் தவிர வேறில்லை.

எது எப்படி என்றாலும் இத்தகையவர்கள் ஒருபோதும் தீர்வினை பெற்றுத்தரப்போவதில்லை. தமிழர் பிரச்சினை தீரவும் இப்போதைக்கு வாய்ப்பு இல்லை என்பதே உண்மையாகும்.

# ஈரான் உடன்படிக்கையுடன் ஒபாமா

அண்மையில் வழங்கிய ஓர் அசாதாரண உரையில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, காங்கிரஸ் மற்றும் அரசு எந்திரத்தினுள் இருக்கும் சக்திவாய்ந்த கன்னைகள் ஈரானுக்கு எதிராக கணக்கிடவியலா விளைவு களைக் கொண்ட போர் ஒன்றினை தொடுக்க தீர்மானகரமாக உள்ளன என்று எச்சரித்து விபரங்களைப் பகிரங்கப்படுத்தினார்.

அவர் ஹிரோஷிமா அணுகுண்டு வீச்சின் 70ஆம் நினைவு தினத்தின் தறுவாயில் உரையாற்றுகையில், கடந்த மாதம் அறிவிக்கப்பட்ட ஈரானுடனான அணுசக்தி உடன்படிக்கையைத் தோற்கடிப்பதென்பது, ஈரானுடனான போரைக்குறிக்கும் என்றார். ஈரான், ஈராக்கைவிட அண்ணளவாக நான்கு மடங்குபெரியதும், அதைவிட ஏறத்தாழ மூன்று மடங்கு மக்கள் தொகை கொண்டதுமாகும். இரண்டாம் உலக போர் மற்றும் பனிப்போர் வரலாற்றைப் பலமுறைகூறி, அவர் மேற்கொண்டு அறிவுறுத்துகையில், ஈரானுடனான ஒரு போர் மூன்றாம் உலகபோருக்கு கதவு-களைத் திறந்துவிடும் என்றார்.

இத்தகையதொரு நிலைமையில், ஈரானுக்கும் P5+1க்கும் (அமெரிக்கா, சீனா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி) இடையில் பேரம்பேசப்பட்டு, ஐக்கிய நாடுகள் சபையால் ஒப்புக் கொள்ளப்பட்ட அணுசக்தி உடன் படிக்கைமீது காங்கிரஸ் வாக்களிப்பு எவ்வாறு திரும்பும் என்பது தெளிவாக தெரியவில்லை. அந்த உடன்படிக்கையை அமெரிக்கா நடைமுறைப்படுத்துவதைத் தடுக்கும் எந்தவொரு நடவடிக்கைக்கு எதிராகவும் அவர் வீட்டோ அதிகாரத்தைப் பிரயோகிக்க இருப்பதாக ஒபாமா அறிவித்துள்ளார். ஜனாதிபதியின் ஒரு வீட்டோ அதிகாரத்தைக் கவிழ்க்க அவசியப்படும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைக்கு, காங்கிரஸின் இரு அவைகளிலும் போதிய வாக்குகள் கிடைக்குமா என்பதும் இப்போதைக்கு தீர்மானிக்க முடியாததாக உள்ளது.

சர்ச்சைக்கு அப்பாற்பட்டது என்ன வென்றால், அமெரிக்க இராணுவ வாதத்தின் ஒரு பேரழிவுகரமான தீவிரப் படுத்தலை கருத்தில்கொண்ட ஒரு கொள்கைக்கு, அமெரிக்க காங்கிரஸில் மிகப்பெரும் பெரும்பான்மை வாக்குகள் வழங்கப்படும் என்பதேயாகும்.

பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் சபை அவரது வீட்டோ அதிகாரத்தைக் கவிழ்த்தால், போர் ஏற்படுமென்றும், அதுவும் உடனடியாக ஏற்படுமென்றும் ஒபாமா எச்சரித்தார். போரைநோக்கிய நகர்வுமீதான கட்டுப்பாடு அவரது கைகளிலிருந்து நழுவிவருகிறதென்று தலைமை தளபதி தவறுக்கிடமற்ற அவரது கருத்தை வழங்கினார்.

ஒபாமா கூறுகையில், "ஈரானுக்கு அணுஆயுதம் கிடைப்பதிலிருந்து அதை தடுக்க முழுமையாக பொறுப்பேற்றுள்ள எந்தவொரு அமெரிக்க நிர்வாகத்திற்கும் ஒரு வாய்ப்பாக உள்ள இந்த உடன் படிக்கையை காங்கிரஸ் நிராகரிப்ப தென்பது, மற்றொரு தேர்வாக மத்திய கிழக்கில் போரையே விட்டுவைக்கிறது. நான் இதை ஆத்திரமூட்டுவதற்காக கூறவில்லை. ஓர் உண்மை என்ற விதத்தில் குறிப்பிடுகிறேன்," என்றார்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் மற்றொரு வழிவகைகளைக் கொண்டு, அதுவும் மிகவும் அபாயகரமான, மத்திய கிழக்கில் போர் என்பதைக்கொண்டு அதன் உலகளாவிய நலன்களைப் பின்தொடர வேண்டுமா என்பதில் பரந்த இராணுவ மற்றும் உளவுத்துறை பிரிவுகள் உட்பட அமெரிக்க அரசியல் ஸ்தாபகம் மிகவும் ஆழமாக பிளவுபட்டுள்ளது என்பதையே இந்த உடன்படிக்கை மீதான சர்ச்சை எடுத்துக்காட்டுகிறது. இத்தகைய விவாதத்தில் இடம்பெறாமல் இருப்பது என்னவென்றால், அது தேர்ந்தெடுக்கும் எந்தவொரு நாடுகளுக்கு எதிராகவோ அல்லது மக்களுக்கு எதிராகவோ வாஷிங்டன் முன்கூட்டியே போர் தொடுக்க, அதாவது வலிந்து போர் தொடுக்க அதற்கு தனியுரிமைகள் இருப்பதாக கூறப்படுவதன்மீது அங்கே எந்த விவாதமும் இல்லை என்பதுதான். அமெரிக்க ஜனாதிபதி அவரது சொந்த முன்நடவடிக்கைகளை மேற்கோளிட்டுக்காட்டி, அடிக்கோடிடுகிறார்.

"முப்படைகளின் தளபதியாக, அவசியப்படும் போது படைகளை பிரயோகிப்பதற்கு நான் வெட்கப்பட்டதில்லை," என்றவர் பெருமையடித்துக் கொண்டார். "நான் பத்து ஆயிரக்கணக்கான இளம் அமெரிக்கர்களை சண்டைக்கு செல்ல உத்தரவிட்டிருக்கிறேன்." நான் ஏழு நாடுகளில் இராணுவ நடவடிக்கைக்கு உத்தரவிட்டுள்ளேன். படை அவசியப்பட்ட நேரங்களும் இருந்தன, இந்த உடன்படிக்கைக்கு ஈரான் அனுசரித்து வராமல் இருந்திருந்தால், நமக்கு வேறொரு மாற்றீடு இல்லை என்பது சாத்தியமாகி இருக்கும், என்றார்.



> "ஐரோப்பிய முதலாளித்துவம் அதன் சந்தையில் ஊடுருவ முயற்சிக்கின்றவேளையில், அமெரிக்க இராணுவம் அதை தாக்கினால், இறுதி விளைவாக நேட்டோ கூட்டணியே கூட மரணிக்கலாம். ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிற்குஇடையே இராணுவ பதட்டங்கள் வெடிக்கலாம்."

இருப்பினும், அவரது பல்வேறு தலை யீடுகள் அனைத்தையும்விட, ஈரானுடனான போர் மிகவும் அபாயகரமான தேர்ந்தெடுப் பாக இருக்குமென ஒபாமா கருதுகிறார். ஈரானிய ஆட்சியை அமெரிக்க ஏகாதிபத்தியத் திற்குப் பின்னால் திருப்புவதற்குரிய நெம்புகோலாக அணுசக்தி உடன்படிக் கையை பயன்படுத்துவதன்மூலமாக, அதேவேளையில் இந்த மூலோபாயம் தோல்வியடைந்தால் "இராணுவ சாத்தியக் கூறையும் மேசையில்" வைத்துக்கொண்டே, வாஷிங்டன் அதன் நலன்களைப் பின்பற்ற முடியுமென்பதே அவரது வாதமாகும்.

தெஹ்ரான் உடனான ஒரு திடீர் மோதல் குறித்து ஒபாமா அச்சப்படுவதற்கான காரணங்கள், ஈரான்மீதான ஒரு போர் இரத்தக்களரியாக இருக்கும் என்பதற்கும் அப்பால் செல்கிறது. அணுசக்தி உடன்படிக்கையின் நிராகரிப்பு, ரஷ்யா மற்றும் சீனாவுடன் ஓர் அபாயகரமான மோதலைத் தூண்டிவிடுமென அமெரிக்க ஜனாதிபதி எச்சரித்தார்.

அது ஐரோப்பாவில் உள்ள வாஷிங்டன் கூட்டாளிகளுடன், முதல் சான்றாக ஜேர்மனியுடன், அத்துடன் ஆசியா வில் உள்ளவர்களுடனும், உறவுகளை எரியூட்டுமென அவர் உறுதியாக தெரிவித்தார். ஏற்கனவே பில்லியன் பில்லியன் கணக்கான டொலர்களை அவற்றின் பொருளாதாரங்கள் விலையாகக் கொடுக்க செய்துள்ள ஒருதலைப்பட்சமான அமெரிக்க தடையாணைகளுக்கோ, "அமெரிக்க காங்கிரஸின் கட்டளைகளுக்கோ" அவர்களில் யாருமே மண்டியிடமாட்டார்கள் என்றும் அவர் அறிவித்தார்.

ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகள் ஏற்கனவே ஆதாயமளிக்கும் ஒப்பந்தங்களைப் பேரம்பேசு தெஹ்ரானுக்கு உயர்மட்ட பிரதி நிதிகள் குழுவை அனுப்பி உள்ளன. ஆகக்குறைந்த தடையாணைகளுக்காகக் கூட பேரம்பேசும் மேசைக்கு அவர்கள் திரும்பப் போவதில்லை என்பதை அவர்கள் தெளிவுபடுத்தி உள்ளார்கள்.

அந்த அணுசக்தி உடன்படிக்கையை அமெரிக்கா நிராகரிப்பதென்பது, அமெரிக்கா எந்தவொரு பேரம்பேசும் உடன்படிக்கையை யும் மதிக்காது என்ற கருத்துடன் ஈரானை யும் மற்றும் சாத்தியமானளவிற்கு ஏனைய நாடுகளையும் வேகமாக அணுஆயுதங்கள் தயாரிக்க உந்திச்சென்று, "ஒரு பெருந்தொல்லையாக" ஒரு பேரழிவாக இருக்குமென பேர்லினின் இரண்டாம்நிலை உயர்மட்ட தூதரக அதிகாரி வாஷிங்டனில் எச்சரித்தார்.

ஐரோப்பிய முதலாளித்துவம் அதன் சந்தையில் ஊடுருவ முயற்சிக்கின்றவேளை யில், அமெரிக்க இராணுவம் அதை தாக்கினால், இறுதி விளைவாக நேட்டோ கூட்டணியேகூட மரணிக்கலாம், ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிற்குமிடையே இராணுவ பதட்டங்கள் வெடிக்கலாம்.

தடையாணை முறைக்கு திரும்புமாறு சீனாவை நிர்ப்பந்திக்கும் எந்தவொரு முயற்சியின் விளைவுகளைக் குறித்து கவனம் செலுத்துமாறும் ஒபாமா கேட்டுக்கொண்டார். "அமெரிக்க நிதியியல் அமைப்பு முறையிலிருந்து சீனா போன்ற நாடுகளை நாம் வெட்ட வேண்டியுள்ளது," என்றார். "நம்மிடமிருந்து கடன்களை வாங்கியவர்களில் பிரதானமானவர்களாக அவர்கள் இருப்பதால், அதுபோன்ற நடவடிக்கைகள் நமது சொந்த பொருளாதாரத்திற்குள்ளேயே கடுமையான சிரமங்களை ஏற்படுத்தும், பின் அதன் போக்கில், உலகின் கையிருப்பு செலாவணி யாக டொலர் வகிக்கும் பாத்திரம் குறித்து சர்வதேச அள்வில் கேள்விகள் எழும்," என்றார்.

சீனா உடனான ஓர் இராணுவ மோதல் என்பதே அதுபோன்றவொரு விளைவில் பொருள் தொக்கிநிற்கிறது. அது அமெரிக்க மற்றும் உலக பொருளாதாரத்தையும் முழு அளவிலான மந்த நிலைமைக்குள் மூழ்கடிக்குமென ஒபாமா தெரிவித்தார்.

ஆனால் துல்லியமாக அதுபோன்ற போக்குதான் அமெரிக்க ஆளும் உயரடுக்கின் சக்திவாய்ந்த பிரிவுகளால் திட்டமிடப்பட்டுவருகிறது. அவர்கள் அதை, அதிகரித்தளவில் போரை எதிர்க்கும் அமெரிக்க மக்களின் முதுகுக்குப் பின்னால்செய்து வருகிறார்கள். ஒபாமா எச்சரிக்கைகளின் உறையவைக்கும் விளைவுகள் வெளிப்படை யாக இருந்தாலும், அமெரிக்க ஊடகங் களின் பிரதிபலிப்போ குறிப்பிடத்தக்க அளவிற்கு மௌனமாக இருக்கிறது.

ஏற்கனவே 2016 தேர்தல் பிரசாரம் நடந்துவருகின்ற நிலையில், ஊழல் மிகுந்து திவாலாகிப்போய் என்னவாக ஆகிப்போயிருந்தாலும் அமெரிக்க அரசியல் அமைப்பு முறைக்குள் மக்களின் போர் எதிர்ப்பு உணர்வு எந்தவித வெளிப்பாட்டையும் காண வில்லை. செப்டம்பரில் ஈரான் உடன்படிக்கைமீதான காங்கிரஸ் வாக்கெடுப்புக்குச் சிலகாலத்திற்குப் பின்னர், ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் இரண்டினது தலையீட்டைவிட மிகப்பெரியளவில் இருக்கக்கூடிய போரில் சிலவேளை அமெரிக்கா மீண்டுமொருமுறை இறங்கினால் அவ்வாறு இறங்குவதைக் காண்கையில் மில்லியன்கணக்கான மக்கள் ஒரு வேளை விழித்தெழலாம். ஒட்டுமொத்த பூமியே ஒரு மூன்றாம் அணு ஆயுத உலகப்போரின் விளிம்பில் இருக்கையில், அதனுடன்சேர்ந்து அவர்களது வேலை வாய்ப்பு மற்றும் வாழ்க்கை நிலைமை களின் ஒருபொறிவால் திடீரென சூழப்படலாம்.

இந்த பாதையில் உலகை கீழ்நோக்கி உந்திச்செல்ல தயாரிப்பு செய்பவர்களது கொள்கைகள், அமெரிக்க முதலா ளித்துவ அமைப்பு முறையின் கடுமையான நெருக்கடியின் ஒரு பிரதிபலிப்பாகும், அமெரிக்க முதலாளித்துவத்தின் உலகளாவிய வீழ்ச்சியை இராணுவ வழிவகைகளைக் கொண்டு சரிக்கட்ட வேண்டுமென்ற ஆளும் வர்க்க தீர்மானத்தின் ஒரு பிரதிபலிப்பும் ஆகும். மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசியாவில் எதிர்ப்பில்லா அமெரிக்க மேலாதிக்கத்தைப் பாதுகாப்பதற்காக ஆப்கானிஸ்தான், ஈராக், லிபியா

தொகுப்பு: வேணு கிருஸ்ணா


மற்றும் சிரியாவில் நடத்திய அமெரிக்க போர்களின் தோல்வியால் நிலை குலைந்துபோன அவர்கள், இப்போது இரண்டு எரிசக்தி வளம்மிக்க பிராந்தியங்களை இணைக்கும் நாடான ஈரானை இராணுவரீதியில் கீழ்படிய செய்து அதனினும் மிகப்பெரிய பங்குகளைப் பெறுவதற்கு மற்றொரு பகடைக்காயை உருட்ட விரும்புகிறார்களா?

அவரது உரையின் மிகவும் கோழைத்தனமான பகுதியில், ஒபாமா, ஈரான் உடன்படிக்கைக்கு அமெரிக்க ஸ்தாபகத்திற்குள் இருக்கும் வெறி பிடித்த எதிர்ப்பை, "நமது நண்பர்கள் மற்றும் கூட்டாளியான இஸ்ரேல் மீதான நேர்மையான உறவு, இந்த உறவை" நானும் ஆழமாக பகிர்ந்து கொள்கிறேன், என்பதில் ஒப்படைத்தார். இந்த உறவில் அங்கே எந்த நேர்மையும் கிடையாது. அமெரிக்க அரசியல் ஸ்தாபகத்தின் மிகவும் பிற்போக்குத்தனமான மற்றும் ஈவிரக்கமற்ற கூறுபாடுகள் இஸ்ரேல் ஆட்சியின் பக்கம் சாய்வது, அவர்களது பொதுவான போருக்கான ஆதரவுடன் பிணைந்துள்ளது.

இப்போது ஈரானுடன் போர் ஊக்குவிப்பு உள்ளடங்கலாக, ஒபாமாவிற்கு முன்பிருந்தவர் எதை "இருபதாம் நூற்றாண்டின் போர்கள்" என்று குறிப்பிட்டாரோ அதன் தொடர்ச்சி மற்றும் பரவல், அதிகரித்துவரும் சமூக சமத்துவமின்மையால் தோற்றுவிக்கப்பட உள்நாட்டு வர்க்க பதட்டங்களை அமெரிக்க இராணுவவாதத்தின் முன்பினும் அதிக வெடிப்பின் வடிவத்தில்" வெளிநோக்கி திசை திருப்பிவிடுவதற்கான தேவையையே வெளிப்படுத்துகிறது.




**இப்பகுதிக்கு சிறுவர்களிடம், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.**



பரமண்ணா

# "விளையும் பயிரின் முளை!"

நேரத்துடன் வகுப்பறை வந்திருக்கும் ஏனைய மாணவர் ஓடித் திரிந்து வாங்கு மேசை களிலும் ஏறிச் சத்தமிட்டு விளையாடத் தொடங்கி இருப்பர்.

அந்நேரங்களில் வகுப்பறை அமர்க்களமாகவே மாறிவிடும். மேலும் அம்மாணவர் சந்திரன், சேகரனைக் கூடவும் தங்களுடன் விளையாட்டுக்கு அழைத்துச் தொல்லை கொடுக்கவும் ஆரம்பித்துவிடுவர்.

இத்துணை இடையூறுகள் மத்தியில் இருவராலும் மேற்கொண்டு பாடங்களை மனனம் செய்வதும் எங்ஙனம்?

வகுப்பினுள் ஆசிரியர் நுழையும்போதுதான் அமர்க்களங்கள் ஒருவிதமாக அமைதிபெறும். ஆசிரியர் எப்போதாவது வெளியேறிவிட்டால், வகுப்பறை பழையபடி களைகட்டத் தொடங்கிவிடும்.

அமைதியை விரும்பும் சந்திரனுக்கும், சேகரனுக்கும் வகுப்பறையில் ஆசிரியர் இருப்பதே மகிழ்ச்சியை தரும். எனில் நிம்மதியாக பாடங்களை அந்நேரங்களில் மனனம் செய்யக் கூடியதாய் இருக்கும்.

அதுவுமில்லாமல் மற்ற மாணவர்களின் தொல்லைகளில் இருந்தும், தப்பிக்கமுடியும் என்பதாலும்கூட! தங்களில் இருந்து மாறுபட்ட இவர்களில் ஏனைய மாணவர்களுக்கு உள்ளூர வெறுப்பாக இருக்கும்.

ஆசிரியர் எப்போதாவது வகுப்பறையை விட்டு வெளியேறும் பொழுதே மூச்சுவிட்டுக் கொள்ளவும் முடியும் அவர்களால்...

சேகரனில் புதிதாகத் தோன்றி இருக்கும் மாற்றத்தைச் சந்திரனாலும் அன்று அவதானிக்கக்கூடியதாகவும் இருந்தது. அவனில் அவதானிக்கப்பட்ட மாற்றங்கள் சந்திரனாலும் ஏற்கக் கூடியதாய் இருந்தது. எனில் அதிலோர் மேன்மை இருந்ததை உள்ளூர அவனும் அனுபவித்துக்கொண்டதே காரணம்.

நாட்கள் முடிய மாதங்கள் ஓடி வருடம் கழிந்து சிலநாட்கள் நகர்ந்துபோயின.



(தொடரும்)

## வாரம் ஒரு திருக்குறள்



### அன்புடைமை

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர்**
**அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு**

அன்பு இல்லாதவர் எல்லாப் பொருள்களையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வார்: அன்பு உடையவர் தம் உடமையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர்.

குறள் : 72

## பொது அறிவு தகவல்

*பிரான்சிலும் பெல்சியத்திலும் சினிமாவுக்கு தணிக்கை எதுவும் இல்லை.

* பண்டைய ஒலிம்பிக் போட்டியைப் பார்க்க பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

* பிரான்சில் மட்டுமே ஏப்ரல் முதல் திகதியை முட்டாள் தினமாக கொண்டாடப்படுவதில்லை.

* இங்கிலாந்தில் மாலை 6 மணிக்கு மேல் யாரும் திருமணம் செய்துகொள்ள அனுமதி இல்லை.

* பனிப்பிரதேசத்தில் வாழும் எஸ்கிமோக்களுக்கு ஜலதோசம் பிடிப்பதில்லை

* இங்கிலாந்திலும், வாடிகனிலும் தேசிய தினங்கள் எதுவும் கொண்டாடுவதில்லை.

## நிலா

**வெள்ளை தாமரை போன்ற நிலா**
**இரவை பகலாக்கும் நிலா**
**வையத்தார் போற்றிடும் நிலா**
**இரவொளி தருகின்ற நிலா**


**பெண்மதி போல்சூழ் நிலா**
**பாட்டி முகம் பதியும் நிலா**
**காதினிக்கும் கதைகூறும் நிலா**
**வண்ண ஜாலம்போடும் நிலா**

**கன்னி மகள்காணும் நிலா**
**குழந்தை மனதைக் கவர்ந்திடும் நிலா**
**மூவைந்து நாள் முழவில்**
**இரவுதனை இருளாக்கும் நிலா.**



ஆக்கம்: ந.டசிராஜி, ஆழியவளை.

## விந்தையான பூச்சிகள்



ஈக்களுக்கு முற்பகலில் இருக்கும் பலம் பிற்பகலில் இருப்பதில்லை.


பூச்சி இனங்களிலேயே மிகவும் குறுகிய காலம் வாழ்வது ஈசல். இது ஒரேநாளில் பிறந்துவளர்ந்து இறந்துவிடும். இதற்கு, வயிறோ, சீரண உறுப்புகளோ கிடையாது.

பூச்சிகள் உருவில் சிறியனவாக இருந்தாலும் ஆற்றல்மிக்கவை. பூச்சிகள் தங்கள் எடையை விட 10 முதல் 20 வரை அதிக எடையை எடுத்துச்செல்லும் திறன் பெற்றவை.




ஓர் ஆண் பட்டுப்பூச்சி ஆறு மைல் களுக்குப்பால் உள்ள பெண் பட்டுப்பூச்சியை தன் மோப்ப சக்தியினால் அறிந்துவிடும்.

ஆபிரிக்காவில் 'டெர்மைட்' எனும் பூச்சி இருக்கிறது. கரையான் இனத்தைச் சேர்ந்த இந்தப் பூச்சிதான் அதிகளவு முட்டையிடும் இனமாகும். இப்பூச்சி ஒருநாளைக்கு 36,000 முட்டைகள் இடும்.



## விலங்குகளின் கர்ப்ப காலங்கள்

**ஒட்டகம் 11 முதல் 12 மாதங்கள்**
**ஒட்டகச்சிவிங்கி - 14 மாதங்கள்**
**செம்மறி ஆடு - 5 மாதங்கள்**
**நாய் - 9 வாரங்கள்**
**குழி முயல் - 1 மாதம்**
**கழுதை - 12 மாதங்கள்**
**பசு - 9 மாதங்கள்**
**குதிரை - 11 மாதங்கள்**
**குரங்கு - 7 மாதங்கள்**
**ஆடு - 5 மாதங்கள்**
**பூனை - 2 மாதங்கள்**
**ஓநாய் - 2 மாதங்கள்**
**கரடி - 6 மாதங்கள்**
**சிங்கம் - 108 நாட்கள்**
**பன்றி - 4 மாதங்கள்**
**குள்ளநரி - 62 நாட்கள்**



சிறந்த வர்ணந்தீட்டிப் பரிசு தனை வெல்லுங்கள்

**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிடவேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 14.09.2015

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 1111**
**தினமுரசு வாரமலர்**
த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1111**

எம்.அஜ்மல்,
பிரதான வீதி, வலஸ்முல்ல.

**பரிசுக்குரியவர்: 1109**

**பாராட்டுக்குரியவர்கள்**

01. எஸ். கஜந்தினி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
02. மு.சாரங்கன், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
03. து.நிசாந்தன், கொழும்பு - 16.
04. சோ.பார்கவி, புன்னாலைக்கட்டுவன், யாழ்ப்பாணம்.
05. அ.ஆரபி, பரந்தன், கிளிநொச்சி.
06. நி.அசாட், முஸ்லிம்தெரு, யாழ்ப்பாணம்.
07. ப.கானுஜன், பிரதான வீதி, நுவரெலியா.
08. தி.அஸ்மிதா, கண்டி வீதி, சாவகச்சேரி.

# வாரமொரு வாழ்வியற் சிந்தனை


# முடிவில்லாப் பிரிவுகளும் இன்றைய வாழ்வின் முரண்பாடுகளும்

'நாகரீக வாழ்வியல்' நாலு திசை யெங்கும் நாட்டியமாடினாலும் நாமினும் நாலு சுவரிற்குள் தான் வாழ்ந்து வருகின்றோம். போட்டிகள், பொறாமைகள், விரோதங்கள், குரோதங்கள், வன்முறைகள், வாள் வெட்டுக்கள் மலிந்த மானிடவர்க்கங் களாவே நாள்தோறும் நாம் மறு பிறவியெடுக்கின்றோம். முடிவில்லாப் பிரிவுகளையும் தீர்வில்லா முரண் பாடுகளையும் சுமந்து வாழ்கின்றோம். இந்த பூமி எதற்காக பரந்து, விரிந்து கிடக்கின்றது...? நாலு மனிதர்களை சந்தோஷப்படுத்தி நாமும் சந்தோஷமாக வாழ்வதற்காகவே. ஆனால் நாமோ வன்முறைதான் வாழ்க்கையென்று வாழேந்தி நிற்கின்றோம்.

ஆஸ்திக்கும் அந்தஸ்துக்கும் ஆயிரம் அர்த்தம் இருந்தாலும் நிஜமான அன்புக்கு ஒரேயொரு அர்த்தமிருந்தால் அதுவே எம் வாழ்வில் வெற்றியைத் தேடித்தரும் என்பார்கள்.

இன்று எத்தனையோ விவாகரத்துக் கள் நாழுக்கு நாள் நீதிமன்றம் வருகின்றன. அத்தனைக்கும் அடிப்படைக் காரணம் பிரச்சினைகள் அல்ல முரண்பாடுகளேயாகும். முரண்பாடு என்பது வேறு பிரச்சினை என்பது வேறு. இருபக்கங்களிலும் சரியான நியாயங்கள் இருந்தபோதும் கருத்து வேறுபாடு காரணமாக உருவாவது முரண்பாடாகும்.

மாறாக ஒரு பக்கத்தில் மாத்திரம் சரியான நியாயம் இருக்கும்போது உருப்பெறுவது பிரச்சினையாகும். முரண்பாடுகள் முற்றியநிலையில் பிரச்சினைகளாக உருப்பெறலாம். ஆனால், இன்றைய சமூகப் பிரச்சினைகள் பலவற்றிற்கு அடிப்படைக் காரணம் முரண்பாடு களேயாகும். அதனைத் தீர்ப்பது சற்றுக்கடினம். ஆனால் பிரச்சினை களைத் தீர்ப்பது சுலபம். இன்றைய



ஆர்.கே.மேனன்

சமூகக்கட்டமைப்பில் பல்வேறு துருவங்களில் முரண்பாடுகள் முற்றி வருகின்றன. குடும்பத்தில் ஏற்படும் முரண்பாடுகளால் விவாகரத்துக்கள் மலிகின்றன, நிர்வாகங்களில் ஏற்படும் முரண்பாடுகளால் வெளியீடுகள் பாதிக்கப்படுகின்றன. அரசியலில் ஏற்படும் முரண்பாடுகளால் அப்பாவிப் பொதுமக்களிற்கு பயன்படவேண்டிய நிதிகள் பயன்பாடற்றுத் திரும்பு கின்றன. பெற்றோர்க்கும் பிள்ளைகளிற்கு

மிடையிலான முரண்பாட்டால் முதியோர் இல்லங்களில் வாழவைத்த தெய்வங்கள் வாடிக் கிடக்கின்றன. ஆகவே முரண்பாடுகள் தொடர்பாக தனித்தனியாக நோக்க வேண்டிய கட்டாயதேவை இன்று அதிகரித்துள்ளது. அந்தவகையில் வாரமொரு வாழ்வியல் என்கின்ற இத்தொடர் ஊடாக பல்வேறு விடயங்களை பகுத்தாராய்வோம். முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ளும்

அறிவும் ஈடுபாடும் எம்மவர்கள் மத்தியில் குறைந்துசெல்வதே முடிவில்லாப் பிரிவுகளிற்கு அடிப்படையாக அமைகின்றது. மனித உறவுகளின் முக்கியத்துவம், ஒன்றிணைந்த வாழ்வின் தேவைகள் என்பவற்றை தற்கால சமூகம் புரிந்துகொள்வதில்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு அவற்றை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

1. விட்டுக்கொடுப்பு என்பதை எமது தற்கால சமூகம் தோல்வியாகக் கருதுகின்றோம்.

2. பிறரின் தேவைகளைக் கருத்தில் எடுக்காது (needs) எமது நிலையில் இருந்து மாத்திரம் சிந்தித்து தொடர் பாடல்களை மேற்கொள்கின்றோம்.

3.மற்றவர் உணர்வுகளைப்புரிந்து கொள்ளாது தொடர்பாடல்களை மேற்கொள்கின்றோம்.

4. வன்முறையால் எதனையும் சாதித்துவிடலாம் என்கின்ற வக்கிர மனப்பாங்கை வளர்த்து வருகின்றோம்.

வன்முறைதான் வாழ்க்கையல்ல, முரண்பாடுதான் முடிவல்ல. இடையில் பல வசந்தங்கள் இந்த பூமியில் உண்டு அதை நாம் தேடுவதில்லை. நல்லதை நாம் சிந்திப்பதில்லை. எதை எடுத்தாலும் எதிர்மறையான சிந்தனைகள்தான் எமக்குள் மலிந்துவிட்டது. இந்நிலை மாறவேண்டும். மனித வள அபிவிருத்திக்கும் உளநிலை செம்மையாக்கத்திற்கும் பல திட்டங்களை நாம் முன்னெடுக்க வேண்டும். வளர்முக நாடுகள் இதில் கூடிய கவனம் எடுக்கின்றார்கள். ஆனால் நாமே சிறிதளவுகூட இதை சிந்திப்பதில்லை. இழப்புக்களின் உச்சத்தைக்கண்ட வெந்து நொந்துபோன சமூக ஆணிகள் நாங்கள். எமக்குத்தான் வழிகாட்டலும் ஆலோசனையும் அதிகம் தேவை. ஆகையால் வாரமொரு வாழ்வியற்சிந்தனையுடன் ஒவ்வொரு வாரமும் சந்திப்போம்.

(தொடரும்..)

---

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

## குறுக்கெழுத்துப் போட்டி - 640

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | | 9 | 10 | 11 | |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | | 22 | | 24 |
| 25 | 26 | 27 | | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 638 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ம | 2 னி | 3 த | 4 வ | 5 ள | 6 ம் |
| 7 கா | 8 க் | 9 வ | 10 லி | 11 கா | 12 ய் |
| 13 ப | 14 கி | | 16 மை | 17 க | 18 ட |
| 19 து | 20 ப | 21 மை | | 23 ம் | 24 பி |
| 25 ம | 26 ம் | 27 ர | 28 ண | | 30 ப் |
| 31 ம் | 32 அ | 33 சி | 34 ர | | 36 சா |

### இடமிருந்து வலம்

01. குளிர்நாடுகளில் இருந்து ஆசியா நாடுகளுக்கும் உலா செல்லும் பறவை இனமொன்று.
09. இடம் ; கனம். சேனை.
13. இல்வாழ்க்கை. (குழம்பியுள்ளது)
25. ஒரு வகை நடனம். (திரும்பியுள்ளது)
29. சிங்கம். (திரும்பியுள்ளது).
31. கிராமவாரித்திட்டம். (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

01. நேர்கிழக்குத் திசை.
03. பாவச்சுமைகளை ஆண்டவன் திருவடியில் அர்ப்பணித்துவிடுவது.
04. குழி ; நீர்க்குண்டு. (குழம்பியுள்ளது)
05. குளிப்பு ; முழுக்கு. (குழம்பியுள்ளது)
14. களிப்பு ; குயில். (குழம்பியுள்ளது)
18. அட்டாங்கயோகத்தில் ஒன்று. (திரும்பியுள்ளது)
27. மேகப்படை.
29. அறுசுவையில் ஒன்று. (திரும்பியுள்ளது)

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 14.09.2015 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 640
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.


**குறுக்கெழுத்துப் போட்டி இல.638 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

என்.றொபோட், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

01. ஆ.ஆனந்தி, பிரதான வீதி, வவுனியா.
02. ப.காவியா, கடற்கரை வீதி, மன்னார்.
03. ம.பரந்தாமன், முள்ளியவளை, முல்லைத்தீவு.
04. க.நவீன், தெல்லிப்பளை மேற்கு, தெல்லிப்பளை.
05. எம்.பாவனா, அச்சுவேலி, யாழ்ப்பாணம்.
06. என்.அன்ரனி, குருநகர், யாழ்ப்பாணம்.
07. கா.நடராஜா, கோவில் வீதி, வவுனியா.
08. ம.சரண்யா, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
09. எம்.நீதன், புலோலி தெற்கு, புலோலி.
10. ந.நிர்மல், கொள்ளுப்பிட்டி.





இஞ்சி இடுப்பழகி

# ஒஸ்கார் மேடையில் காக்கா முட்டை?

தனுசுஷ் தயாரிப்பில் வெளிவந்த காக்கா முட்டை படம் விருதுகள் மட்டுமின்றி பொக்ஸ் ஓபிஸிலும் பட்டையை கிளப்பியது. இந்நிலையில் இந்த வருடம் இந்தியாவில் இருந்து ஒஸ்கார் விருதிற்கு தற்போது படங்கள் பரிந்துரை செய்யப்பட்டுவருகின்றது.

இந்த ஒஸ்கார் ரேஸில் முதலில் இருப்பது காக்கா முட்டை மற்றும் பாகுபலி படங்கள்தானாம். மேலும், இதில் அமீர்கானின் பிகே, ப்ரியங்கா சோப்ராவின் மேரி கேம் ஆகிய படங்களும் போட்டியில் உள்ளது.

# படவாய்ப்பு இல்லாததால் திருமணத்திற்கு தயாரான நடிகை!

தமிழில் முன்னணி நடிகையாக வலம்வந்த பிசின் நாயகி, பொலிவூட்டுக்கு பறந்துபோனாராம். அங்கு முதலில் படவாய்ப்புகள் கிடைத்ததால் பிசியாக நடித்துவந்தாராம். தற்போது அங்கு படவாய்ப்புகள் இல்லாமல் இருக்கிறாராம். பொலிவூட்டில் இருந்து கோலிவூட்டுக்கு வந்தால் சம்பளம் குறையும் என்ற எண்ணத்தில் கோலிவூட் படங்களிலும் நடிக்க மறுத்துவருகிறாராம். அதனால் தற்போது திருமணத்திற்கு தயாராகிவிட்டாராம். தன்னுடைய பெற்றோர்களிடம்கூறி நல்ல மாப்பிள்ளையை பார்க்க சொல்லியிருக்கிறாராம்.

# இதற்கு நயன்தாரா சம்மதிப்பாரா?

நயன்தாரா தான் தென்னிந்திய சினிமாவில் அதிகம் சம்பளம்வாங்கும் நாயகி. இவர் எப்போதும் முன்னணி நடிகர்களின் படங்களில் மட்டும்தான் நடிப்பார். இந்நிலையில் அறிமுக இயக்குனர் பிரகூஷாந்த் இயக்கத்தில் ஜி.வி.பிரகாகூஷ் நடிக்கும் புருஸ்லீ படத்தில் நடிக்க நயன்தாராவிடம் பேச்சுவார்த்தை நடந்து வருகிறதாம். இதற்கு நயன்தாரா சம்மதிப் பாரா? என்று பொறுத்து இருந்து பார்ப் போம்.

# நல்ல கதை அமைந்ததால் மீண்டும் நடிக்கிறேன்

## ஐஸ்வர்யாராய் பேட்டி

நடிகை ஐஸ்வர்யாராய் திருமணத்துக்குப்பிறகு நடிப்பதை குறைத்தார். கர்ப்பமானதும் தற்காலிகமாக விலகினார். குழந்தை பிறந்தபின் அதை வளர்ப்பதில் கவனம் செலுத்தினார். தற்போது நீண்ட இடைவெளிக்குப்பிறகு "ஜாஸ்பா" என்ற இந்தி படம்மூலம் மீண்டும் நடிக்க வந்துள்ளார்.

இதன் படவேலைகள் விறுவிறுப்பாக நடக்கின்றன. இந்த படத்தில் இர்பான்கான், சப்னாஆஸ்மி, ஜாக்கிஷராப், அதுல்குல்கர்னி ஆகியோரும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். வரும் 9ஆம் திகதி படத்தை வெளியிட திட்டமிட்டு உள்ளனர். ஐஸ்வர்யாராய் மும்பையில் அளித்த பேட்டி வருமாறு:-

"நான் 5 வருடங்களாக படங்களில் நடிக்கவில்லை. ஆனாலும், சினிமாவைவிட்டு ஒதுங்கிவிட்டதாக உணரவில்லை. ஏற்கனவே நடிகராக இருந்த ஒருவர் படங்களில் நடிக்காமல் இருந்தாலும், அவர் எப்போதுமே நடிகர்தான் என்று மூத்த நடிகர்கள் சொல்வதுண்டு. அது உண்மை என்பதை எனது அனுபவத்தில் உணர்ந்து இருக்கிறேன்.

நடிகர், நடிகையாக இருப்பவர்களுக்கு தங்கள் வேலையில் திருப்தி ஏற்படவேண்டும். அது ரொம்ப முக்கியம். திருமணத்துக்கு முன்பும் நடித்தேன், இப்போதும் நடித்துக்கொண்டு இருக்கிறேன். எப்போதும் அர்ப்பணிப்பு உணர்வோடுதான் எனது கடமையை செய்கிறேன். தாய் என்ற உறவிலும் உறுதியாக இருக்கிறேன். நல்ல கதைக்காக காத்து இருந்தேன். அந்த கதை இப்போது அமைந்து இருக்கிறது. இந்த படத்தில் சம்பளத்துக்கு பதில் இலாபத்தில் பங்கு கேட்கிறீர்களா? என்று என்னிடம் கேட்கின்றனர். அதற்கு பதில் சொல்லமுடியாது". இவ்வாறு ஐஸ்வர்யாராய் கூறினார்.



# பாடலுக்காக 24 மணிநேரம் முத்தம் கொடுத்துக்கொண்ட இம்ரான் – கங்கனா ரனாவத்!

கட்டி பட்டி என்கிற ஹிந்திப் படத்தில் இம்ரான்கான் - கங்கனா ரனாவத் ஆகியோர் ஜோடியாக நடிக்கிறார்கள். இந்தப் படத்துக்கான ஒரு பாடலில், லிப் டு லிப் காட்சி இடம்பெறுகிறது. அது படமாக்கப்பட்ட விதம்தான் இந்திய சினிமாவில் யாரும் கேள்விப்பட்டிராதது. பொதுவாக இதுபோன்ற காட்சிகளுக்கு அதிக டேக் எடுத்தார்கள் என்றுதான் செய்திவரும்.

சமீபத்தில்கூட ஜிவி பிரகாஷ், த்ரிஷா இல்லனா நயன்தாரா படத்துக்காக படமாக்கப்பட்ட லிப் டு லிப் கிஸ் காட்சிக்கு 36 டேக்குகள் வாங்கினார் என்றொரு செய்தி வெளிவந்தது. ஆனால் லிப் டு லிப் கிஸியான் என்கிற பாடலை படமாக்கப் பட்டபோது இம்ரானும் கங்கனாவும் ஒட்டுமொத்தமாக 24 மணிநேரம் முத்தம் கொடுத்துக்கொண்டதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இந்தியாவிலேயே முதல்முறையாக ஸ்டாப்மோஷன் டெக்னோலஜி, லிப் டு லிப் கிஸியான் என்கிற பாடலுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

"ஶ்ரீதே

ென்னிந்திய சினிப
டியாத இடத்தில்
ஶ்ரீதேவி. இவர் பொலி
தம் சினிமாவில் ந
கபூரை திருமணம்செ
நிறு
ண்ட இடைவேலை
முக்கியமான ராணி
இப்படத்தை விளம்பரப்
பக்கத்தில் தன்பெய
மற்றியுள்ளார். ஏ
செய்து ரிலிஸ்
விளம
நோக்கம் எ



பாயும் புலி



...கவனம் செலுத்தினர்.
...மூலம் மீண்டும் நடிக்க



# அப்பாக்களின் அவஸ்தைகள் யாருக்குத் தெரியும்? நடிகர் பிரபு பேச்சு

பிரபல ஸ்டண்ட் மாஸ்டரும் பெப்ஸியின் தலைவராக இருந்தவருமான பெப்ஸி விஜயனின் மகன் சபரிஷ் நாயகனாக நடிக்கும் படம் அசுரகுலம். பழம்பெரும் இயக்குநர் கே.விஜயனின் பேரன் விக்னேஷ் மேனன் இப்படத்தை இயக்கியுள்ளார். சி.சத்யா இசையமைத்துள்ளார். ஆப்கன் பிலிம்ஸ் தயாரித்துள்ளது. இப்படத்தின் ட்ரெய்லர் மற்றும் பாடல்கள் வெளியீட்டு விழா சமீபத்தில் பிரசாத் லேப் தியேட்டரில் நடந்தது.

ட்ரெய்லரை பிரபு வெளியிட்டார். பாடல்களைத் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத்தின் தலைவர் கலைப்புலி எஸ்.தாணு வெளியிட்டார். நிகழ்ச்சியில் கலந்துகொண்டு இயக்குநர் பி.வாசு பேசும்போது, "விஜயன் மாஸ்டரை பரபரப்பான மாஸ்டராக, ஒரு பலசாலியாகத்தான் தெரியும். இன்று இங்கே அவரை பொறுப்புள்ள ஒரு தந்தையாகப் பார்க்கிறேன். ஒரு அப்பாவாக உங்கள் பயம், பிரபுவின் பயம், என் பயம் எல்லாமும் ஒன்றுதான். மகன் நன்றாக வரவேண்டுமே என்கிற ஒரு தந்தையின் பயம்தான் அது.

சத்யாவின் இசையில் ராஜா சாரின் டச்சை உணரமுடிந்தது. இன்று ஒரு படத்துக்கு கதாநாயகன் யார் என்றால் அது கதைதான். படம்தான் நட்சத்திரம். உலகம் முழுக்க ரசிகர்கள் இருக்கிற சல்மான்கான் இந்த விஜயன் மாஸ்டரின் ரசிகர்.

கதாநாயக நடிகர்களுக்கு பெரிய பெரிய கட்அவுட் எல்லாம் வைப்பார்கள். அதன் உயரம் அதிகமாக இருக்கும். அதற்கு அழகுப்படுத்தி மாலை எல்லாம் போடுவார்கள். பாலாபிஷேகம் செய்வார்கள். அந்த கட்அவுட்டின் பின்னால் போய்ப் பார்த்தால் ஆயிரம் கட்டைகள் இருக்கும் நிறைய ஆணிகள் இருக்கும் கயிறுகள் இருக்கும். அவர்கள்தான் தொழில்நுட்பக் கலைஞர்கள். நட்சத்திரங்களைத் தாங்கிப் பிடிப்பவர்கள் இந்தத் தொழில்நுட்பக் கலைஞர்கள்தான் அதை மறந்துவிடக்கூடாது" என்றார்.

நடிகர் பிரபு பேசும்போது, "நான் 1978இல் திரிசூலம் படத்தில் தயாரிப்பு நிர்வாகப் பணியைக் கவனித்துவந்தேன். அப்போதெல்லாம் அப்பா, பெரியப்பா எம்.ஜி.ஆர் ஆகியோருக்கு சாஹுல், ஜெயமணி இருவரும்தான் டூப் போடுவார்கள். இவர்களிடயே உயரமாக இன்னொருவர் இருப்பார், அவர்தான் பெப்ஸி விஜயன். அப்போது அப்பாகூட இவர் வேலை செய்வதைப் பார்த்து "இவன் பெரிய ரவுண்ட் வருவான்" என்று பாராட்டுவார்.

மாஸ்டராக இவருக்கும் எனக்கும் சங்கிலி முதல் படம். அந்தப் படத்தில் நான் அப்பாவை எதிர்த்து வசனம் பேசுவேன். அப்போது அப்பா என்னை அடிக்கவேண்டும். நான்கு ஷாட்கள் தான் இருக்கும். ஆனால் 25 போடு போட்டார். இது பற்றிக் கேட்டபோது அப்பா சொன்னார், "இவன் படுத்திய பாடு தாங்காமல்போட்டேன் இதுதான் சமயம்போடுவதற்கு" என்றார். அப்பாக்களின் அவஸ்தைகள் யாருக்குத் தெரியும்? பிள்ளைகள் என்று வரும்போது தகப்பன்கள் படும்பாடு எங்களை மாதிரி தகப்பன்களுக்குத்தான் தெரியும். இந்த சபரிஷின் அப்பா கஷ்டப்பட வைக்கமாட்டார். ஆனாலும் சபரிஷ் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும். வாரிசுகள் இணைந்து உள்ள இப்படத்தை வெற்றிபெறச் செய்யவேண்டும்" என்றார்.



புலி

## "ஸ்ரீதேவி புலி கபூர்"


தென்னிந்திய சினிமாவில் 80களில் யாரும் அசைக்க முடியாத இடத்தில் திரைத்துறையில் இருந்தவர் ஸ்ரீதேவி. இவர் பொலிவூட் திரையுலகிற்கு சென்றபிறகு தமிழ் சினிமாவில் நடிப்பதை தவிர்த்து, பின் போனி கபூரை திருமணம்செய்து சினிமாவில் நடிப்பதையே நிறுத்திவிட்டார்.

நீண்ட இடைவேளைக்கு பிறகு புலி படத்தில் ஒரு முக்கியமான ராணி கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படத்தை விளம்பரப்படுத்தும் விதமாக தன் டுவிட்டர் பக்கத்தில் தன்பெயரை "ஸ்ரீதேவி புலி கபூர்" என மாற்றியுள்ளார். ஏனெனில் இப்படம் ஹிந்தியில் டப் செய்து ரிலிஸ் ஆவதால், அங்கு படத்தை விளம்பரப்படுத்தும் நோக்கம் எனக் கூறப்படுகின்றது.



பிச்சைக்காரன்

# தேன் கிண்ணம்



## என் கூப்பாடு கேட்பானா?

'கவித்தென்றல் ஏரூர்'

குமரியாக குதூகலித்தேன்
குத்தவைத்து கால் பதித்தேன்
மற்றதெல்லாம் மறந்து விட்டேன்
பெற்றவளை இழந்து விட்டேன்

சுற்று முற்று உறவுகூடி
விற்று விற்றார் உறவு தேடி
கட்டி வைத்த பாமரனை
பற்றி விட்டான் காலனவனை

பொட்டிழந்து வாழ்வதனால்
கிட்ட வரும் ஆண்களெல்லாம்
கெட்டவனா தோணுகிறது
பட்ட மரமா வாழ்வு ஆனது

பாவையென பிறந்ததனால்
பாலை வனம் ஆகி விட்டேன்
பாவங்களின் பார்வை பட
பாவியாக மாறி விட்டேன்

பண்பாட்டில் பலியானேன்
பெண்கூட்டு கிளியானேன்
கண்பட்டு கண்ணீரால் இனி,
எம்புட்டு நீராடுவேன்

முதிர்கன்னியாய் இருந்திருந்தால்
முகம் காட்டி வாழ்ந்திருப்பேன்
முக்கனி போல் நானிருந்து
முழுவதையும் இழந்து விட்டேன்

முக்காடு இட்டு கொண்டு
இக்காட்டில் வாழுகின்றேன்
இப்பாடு படுகின்றேன்
என் கூப்பாடு கேட்பானா
அந்த மேற்பாடு மேதாவி.

## நாலு கழுதையும் நாசமாப்போன ஊரும்...!



கவிஞர் அஸ்மின்

சமூகத்தின் பெயர்சொல்லி நடிக்கின்ற கயவர்கள்
சருகுக்குள் எறிகின்றார் நாளும் - நாம்
ஈயென்று அதைப்பார்த்து இருந்தாலெம் தாய்மண்ணை
ஈக்கள்தான் மகிழ்வோடு ஆளும்

காலறிவே இல்லாத கழுதைகள் கதைகேட்டு
காலமுக்கி விடுவீரா மேலும் - நாம்
நினைத்தாலே உலகத்தை நிச்சயமாய் புரட்டிடலாம்
நில் கொஞ்சம் சொல்லுவதைக் கேளும்

ஏதேதோ பொய்பேசி எம்வாக்கை எடுத்தவரின்
Cellலுக்கு Call லெடுத்து பாரும் - அந்த
தறுதலையோ Busy யென்றும் Dont Call me
என்றும்தான்
வாலாட்டும் நாய் இன்று கூறும்...

பாராளுமன்றுக்கு போகின்ற சிலராங்கு
சாப்பிடத்தான் பேய்வாயை திறப்பார் - நம்
ஊராளுமன்றத்தில் இருக்கின்ற ஊத்தைகளோ
மறந்தெம்மை கூட்டித்தான் கொடுப்பார்.

உரிமைகள், தனியலகு, தனியாட்சி என்றன்று
உளறியது அத்தனையும் மறக்கும் - தினம்
குடியோடு குடித்தனத்தை செய்கின்ற குரங்குகளின்
குடும்பங்கள் திமிரோடு நடக்கும்

நாலைந்து வருடத்தில் மறுபடியும் ஒரு தேர்தல்
நம்நாட்டில் புதிதாகப் பிறக்கும் - இன்று
பாழ்பட்ட எம்சமூகம் அத்தனையும் மறந்தன்று
பணத்துக்காய் வாக்கள்ளி கொடுக்கும்

இளைஞர்கள் வாய்பார்த்து இப்படியே நின்றிருந்தால்
இதுபோன்ற செயல் தொடராய் நடக்கும் - சிறு
தீக்குச்சி உள்ளேதான் தீப்பந்தம் இருக்கிறது - நாம்
நினைத்தாலே பெரும் புரட்சி வெடிக்கும்

காதலிலே தினம் மூழ்கி காணாமல் போகாமல்
கைகளிலே அரசியலை எடுப்பாய் - என்றும்
ஏழைகளை பொய் சொல்லி ஏமாற்றி வாழ்வோரை
எதிர்த்துநீ போரொன்றை தொடுப்பாய்...!

வீரா உன் தோளினிலே சூரியனைச் சுமந்து எழு
விடியட்டும் ஏழைகளின் கிழக்கு - நீ
அடிக்கின்ற அடியினிலே அட்ரஸ்ஸே இல்லாமல்
போகட்டும் வீற்றிருக்கும் அழுக்கு...!!

## காதல் வந்தால் சொல்லி அனுப்பு

உன் காதலுக்காக - நானும்
தினமும் உன் பின்னாலே
அலைந்தேனடி ஒரு பித்தனாக.
நானும் உன்னைப்
பார்க்கின்ற போதெல்லாம்
நீயும் என்னைப்
பாராமல்தானே - உன்
கண்கள் பணித்து நடப்பதேனோ.
ஓயாமல் துடிக்கும்
என் இதயமும் - உன்
காதலின் ஏக்கத்தால்
ஓய்ந்து விடுமோ - எனப்
புரியாமல் துடிக்கின்றேனடி.
இப்போதாவது உன்னில்
காதல் வந்தால் உனக்கும்
சொல்லி அனுப்பு எனக்கும்
இல்லை என்றால் - என்
மரணத்தின் பின்னே - ஒரு
மலர்வளையத்தையேனும்
கொடுத்து அனுப்பு!

இளம்பிறை யோகன்,
புத்தளம்.



## கல்லானதால் கருணை இல்லையா?



நித்தம் நித்தம்
உதயகாலத்தில்
அன்றலர்ந்த
சுகந்த புஸ்பங்களை
ஆரமாக தொடுத்து
பாதை பூஜை செய்து

பாமாலைகள்
பாடி நெய்
விளக்கேற்றி
சுகந்த மணம்
பரப்ப பத்தி
கொழுத்தி

தவறாமல்
நாள்தோறும்
தொழுது தொழுது
வாரம் தோறும்
நோன்பிருந்து
வரம் கேட்டும்
வரமே வேண்டாம்
சாபமாவது தராமல்

துன்பத்தில்
துடித்து
கதறியழுத போது
பாஞ்சாலிக்கு
கண்ணன் (வாசுதேவன்)
துகில் தந்து
உதவியது போல்
ஏன் கடவுளே
நீ எனக்கு
கருணை காட்டி
உதவவில்லை.
கல்லாய் இருப்பதால்
உனக்கும் கருணையில்லையா
கடவுளே!

என்.கே. வேணி,
பலாங்கொடை

## ஊமைக் காதல்



எந்தனது காதலை
உந்தனது வரிகளில்
எழுதியனுப்பி வைத்தேன்.

காதல் தோல்வி
தழுவிய இதயத்துக்கு
இதமான வருடலென...

இறவாத காதல்
இளமையதாம் என்றும்!

ஓயாது என்னை
தழுவும் தென்றலே
உன் காதலை சொல்ல
ஏன் மறுக்கிறாய்?

ஊரெல்லாம் போ
உரத்துச் சொல்லு
ஊமை காதல் இதுவென்று.

சாகாத காதலிது
வேகாது கட்டையிலும்
நோகாதே தென்றலே
கதை உனதும் தெரியும்!

என்னைப் போல்
எட்டாதென்பது தெரிந்தும்
எப்பொழுதும்
நீ...
வான் மேகம் தழுவுவதேன்
மேகம் தவளும் உனக்கு
நிலவு ஈட்டித்
தொடும் ஆசை...! நடக்காது!
எட்டாத காதலது.

காதோரம் சொன்ன
காதல் எந்தனது!
நதியோடு கரைந்தது
தெரியாதோ உனக்கு!
நிலவுதழுவுமாசை
எனக்குள்ளும்...
இருக்காதோ?

ஓயாத அலைகள்
கரையோரம்
தேயாதே மோதி
காதல் சொல்வதில்லையா?
'காய சண்டிகை' பசியோடு.

தோல்வி சுவை???
உனக்கும் எனக்கும்
பொது!!! ஏமாற்றமும்
சரிநிகர் என்பதே சரி.

காதலியைத் தேடும்... நீ...
என் காதலையும் சொல்லிவை
மூடி மறைக்காதே
காவிதரியேன் ; தாடியொடு
ஏறுவேன் மடல்?

சாகாநினைவுகள்
கொண்டுவரும்
சாவோலைகளும் அதிகம்!

காற்றோடு கலந்தவளை
காதலோடு காத்திருப்பேன்
மரங்களின் சலசலப்பில்
மறைந்திருப்பாள் அவள்... பார்!

எட்டாதென அறிந்தும்
ஓயப்போவதில்லை
நீயும் நானும் ; காதல் என்பது
பைத்தியமா?


மண்டை தீவு மகிழ்நன்



## அரசியல்

ஒன்றின் மேல் ஒன்றைக்
குறிபார்த்து எறிந்து
குண்டு விளையாடினோம்
இன்று
எவரெவரோ வந்து
எறிந்து விளையாட
நாமே
குண்டானோம்.

கே.வாலேந்திரன்,
கொள்ளுப்பிட்டி.





# இரு மலர்கள்

**பீஜிங்** நகரில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் 15 ஆவது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டிகளில் உசேன் போல்ட் 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் குறுந்தூர ஓட்டப் போட்டிகளில் தங்கப்பதக்கங்கள் வென்று அசத்தி இருக்கிறார். இந்த இரண்டு நிகழ்வுகளிலும் இவருக்குக் கடுமையான போட்டியைக் கொடுத்தவர் அமெரிக்காவின் ஜஸ்ரின் கெட்லின். அதிலும் 100 மீற்றர் ஓட்டத்தை நூறில் ஒரு செக்கன்களிலேயே கெட்லின் இரண்டாம் இடம்பெற்றார்.

எதுஎவ்வாறாயினும், 9.79 செக்கன்களில் தங்கம் வென்றதன்மூலம் போல்ட் இந்நிகழ்வின் ஆதிக்கசக்தியாகத் தன்மை நிரூபித்துள்ளார். 2008ஆம் ஆண்டு பீஜிங் ஒலிம்பிக் போட்டிகளில் இரட்டைத் தங்கம் வென்ற போல்ட் இன்றுவரை பதினொரு போட்டிகளில் போட்டியிட்டு பத்து முறை தங்கம் வென்றுள்ளார். போல்ட் இம்முறை வென்ற தங்கம் பற்றிக் கூறுகையில், இதுவே நான் பெற்ற மிகக்கடினமான தங்கம் என்றும் ஜஸ்ரின் கெட்லின் போட்டிக்கு வந்துவிட்டால் அது ஒரு புதிய வடிவத்தையே எடுத்துவிடும் என்றும் கூறியுள்ளார். இன்னும் பல வார்த்தைகளில் ஜஸ்ரின் கெட்லின் பற்றி மிக உயர்வாக போல்ட் கூறியுள்ளார்.

முன்னதாக ஜஸ்ரின் கெட்லின் இரண்டு தடவைகள் ஊக்கமருந்துப் பாவனை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர். ஆனால் அந்தச் சம்பவம் தொடர்பான கேள்விகளை போல்ட் அநாயசமாகப் புறந்தள்ளியுள்ளார். நான் முதன்மைபெறவே இங்கு வந்தேன். அதனைச் சாதித்துவிட்டேன். கெட்லின் மிகவும் திறமை நிறைந்த ஓட்ட வீரர் என்று முடித்துவிட்டார்.

இதேவேளை கெட்லின் கருத்துக் கூறுகையில், நான் மிகவும் உயர்ந்த பயிற்சிகளைப் பெற்றே இங்கு வந்தேன். என்னுடைய முழுத்திறமையையும் இங்கு வெளிப்படுத்தினேன். இறுதியாக இருந்த ஐந்து மீற்றர் தூரம்தான் மிகவும் முக்கியமானதாக இருந்தது. என்னை இயன்றளவு எல்லைக்கோட்டை முதலில் அடைய முயற்சித்தேன். சற்றுத் திரும்பிப் பார்த்தேன். போல்ட் முன்னால் சென்றுவிட்டார் என்பவர் நான் யாரிடமிருந்து தோற்பதாக இருந்தால் போல்ட் என்ற இந்த ஒரு மனிதரிடம் மட்டுமாகத்தான் இருக்கும் என்று முடித்துள்ளார் கெட்லின்.



- ஜோசப் கிருஷ்ணா -




# தொடர்ந்திருக்கலாம்...

ஆஷஸ் தொடர் முடிவடைந்துவிட்டது. ஆஷஸ் கிண்ணத்தை இங்கிலாந்து வென்றுவிட்டது. முன்னதாக அறிவித்தபடி அவுஸ்திரேலிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கிறிஸ் றொஜர்ஸ் ஓய்வு பெற்றுவிட்டார். அதே போல நான்காவது டெஸ்ட் போட்டியுடன் இன்னொரு டெஸ்ட் போட்டியுடன் ஓய்வுபெறுவேன் என்று கூறிய அவுஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க்கும் ஓய்வுபெற்று விட்டார். ஆனால் இங்கிலாந்தை இனிங்ஸ் 5 ஆவது டெஸ்டில் தோல்வியடையச் செய்தாலும் அவர்களுக்கு அது பெரிய திருப்தியைக் கொடுத்திருக்காது என்பதுதான் உண்மை.

இறுதிப்போட்டியில் தனது வீரர்களும் இங்கிலாந்து அணி வீரர்களும் தன்னை முதன்மைப்படுத்திக் கௌரவித்தது தனக்கு சிறிது சங்கடமாகவே இருந்தது என்று கிளார்க் கூறியுள்ளார். எனது கிரிக்கெட் வாழ்க்கை அற்புதமாகவே அமைந்தது. அது ஒரு டெஸ்ட் போட்டியாக இருக்கலாம் அல்லது நூறு டெஸ்ட் போட்டிகளாக இருக்கலாம். எல்லாம் ஒரே வகையான உணர்வைத் தருவதுதான் என்று கூறியவர் யாரும் இத்தகைய உன்னத கிரிக்கெட் களத்தில் இருந்து விடைபெற விரும்புவது இல்லை.

ஆனால் எனது நேரம் இதுதான் என்பதை நான் உணர்ந்துகொண்டேன். அற்புதமான கிரிக்கெட் வீரர்கள், இளம்வீரர்கள் ஆகியோருடன் இணைந்து விளையாடியமை எனக்குக் கிடைத்த வரமென்றே கூறுவேன். ஞாயிறன்று காலை இறுதிநாளாக நான் எழுந்தபோது எப்போதும் இல்லாதவாறு சிறிது உணர்ச்சிவசப்பட்டவனாக இருந்தேன். ஏனெனில் அன்றைய தினமே மைதானத்துக்குள் நுழையும் இறுதித்தருணமாக அமைந்திருந்தது என்று முடிக்கிறார்.

34 வயதான கிளார்க் இந்தத் தலைமுறையின் அதி சிறந்த துடுப்பாட்ட வீரர். உலகக் கிண்ணம் வென்ற அணித் தலைவர். இவர் 115 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 28 சதங்கள் அடங்கலாக 8643 ஓட்டங்கள் குவித்தவர். இவர் தானாகவே சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து விலகிக்கொண்டார். ஆனால் வெளிப்படுத்த வேண்டிய திறமைகள் இன்னும் சில வருடங்களுக்கு இருக்கும்போதே அவசரப்பட்டுவிட்டார் என்பதே உண்மை.



# நுட்பங்கள் தேவை

இரண்டு ஆசிய அணிகள் ஆசிய மைதானங்களில் விளையாடும்போது, சுழல் பந்துவீச்சை எதிர்கொள்வது அவர்களுக்குச் சிரமமாக இருப்பதில்லை. இதனை ஏற்றுக்கொள்ளும் முன்னாள் இலங்கை அணித் தலைவர் சனத் ஜயசூரிய இதனை சிறிது வித்தியாசமாக நோக்குகின்றார்.

இலங்கை வீரர்கள் சுழல் பந்துவீச்சை எதிர்கொள்வதில் இடர்களை எதிர்கொள்வது குறைவுதான். ஆனால், அதியுயர் தரம்வாய்ந்த சுழல் பந்துவீச்சாளர்களை எதிர்கொள்ளும்போது தடுமாறிவிடுகிறார்கள். இந்தியா, இலங்கை அணிகள் இரண்டிலேயும் சிறந்த சுழல் பந்துவீச்சாளர்கள் இருக்கிறார்கள். நமது பக்கம் ரங்கண ஹேரத், இந்திய அணியில் ரவிச்சந்திரன் அஸ்வின் இதேபோல, இந்திய சுழல் பந்துவீச்சாளர் அமித் மிஸ்ராவும், எமது தரிந்து கௌஷாலும் வீரர்களே.

ஆனாலும் ஒப்பீட்டளவில் இந்திய துடுப்பாட்ட வீரர்களைவிட, எங்கள் துடுப்பாட்ட வீரர்கள் சுழல்பந்து வீச்சை எதிர்கொள்வதில் சிரமத்தை எதிர்கொண்டதை அவதானிக்கமுடிந்தது. இதற்கு வேறு சில காரணங்கள் இருந்தாலும், வீரர்களின் அதீத நம்பிக்கையும் அவர்கள் தவறுசெய்து இலக்கை இழப்பதற்குக் காரணமாக இருக்கிறது என்று எண்ணுகின்றேன் என்று கூறியுள்ளார். துடுப்பாட்ட வீரர்கள்கூடிய அவதானம் செலுத்தவேண்டும் என்பதுடன் பல நுட்பங்களையும் அறிந்துகொள்ளவேண்டும் என்பதே அவரின் கருத்தாக இருக்கிறது.

மேலும் விராட் கோஹ்லியின் தலைமைத்துவம் பற்றிக் கூறுகையில், அவர் சிறந்த அணித்தலைவராக வருவார். தற்போது அனுபவம்வாய்ந்த வீரர்கள், பயிற்றுனர், நிர்வாகம் போன்றவர்களின் ஆதரவு அவருக்கு அவசியம் தேவை என்றும் கூறியுள்ளார்.

# குமார் சங்கக்காரவிற்கு வாழ்த்துக்கள்



**பிறப்பு:-** 1977.10.27 (மாத்தளை),

**டெஸ்ட் அறிமுகம் :-** 2000 (எதிர் தெ. ஆபிரிக்கா) இடதுகைத் துடுப்பாட்ட வீரர், விக்கெட் காப்பாளர்.

**டெஸ்ட் விபரங்கள்:-**

ஆட்டங்கள் :- 134, இனிங்ஸ் 233, ஆட்டமிழக்காமல் 17, ஓட்டங்கள் 12400.

அதிகூடிய ஓட்டம் :- 319, சதங்கள் 38, அரைச்சதங்கள் 52.

* 2012 இல் ஐ.சி.சி சிறந்த டெஸ்ட் வீரர். இரட்டைச்சதங்கள் பதினொன்று. (டொன் பிரட்மன் முதன்மை பன்னிரண்டு)

*சதங்களில் நான்காவது இடம்: 38, சச்சின் - 51, கலிஸ் - 45, பொன்ரிங் 41, சங்கக்கார - 38.

* அரைச்சதங்கள் பட்டியலில் ஏழாவது இடம் - 52 அரைச்சதங்கள்.

* தொடர்ச்சியாக 4 டெஸ்ட் போட்டிகளில் 150 ஓட்டங்களுக்கு மேல் சேகரித்த முதல் வீரர்.

* மிகவேகமாக எண்ணிக்கை கடந்த சாதனை. 8000 ஓட்டங்கள் (152 இனிங்ஸ்சுகள்), 9000 ஓட்டங்கள் (172 இனிங்ஸ்சுகள்), 11000 ஓட்டங்கள் (208 இனிங்ஸ்சுகள்), 12000 ஓட்டங்கள் (224 ஓட்டங்கள்).

அதிகூடிய இணைப்பாட்ட முதன்மைச் சாதனை. 624 ஓட்டங்கள். (சங்கக்கார 284 - மஹேல 374 ஓட்டம். எதிர் தென்னாபிரிக்கா 2006.)

ஒரு வருடத்தில் அதிகூடிய ஓட்டங்கள். 1483 ஓட்டங்கள் - 2014, 4 சதங்கள், 9 அரைச்சதங்கள்.

| | டெஸ்ட் | ஒரு நாள் | இருபதுக்கு இருபது (சர்வதேச) | ஐ.பி.எல். |
|---|---|---|---|---|
| ஆட்டங்கள் | 134 | 404 | 56 | 71 |
| இனிங்ஸ்கள் | 233 | 380 | 53 | 68 |
| ஓட்டங்கள் | 12400 | 14234 | 1382 | 1687 |
| அதிகூடிய ஓட்டங்கள் | 319 | 169 | 78 | 94 |
| சதங்கள் | 38 | 25 | - | - |
| அரைச்சதங்கள் | 52 | 93 | 8 | 01 |




## பிளவுஸ் ஃபெஷன்









### பெண்களுக்கான டிப்ஸ்



ஆள்பாதி ஆடைபாதி என்பார்கள். பெண்களின் அழகில் ஆடையின் பங்கு முக்கியமானது. ஆடை அணிவது முதலில் வசதிக்காகக் தான். உடலை கவ்விப்பிடிக்கும் ஆடைகளை தவிர்ப்பது நல்லது. அதேசமயத்தில் ரிலாக்ஸ்டாக இருக்கிறது என்று ஓவராக தொள தொளவும் வேண்டாம். கச்சிதமாக இருப்பதே அழகு.

**கம்பீர அழகு**

வேலைக்கு போகும் பெண் களுக்கு புடைவை கம்பீரமாக இருந்தாலும், இன்றைய சூழலில் அதை எப்போதுமே கட்டமுடியாது. சுடிதார், சல்வார் கமீஸ் போன்ற ஆடைகளே சௌகரியமானது. உடல் உழைப்பு அதிகம் தேவைப்படுகிற வேலை என்றாலும் ஜீன்ஸ் சௌகரியம், வெளியூர் அல்லது உல்லாசப் பயணத்துக்கு ஜீன்ஸ் எப்போதும் வசதிதான். பணியிடத்தில் இடுப்பு அல்லது பின்புறம் முழுமையாக தெரியும் வகையிலான குட்டை டொப்ஸை தவிர்ப்பது நல்லது.

பொறுப்புள்ள பணியில் இருப்பவர்கள் ஓரளவு டல் கலரில் பேண்ட்டும் அதே துணியில் முக்கால் கைச்சட்டையும் அணியும்போது அசத்தலாக தோற்றமளிக்கும்.

**சத்தான உணவு தேவை**

காலையில் சீக்கிரம் எழுந்து லேசான உடற்பயிற்சி. பிறகு அரை டம்ளர் எலுமிச்சை ஜூஸ். இதனால் உங்களுக்கு பசி ஏற்படும். பின்னர், நன்றாக குளித்துவிட்டு, பச்சைக் காய்கறிகள் மற்றும் பழவகைகள் சேர்ந்த உணவு, அவசரமாக சாப்பிடவேண்டாம். விருப்பமானதை மெதுவாக சாப்பிடவும்.

**கட்டமைப்பான உடல்**

பெண்களின் மார்பளவும், இடுப்பளவும் ஒன்றாக இருக்கவேண்டும். இடையளவு அதைவிட 25 செ.மீ. குறைவாக இருக்கவேண்டும். வயிற்றில் மடிப்பே விழக்கூடாது. இடையைவிட தொடைகள் 12 செ.மீ குறைவாக இருக்கவேண்டும். ஒரு பெண்ணுக்கு அழகான தோற்றம் தரும் கட்டமைப்பு இது. உடலமைப்பு இப்படி இருந்தால்தான் அழகாக இருக்கும் என்று வரையறை எதுவும் இல்லை.

உயரமோ, குட்டையோ எப்படி இருந்தாலும், அதற்கேற்ப நமது உறுப்புகள் சரியாக இருந்தால் அழகுதான்!

நன்றி - இணையம்



# சமுதாய எழுச்சியில் பெண்களின் நிலை!

சமுதாய எழுச்சியில் பெண்களின் வகிக்கும் பங்கு அளப்பரியது. பெண்களை புறந்தள்ளிய எந்தவொரு சமூகமும் தேசிய சங்கமிப்பை ஏற்படுத்திக் கொண்டதாக சரித்திரமே இல்லை. இதனை உலக வரலாறுகள் நிரூபித்துள்ளன. எனினும் தந்தை வழி சமூக அமைப்பு என்று கூறப்படும் கருத்தியலின் அடிப்படையில் ஆணாதிக்க தன்மை மேலோங்கியுள்ள நிலையில் பெண்களின் கருத்துக்கள் எந்தளவுக்கு உள்வாங்கப்படுகின்றன என்பதும் சமூகமட்டத்தில் அவர்களது தேவைகள் எந்தளவுக்கு பூர்த்தி செய்யப்படுகின்றன என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது.

பெண்கள் சமூகத்தின் கண்கள் என்பது ஆண் களாலும் உச்சரிக்கப்படுகின்ற ஒரு விடயமாகும். எனினும் இது வெறும் வாய்மொழிக்கூற்றாகவே உள்ளதேயன்றி நடைமுறையில் பெண்கள்சார் அபிவிருத்தியினை ஏற்படுத்திக்கொடுப்பதற்கும் மேலெழச் செய்வதற்கும் ஆண்களின் ஒத்துழைப்பு போதுமானதாக அமையவில்லை. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பெண்கள் இன்று பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுத்து வருவதனை எம்மால் அறிந்துகொள்ள முடிகின்றது. அரசியல், சமூகம், பொருளாதாரம், பாதுகாப்பு போன்ற பல்வேறு மட்டங்களில் பெண்கள் இன்னும் குறிப்பிடத்தக்க எழுச்சி காணவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

சமத்துவத்தின் அடிப்படையில் பெண்களின் அரசியல் பங்களிப்பை பலப்படுத்துவதும் மற்றும் சமூக, பொருளாதார அரசியல் தளங்களில் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் பெண்களின் பாத்திரத்தை பலப்படுத்துவதும் இருபதாம் நூற்றாண்டின் பெண் களின் உரிமைக்கான போராட்டத்தின் பிரதான நோக்கமாக இருந்ததென சுனிலா அபேசேகர போன்ற பெண்ணிலைவாதிகள் சுட்டிக்காட்டி இருக்கின்றனர். எனினும் இந்த இலக்குகள் எந்தளவுக்கு அடையப்பட்டிருக்கின்றன என்பதில் ஐயப்பாடுகள் வலுப்பெற்றுள்ளன.

இந்த வகையில் அரசியல்துறையை எடுத்துக் கொண்டால் பெண்களின் குடும்பக் கட்டமைப்பு பெண்கள் அரசியல் துறையில் நுழைவதனை தடுக்கின்ற பிரதான காரணியாக விளங்குகின்றது. பெண்கள் அமைதியானவர்கள், சமூக செயற்பாடுகளில் ஆண்களே பிரதான சூத்திரதாரிகளாக விளங்க வேண்டும் என்ற பாரம்பரிய சமுதாய கோட்பாடுகள் பெண்களை அரசியல் துறையில் நுழையவிடாது தடுக்கும் பிரதான சக்தியாக இனங்காணப்படுகின்றது. எனவேதான் வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டிவைக்கும் விந்தை மனிதர்களுக்கு எதிராக பாரதிபோன்ற சமூகச் சாரதிப் புலவர்கள் பேனை தூக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவானது.

பிரித்தானியாவில் பங்க்ஹேர்ஸ்ட் அன்னையும் புதல்வியரும் அமெரிக்காவில் எலிசபெத் சென்ட்டன் மற்றும் சூசன் அந்தனி மற்றும் இலங்கையில் அக்னஸ் டீ சில்வா டேசி பண்டாரநாயக்கா, நேசம் சரவணமுத்து போன்ற பெண்களும் தமது குடும்பங்களில் இருந்தும் சமூகத்தில் இருந்தும் எழுந்த எதிர்ப்புக்களை பொருட்படுத் தாது போராட்டம் மேற்கொண்டமைக்கான காரணம் பெண்களுக்கு சமமானதும் சுயாதீனமானதுமான இருப்பொன்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்கேயாகும் என்பதனை நாம் மறந்துவிடலாகாது.

பெண்கள் போராடி சர்வஜன வாக்குரிமையை பெற்றுக் கொண்டுள்ளபோதும் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறிப்பிடத்தக்கதாக இல்லை என்பதனை டல்சி த சில்வா போன்றவர்கள் தெளிவுபடுத்துகின்றனர். 1931 ஆம் ஆண்டு சட்டசபையில் பெண்கள் ஐந்து சதவீதத்தினர் மட்டுமே பிரதிநிதித்துவம் வகித்துள்ளனர். 1994 இலும் இது ஐந்து சதவீதமாகவே இருந்துள்ளதோடு 2003 காலகட்டத்தில் இது நான்கு சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. பெண்கள் எவ்வளவுதான் பலம் உள்ளவர்களாக இருப்பினும் தீர்மானம் எடுக்கின்ற செயற்பாடுகளுக்குள் அவர்கள் நுழைவதற்கான இடைவெளி மிகவும் குறைவாகவே இருக்கின்றது. 1931 ஆம் ஆண்டு பாராளுமன்றத்துக்குள் நுழைந்த முதலாவது பெண்மணியாக திருமதி எட்வின் மொலமுரே வரலாற்றில் இடம்பிடிக்கின்றார்.

மலையக அரசியல் களத்தில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் பொதுவாக குறைவடைந்து காணப்படுகின்றது. இதற்கு மலையக அரசியல் தொழிற்சங்கவாதிகள் ஆணாதிக்க தன்மையினை பேணுவதே காரணமாகும் என்ற குற்றச்சாட்டு பரவலாக இருந்துவருகின்றது. இவற்றுக்கும் மத்தியில் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் அமரர் சந்திரசேகரனின் மறைவையடுத்து தற்போது இம்முன்னணியின் தலைவியாக அவரது பாரியார் சாந்தினி சந்திரசேகரன் பொறுப்பேற்றுள்ளமை மலையக தொழிற்சங்க அரசியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனை என்றே கூறவேண்டும்.

அரசியல் துறை ஒருபுறமிருக்க, பொருளாதாரத் துறையை எடுத்துக்கொண்டால் பெண்களின் உழைப்பை உறிஞ்சுகின்ற சமூகமாக ஆணாதிக்க சமூகம் இருந்து வருவதனை கண்கூடாக காணமுடிகின்றது. ஏழ்மை சூழலைக்கொண்ட குடும்பங்களில் நாம் இதனை தெளிவாகக் காணமுடியும். பெண் களின் உழைப்பில் குளிர்காயும் ஆண்கள் பெண்களை அடிமைநிலையில் இழிவுபடுத்தி உள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். பாதுகாப்பற்ற சமுதாயச் சூழலில் பலிக்கடா ஆகும். தன்மைகொண்டவர்களாக பெண்களே விளங்குகின்றனர். பெண்களின் உடல்ரீதியான அமைப்புகள் மற்றும் ஈர்ப்புத் தன்மை என்பன பெண்களை எளிதில் பலிக்கடாவாகும் தன்மை க்கு இட்டுச் செல்கின்றன. பஸ்வண்டியில்கூட சுதந்திரமாக பயணம் செய்யமுடியாத நிலை யில் ஆண்களின் சேஷ்டைகள் பெண்களை ஆக்கிரமித்துள்ளன.

படைக்கலப் பிரிவினர் உறவுகளின் முகம் தெரியா கட்டாயக் கடமைகளில் ஈடுபட்டுள் ளோர் போன்றோராலும் யுத்த சூழ்நிலை நிலவும் நாடுகளிலும் பெண்களே பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாவது புதிய விடயமல்ல. சோவியத் போன்ற நாடுகளில் இரவுவேளைகளில் பெண்கள் தனியாக வீதியில் நடந்து செல்வதற்கோ அல்லது வாகனங்களை செலுத்துவதற்கோ இயலுமான சூழ்நிலை நிலவுகின்ற போதும் எமது நாட்டில் இத்தகையதொரு சூழலுக்கு இன்னும் வித்திடப்படவில்லை என்பதையும் பெண்ணிலைவாதிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தொடரும்...

**250/= பரிசு** **வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

**பரிசுப் போட்டி இல :-485**

**கேள்வி: உலகில் பாராளுமன்றத்துக்குச் சென்ற முதலாவது பெண்மணி?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 14. 09. 2015**

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 485
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

**பரிசுப் போட்டி இல :- 483 இற்கான விடை :-**
பொருள்சேர்ப்பில் பங்கெடுக்கத் தொடங்கி வீட்டுக்கு வெளியே சென்றுவருவாய் ஈட்டத் தொடங்கியபோது.

**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி :-**
**எம்.கானன்,**
**பிரதான வீதி, புத்தளம்,**

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

**485**

பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

தே.அ. அட்டை இல : ..............................

விடை : ..............................

..............................

கையொப்பம் : ..............................

# இலங்கையின் சமூக பொருளாதார வாழ்வு ஜனநாயக மயப்படுமா?



வெகுஜன முகம் கொண்ட சமூக பொருளாதார சுற்றாடல் கட்டமைப்பு குறித்து, ஏற்றத்தாழ்வான சமூக அமைப்பை தகர்ப்பதிலேயே ஒரு முற்போக்கு சமூக இயக்கத்தின் இலக்கு பூர்த்தி செய்யப்படுகிறது.

ஆனால் இலங்கையில் அதற்கான சாத்தியங்கள் அண்மைக் காலத்தில் இல்லை எனலாம். ஆனால் சமூக நீதிக்கான இயக்கங்கள் இடையறாது நிகழ்ந்து கொண்டேயிருக்கும். இது இயக்கவியல் நியதி.

அந்த இயக்கம் சமூக அரசியல் தளத்தில் சாதாரண மக்கள் செயற்படுவதற்கான இடைவெளியை அதிகரிப்பதன் ஊடாக ஒரு கட்டத்தில் குணாம்சரீதியான மாற்றத்தை அடையும் என நாம் எதிர்பார்க்கலாம். அதிகார மட்டத்தில் நெகிழ்வுத் தன்மை தேவை என்ற மக்களின் எதிர்பார்ப்பு ஜனாதிபதியின் விசேட அதிகாரங்களை குறைப்பது, பாராளுமன்றத்தின் அதிகாரங்களை அதிகரிப்பது. சுதந்திர நீதிச் சேவை பொலிஸ் சேவை பொது சேவை தேர்தல் ஆணைக்குழுக்களை அமைப்பது. தகவல் அறியும் உரிமை என நிலைமைகளை உருவாக்குவதற்கான திறந்த மனதுடனான கலந்துரையாடல் உண்மைகளை கண்டறிதல், இந்த காலம்பூராவும் அனைத்து தரப்பிலும் கொல்லப்பட்டவர்கள், காணாமல் போனவர்கள், சித்திர வதைகளை அனுபவித்தவர்கள், உறவுகளைத் தொலைத்தவர்கள், ஊனமுற்றவர்கள், ஏதிலிகள் ஆனவர்கள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் தொடர்பாக உணர்வுபூர்வமான அக்கறைகள், நீதி நிலைநாட்டப்படுதல் அவசிய சுகாதாரம், வீடு, மக்களின் போக்குவரத்து, சுற்றாடலுக்கு தீங்குவிளைவிக்கும் கழிவுகளை அகற்றுவது, மீள்சுழற்சி செய்வது,

புகையில்லா பாதுகாப்பான காற்று மற்றும் நீர்நிலைகளின் பாதுகாப்பு போன்ற விடயங்களில் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வது உள்ளிட்ட விடயங்களில் பிரயாசையுடன் கூடிய கரிசனை தேவைப்படுகிறது.

காப்பிரேட்டுக்களின் விஸ்தரிப்பு சமூகத்தை தானாகவே வளர்ச்சி யடையச் செய்துவிடும் என்பதெல்லாம் மாயாஜால விபரீதமான எண்ணங்களாகும். அது ஏற்றத்தாழ்வை இடைவெளியை அதிகரிப்பதோடு பாரிய சுற்றாடல் அழிவுகளையும் ஏற்படுத்தும்.

உலகம் முழுவதும் அதுதான் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. கார்ப்பிரேட் உலகம் இப்புவியில் மக்கள்வாழ்வதற்கான நிகழ்தகவைக் குறைத்துக் கொண்டுவருகிறது. எனவே பேண்தகவு அபிவிருத்தி மேற்கொள்ளப்படவேண்டியிருக்கிறது.

இயற்கையில் நிகழும் மாற்றங்கள் பல்லாயிரம் ஆண்டுகள் ஊடாக நிகழ்பவை. மனிதகுலம் அல்லது சமூகத்தில் நிகழும் மாற்றங்கள் ஒரு சில ஆயிரம் ஆண்டுகளாக நிகழ்பவை. ஆனால் மனித வாழ்வு, இயற்கை வினை - எதிர் வினை எல்லாம் இப்போது அக்கம் பக்கமாக வந்துவிட்டன.

இயற்கையின் மாற்றங்களும் மனித வாழ்வும் ஒன்றையொன்று நெருங்கியிருப்பது குணாம்ச ரீதியான மாற்றமாகும். இது சமூகத்தில் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறதா? அல்லது புரியவைக்கப்பட்டிருக்கிறதா என்பது முக்கியமான கேள்வியாகும்.

இலங்கையில் கடலோர அனர்த்தங்கள் மற்றும் நாட்டினுள் நன்நீர் பாதுகாப்பு என்பன பெரும் சவால்களாக உருவெடுத்து வருகின்றன. இந்த சவால்களை எதிர்கொள்ளத் தேவையான கவனம் - கரிசனை நிகழ்ந்திருக்கிறதா என்பது முக்கியமான கேள்வியாகும். இவை தனியே இலங்கையின் பிரச்சினை அல்ல. உலகளாவியவை.

மனிதர்களுக்கும் ஜீவராசிகளுக்கும் பாதுகாப்பான வாழ்க்கை தேவைப்படுகிறது. கொடுக்கல், வாங்கல்கள், பேரங்கள், கமிசன்கள், வளச் சூறையாடல், கபளீகரங்களில் ஈடுபடும் அரசியல்வாதிகளால் இந்தப் பிரச்சினைகள் புரிந்து கொள்ளப்படமுடியாது. அதற்கு அவர்கள் முயலவும்மாட்டார்கள். அராஜக நுகர்வு கலாசாரத்தில் அற்பத்தை மக்களுக்கெறிந்து இழிவுசெய்து மற்றும் படி கார்ப்பிரேட் மற்றும் தமது நலன்களை பாதுகாத்துக் கொள்வார்கள். காப்பிரேட் உலகத்தின் ஆதிக்க அரசியல் இவ்வாறுதான் அமைகிறது. வெகுஜன ஊடகங்கள் என்று சொல்லப்படுபவையும் இதனையே செய்துகொண்டிருக்கின்றன.

சமூக ஏற்றத் தாழ்வைக் குறைப்பது - சமூக பாதுகாப்பை அதிகரிப்பது - சுற்றாடல் மற்றும் மனிதர்களிடையேயான உறவில் சமநிலையை ஏற்படுத்துவது. இவை இலங்கைக்கு மாத்திரமல்ல உலகளாவிய அளவில் அவசியமான நிகழ்ச்சி நிரல்களாக உள்ளன.

வேறு கிரகங்களில் மனிதர்கள் சென்று வாழமுடியாது. இந்தப் புவிக்கோளில் மனிதகுலத்தின் வாழ்வா, பேரழிவா என்பதுதான் இன்றைய முக்கிய கேள்வியாகும். ஆங்காங்கே காடுகள் தொழில் நகரங்கள் தீப்பற்றுகின்றன. சமூக மோதல்கள் போர்கள் சண்டைகள் வன்முறைகள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

இந்த நிலைமை வெற்றிகரமாக சமாளித்து தாம் வாழ்ந்துவிடலாம் என நினைக்கும் உலகத்தை பேரழிவின் விளிம்பில் நிறுத்தி வைத்திருப்பவர்களுக்கும் விதிவிலக்கானதல்ல. எனவே நாடும் மக்களும் பாதுகாக்கப்பட வேண்டும். நாடு, இனம் என்ற அகநிலைகளில் மாத்திரமல்ல. உலகளாவிய அளவிலும் இவற்றுக்காக செயற்பட வேண்டும்.இந்தப் பிரக்ஞை சமூக அரசியல் பொருளாதார தளங்களில் அதிகரிக்கப்பட வேண்டும்.

சாடைமாடையான நெகிழ்வுகள் நிகழ்ந்துள்ளன. ஆனால் இவை போதியவை அல்ல.

தேர்தல்களைக் கண்காணிப்பதற்கான கபே அமைப்பின் தலைவர் தென்னக்கோன் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டுமென அண்மையில் கோரியிருந்தார்.

ஆனால் தற்போதைய ஆளும் தரப்பு அது தொடர்பில் தயக்கமான அறிக்கையையே வெளியிட்டது. குறிப்பாக வடக்கு, கிழக்கிலும் நாடளாவிய அளவிலும் இராணுவமயப்பட்ட நிலையிலும் தளர்வு ஏற்படவேண்டும்.

திரும்பத் திரும்ப மனித பேரழிவுகளினூடாக இந்த நாடுசெல்வதை தவிர்ப்பதும் முற்றுப்புள்ளிவைப்பதுமானது. குறிப்பாக பொதுமக்கள் தொடர்பானது.

இறுதி யுத்தத்தில் மாத்திரம் என்றில்லாது யுத்தத்தின் மனித உரிமை மீறல்கள் அனைத்து காலங்களிலும் அனைத்து தரப்பினரதும் என்றவாறு அமைய வேண்டும். இலங்கையின் வாழ்வை செம்மைப்படுத்துவதற்கு இது மிகமிக அவசியமானது.

இனப்பிரச்சினைக்கு கபடத்தனங்களுக்கு இடமளிக்காத தெளிவான தீர்வு. நடைமுறையில் இந்த நாட்டை பல இன சமூகங்களின் நாடாக உறுதிப்படுத்துவது. மதச்சார்பற்ற நாடென்ற நிலைக்கு கொண்டு வருவது.

நாட்டில் நிலவும் மதரீதியான பதட்டங்கள் இதன் அவசியத்தை உணர்த்துகின்றன. கல்வி,

-நன்றி இணையம்-

# நாசி படையினரின் தங்க ரயில் மர்மம் என்ன?





**இரண்டாம்** உலகப்போரின் போது நாசி படையினர் ஜெர்மனிக்கு அனுப்பிய தங்க ரெயில் ஒன்று அண்மையில் போலந்து நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. போலந்து நாட்டின் வால்பிரைக் நகர அரசியல்வாதிகள் இந்த இராணுவ ரெயிலை உறுதி செய்தநிலையில், அதில் என்ன இருக்கிறது என்பதை வெளியிடவில்லை.

அவை நாசி படையினரால் பயன்படுத்தப்பட்ட ஒன்றா என்பதையும் அவர்கள் தெரிவிக்கவில்லை. அதில் தங்கம் மற்றும் ரத்தினங்கள் ஆகியவை நிரப்பப்பட்டு உள்ளன என ஆய்வு பணி அதிகாரிகள் கூறியுள்ளனர். கடந்த 1945ஆம் ஆண்டு நடந்த இரண்டாம் உலகப் போரின்போது யூதர்களிடம் இருந்து நாசி படையினர் தங்கப் புதையலை அள்ளி சென்றுள்ளனர். அவற்றை ரெயில் ஒன்றில் வைத்து புடாபெஸ்ட் நகரில் இருந்து ஜெர்மனிக்கு அனுப்பியுள்ளனர். அது லோயர் சைலேசியன் மலை பகுதியில் சியாஸ் கேசில் என்ற இடத்திற்கருகே குகை ஒன்றுக்குள் சென்று அதன்பின்பு வெளியே வரவே இல்லை என கூறப்படுகிறது.


அதன்பின் அந்த குகை மூடப்பட்டு நீண்டகாலம் அதன் இருப்பிடம் குறித்த தகவல் யாருக்கும் தெரியாமல் மறந்து போய்விட்டுள்ளது.

அந்த பகுதியின் ஆளுநர் கூறும்போது, கவனமுடன் அதனை கண்டுபிடிப்பது குறித்து பணியாற்றவேண்டும் என கூறியுள்ளார். அவர், பொதுமக்களின் பாதுகாப்பு மிக முக்கியம். தங்க ரெயில் இருப்பது உண்மையெனில் அது புதைந்துபோய் இருக்கக் கூடும். இங்கு மீத்தேன் இருக்கும் சாத்தியம் அதிகம் எனக் கூறியுள்ளார்.

இது குறித்து வழக்கறிஞர்கள், இராணுவம், பொலிசார் மற்றும் தீயணைப்பு படையினர் ஆகியோர் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என அதிகாரி ஒருவர் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார். நாசி படையினர் 24 சரக்கு பெட்டிகளில் தங்க ரெயிலை அனுப்பியுள்ளனர். அதில், ஹங்கேரி நாட்டு யூதர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட தங்கம், வெள்ளி மற்றும் விலை மதிப்புமிக்க ஓவியங்கள் ஆகியவை இருந்துள்ளன. அவற்றின் மதிப்பு 1,320 கோடி இருக்கும் எனக் கூறப்படுகிறது.

# விமர்சனம்

நூலின் பெயர் – ஆஷா நாயும் அவளும்
நூலாசிரியர் – யோ. புரட்சி
வெளியீடு – இலண்டன் மற்றும் இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம்
விலை – 220 ரூபாய்




போர்க்காலச் சூழலில் தோன்றும் படைப்புக்கள் அக்காலம் சார்ந்த நிலைமைகளை மிகத் துல்லியமாக எடுத்துக்காட்டும். போரின்போது வெளிப்படுத்தப்படாத விடயங்கள் இன்று போரின்பின்னரான காலங்களில் படைப்புகளாக வெளிவந்துகொண்டிருக்கின்றன. அவை அக்கால சூழ்நிலையில் மக்கள் அனுபவித்த துன்பங்களை வெளிப்படுத்திக் காட்டுகின்றன.

ஒவ்வொரு கணமும் உயிருக்காகப் போராடி, அடுத்த நிமிடம் வாழ்வோமா, சாவோமா என்றநிலையில் இருக்கும் போதும், தாம்பட்ட துன்பங்கள் மக்களிடம் சென்றடையவேண்டும் என்று அவற்றை தத்ரூபமாகப் படைப்பாக்கும் திறமை நம்நாட்டில் பலருக்கு வாய்த்திருக்கின்றது. அந்த வகையில் வள்ளுவர்புரம் யோ.புரட்சி தான் வாழ்ந்த சூழ்நிலையை தன் எழுத்துக்கள்மூலம் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

இடம்பெயர்ந்த ஊரில் இடம்பெயரா நாய் என்பது இவரது முதலாவது கவிதைத் தொகுதி. அடுத்தது, எதிர்வீட்டு நாயும் என் ஏழை நாயும் என்ற கவிதைத் தொகுதி. இந்தத் தொகுதியின் வெளியீட்டு விழா கடலில் நிகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. அதைத் தொடர்ந்து ஆஷா நாயும் அவளும் என்ற சிறுகதை நூலினூடாக மீண்டும் வாசகரைச் சந்திக்கின்றார் யோ.புரட்சி. இந்த நூல் காட்டில் வைத்து வெளியிடப்பட்டிருக்கின்றது. இலங்கையின் முன்னணிப் பத்திரிகைகளில் அதிக ஆர்வமாக எழுதி வரும் இளம் எழுத்தாளர்களின் வரிசையில் குறிப்பிடத்தக்கவர் இவர். தன் எழுத்தாற்றல்மூலம் வாசகர்களின் இதயத்தில் வாழ்ந்துகொண்டிருப்பவர்.


"இந்நூலில் உலாவரும் கதைகள் பத்திரிகைகளில் தவழ்ந்தபோது பாராட்டிய அநேகர்க்கு, அவற்றை எழுதி தபாலிடுவதற்கு நான்பட்ட பாடுகள் தெரிந்திட வாய்ப்பில்லை" எனக் குறிப்பிடும் யோ.புரட்சி தன் தாயின் ஆசிச்செய்தியை தனது எல்லா நூல்களில் சேர்த்துவருவது குறிப்பிட்டு பாராட்டக்கூடியதொரு அம்சம் எனலாம்.

இந்நூலுக்கு கருத்துரை வழங்கியிருக்கும் வவுனியூர் இரா.உதயணன் அவர்கள் "இந்தச் சிறுகதைத் தொகுப்பின் தலைப்பு முதலில் என்னை ஒருவித மாற்றுச் சிந்தனைக்கு தள்ளியபோதும், படித்தபோதே அதன் மறுபக்கம் தெரிந்தது. ஆஷா நாயும் அவளும் என்பதும் ஒரு காலத்தின் பதிவு" என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

இலண்டன் மற்றும் தமிழ் இலக்கிய நிறுவகம் வெளியிட்டிருக்கும் இத் தொகுதி பதினொரு கதைகளை 62 பக்கங்களில் உள்ளடக்கியிருக்கின்றது. இதில் காணப்படும் கதைகள் எல்லாம் சமூகத்துக்கு ஒரு செய்தியை சொல்வதுடன், யுத்தகால சூழ்நிலைக்குள் வாசகரை கூட்டிச்செல்லும் அற்புதத்தையும் கொண்டிருக்கின்றன.

காதல் என்ற மந்திரச்சொல் இன்று தந்திரச்சொல்லாக உருவெடுத்து இருக்கின்றது. காதல் தெய்வீகமானது என்ற நிலைமைமாறி காதல் மாயையானது என்றநிலை தற்போது உருவாகியிருக்கின்றது. காரணம் காதல்கள் இன்று காமத்தை நோக்கமாகக் கொண்டிருக்கின்றமை தான். எவ்வளவுதான் உயிருக்குயிராக காதலித்தபோதும் கல்யாணம் ஆகும் வரைக்கும் எல்லைமீறக் கூடாது. அவ்வாறு நிகழ்ந்துவிட்டால் ஒரு பெண்ணுக்கு, சமூகத்தாலும், இயற்கையாலும் பாதிப்பு அதிகமாக ஏற்படுகின்றது. வலிந்து வலிந்து காதலிக்கும் சில ஆண்கள், காரியம் கைகூடியதும் ஒளிந்துக்கொள்கின்றார்கள். அவ்வாறான தொரு கதைப் பின்னணியை வைத்து எழுதப்பட்டிருப்பதே காதல் அவசரம் (பக்கம்:01) என்ற முதல் கதையாகும். வீட்டாரிடம் பொய்சொல்லிவிட்டு காதலனுடன் 'மியூசிக் புரோகிராம்' செல்லும் பெண், இரவானதும் காதல-னுடன் லொட்ஜுக்குச் செல்கின்றாள். பஞ்சும் நெருப்பும் பக்கத்தில் இருக்கின்றது. பற்றாமல் வேறென்ன செய்யும்? காதலி பொய்யாக தடுக்கின்றாள். ஆனால் காதலனின் "என்னில் நம்பிக்கையில்லையா?" என்ற கேள்வி அவளுக்கு நம்பிக்கையைத் தர அவள் தன்னை அவனிடம் இழந்துவிடுகின்றாள். அந்த இரவில் செய்த தவறு சிலநாட்களில் வெளிச்சமாகிறது. அவன் குழந்தை, அவள் வயிற்றில் வளர்கிறது. ஆனால் அவனைக் காணோம். வெளிநாட்டுக்கு அவன் சென்றுவிடுகின்றான். அவளது வாழ்க்கை இருண்டுபோகிறது. அவளோ வாழ்வதற்கு வழியின்றி தன் குழந்தையுடன் மகளிர் இல்லம் நோக்கிச் செல்வதாக கதை நிறைவடைகின்றது.

மாறுகிறாள் மனைவி (பக்கம்: 14) என்ற சிறுகதை நகைச்சுவையாகவும்,



**காதல் என்ற மந்திரச்சொல் இன்று தந்திரச் சொல்லாக உருவெடுத்திருக்கின்றது. காதல் தெய்வீகமானது என்ற நிலைமை மாறி காதல் மாயையானது என்ற நிலை தற்போது உருவாகியிருக்கின்றது. காரணம் காதல்கள் இன்று காமத்தை நோக்கமாகக் கொண்டிருக்கின்றமைதான். எவ்வளவுதான் உயிருக்குயிராக காதலித்தபோதும் கல்யாணம் ஆகும் வரைக்கும் எல்லைமீறக் கூடாது. அவ்வாறு நிகழ்ந்துவிட்டால் ஒரு பெண்ணுக்கு, சமூகத்தாலும், இயற்கையாலும் பாதிப்பு அதிகமாக ஏற்படுகின்றது. வலிந்து வலிந்து காதலிக்கும் சில ஆண்கள், காரியம் கைகூடியதும் ஒளிந்துக்கொள்கின்றார்கள்.**

**வெலிகம ரிம்ஸா முஹம்மத்**

படிப்பினையாகவும் இருக்கின்றது. எதற்கெடுத்தாலும் கணவனை சந்தேகிக்கக்கூடாது. அவனது அன்பை ஏற்கப் பழகவேண்டும். கொஞ்சநேரம் பிந்தி வீட்டுக்குவந்தால் "எவளுடன் வலிஞ்சிக்கிட்டு இருக்காரோ?" என்ற ஐயப்பாட்டுடன் மனைவி வாழக்கூடாது. பொதுவாகவே கணவன்மார் நேரத்துக்கு வீட்டுக்குச் செல்ல வேண்டும். காரணம் தனிமைப்பட்டு வீட்டுக்குள்ளே சிறைப்பட்டுக் கிடக்கும் பெண்கள் கணவனின் வருகையால் தான் சந்தோசப்படுகின்றார்கள். குறிப்பிட்ட நேரத்தைவிட பிந்திப் போனால் அதற்குரிய காரணத்தைக் கேட்டு அதற்கேற்றபடி மனைவி நடந்து கொள்ளவேண்டும் என இருபக்க நியாயத்தையும் இக்கதை நன்கு உணர்த்தியிருக்கின்றது.

வேலைக்குப் போகும் பெண்களில் அநேகர் எதிர்கொள்ளும் பிரச்சினையை அழகாக எடுத்துக்காட்டுகின்றது ஆசையின் வலையில் (பக்கம்:33) என்ற சிறுகதை. மனேஜரின் தனிப்பட்ட உதவியாளர் பணிக்குவருகின்றாள் சுபமலர் என்ற பெண். தனது தோழியின் தீயஅறிவுரைக்கு இணங்க மனேஜரை வளைத்துப்போடுவதில் குறியாக இருக்கிறாள் சுபமலர். மனேஜரை கைக்குள் போட்டுக் கொண்டால் நல்லதொரு பதவி உயர்வை அடைந்துவிடலாம் என்ற பேரவா அவளுக்கு. மனேஜரும் சபலப் புத்திக்காரர். பைல்களைக் கொடுக்கும்போது வேண்டுமென்றே கையை உரசுவார். அதை சுபமலர் ஒரு சிரிப்புடன் ஏற்றுக்கொள்ளப் பழகியிருந்தாள். அவளது சம்மதத்தைக் கண்ட மனேஜர் ஒருநாள் வெளியூருக்கு வேலை விடயமாகக் போவதாகக்கூறி அவளையும் அழைத்துச் செல்கின்றார். அவரது ஆசை வார்த்தைகளுக்குக் காத்திருந்த சுபமலரும் சுலபமாகவே அவருக்கு தன்னை காணிக்கையாக்குகின்றாள். திடீரென சில மோசடிகளின்பேரில் மனேஜர் தன் பதவியிலிருந்து நீக்கப்படுகின்றார். யாரை நம்பி கற்பினை இழந்தாளோ இன்று அவரே வேலையில்லாமல் தவிக்கின்றார் எனும்போது தீயஅறிவுரை சொன்ன நண்பி மீது கடுங்கோபம் வருகிறது சுபமலருக்கு. பேராசைகூடாது என்றும், ஆசைக்காக கற்பை இழக்கக்கூடாதென்றும், தீய நண்பர்களின் தொடர்புகூடாது என்றும் உணர்த்தியிருக்கின்றது இந்தக்கதை.

மகுடத்தலைப்பான ஆஷா நாயும் அவளும் (பக்கம்:50) என்ற கதை சோகத்தை சுமந்திருக்கும் ஒரு கதையாகும். இந்தக் கதை வாசகரை நிச்சயம் யுத்த கால சூழ்நிலைக்கு இழுத்துச் செல்லும். மதுவின் கணவன் உட்பட பலர் ஷெல்வீச்சால் மடிந்துபோகின்றார்கள். பொத்திப் பொத்திப் பாதுகாத்த குழந்தை ஆஷாவும் இறுதியில் ஷெல்லடிக்குப் பலியாகின்றாள். கணவனதும், குழந்தையினதும் இறப்பை அடுத்தடுத்து கண்ட மது மயங்கி விழுகின்றாள். தற்போது அவளொரு அநாதை இல்லத்தில் பணி புரிகின்றாள். தன்னையே சுற்றிச் சுற்றி வரும் ஒரு நாய்க்கு தன் மகளின் பெயரை வைத்திருப்பது தான் மகுடத் தலைப்பாக இடப்பட்டிருக்கின்றது.

ஆஷா நாயும் அவளும் கதையைப் போலவே யுத்தத்தில் பெற்றோரை இழந்து குழந்தைகள் படும் அவஸ்தையை இரண்டு மொட்டுக்கள் விரிகின்றன (பக்கம்:18) என்ற கதையில் தரிசிக்கமுடிகின்றது. இவ்வாறு சமூகத்தில் புரையோடிப் போயுள்ள விடயங்களை தன் எழுத்துக்களால் வெளிப்படுத்தி வரும் யோ.புரட்சிக்கு வாழ்த்துக்கள்!!!



Dr. சி.யமுனாநந்தா

# நீர் வெறுப்பு நோய்



நீர் வெறுப்பு நோய் எமது சமூகத்தில் உருப்பெருக்கம் அடையும் உயிர்க்கொல்லியாக மாறுபட்ட பரிமாணத்தில் உருவெடுத்துள்ளது. பொதுவான சுகநலப் பிரச்சினையான நாய், பூனை போன்ற செல்லப்பிராணிகளின் தீண்டல்களின் பாதிப்பினை இக்கட்டுரை விளங்குகின்றது. இந்நோய் தொடர்பான விழிப்புணர்வினை மக்கள் அறியவேண்டியது அவசியமாகிறது.



### நீர் வெறுப்பு விசர் நோய் ஏற்படாது இருப்பதற்கு காயம் ஏற்பட்ட பின்பான சிசிச்சை

01) மிருகத்தின் கடிக்குப் பின் நோயாளிக்கான சிகிச்சை.

1. காயத்தினை உடனடியாக நீரினாலும், சவர்க்காரமிட்டும் கழுவுதல். சுமார் 5 நிமிடங்களுக்குள் கழுவுதல் நல்லது.

2. வைத்தியசாலையில் காயத்தினை பூரணமாக்ச் சுத்தப்படுத்தி 70 வீதம் அற்ககோல் அல்லது Povidone lodine ஆல் சுத்தப்படுத்துவர்.

3. ஏற்பு ஊசி தேவைப்படும் பட்சத்தில் அதனை இடல் வேண்டும்.

4. நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை பக்ரீரியாக்களில் தொற்றுகளைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தவேண்டும்.


காயப்பட்ட பின்னான சிகிச்சையில் நோயாளியையும், கடித்த விலங்கின் நிலையையும் பரிசீலிக்கவேண்டும்.

### செல்லப்பிராணிகளும் சிறுவர்களும்

நாய், பூனை என்பன சிறுவர்களைக் கடித்தல் அல்லது கீறல் பொதுவாக ஏற்படுகின்றது. பொதுவாக சிறுவர்கள் விளையாடும்போது நாய், பூனைகளினால் பாதிக்கப்படலாம். ஆனால் சிறுவர்கள் அதனை மறந்துவிடுவர். அல்லது பயத்தினால் பெற்றோருக்குக் கூறமாட்டார்கள். எனவே, இரு ஒரு ஆபத்தான நிலையாகும்.

சிறுவர்கள் வாழும் விளையாட்டுச் சூழலில் நாய்கள், பூனைகள் காணப்படின் அவற்றிற்கு விலங்கின் விசர் தடுப்பு மருந்தினை அளிக்கவேண்டியது பெற்றோரின் பொறுப்பாகும். அடுத்து குழந்தைகளிடமிருந்து நாய், பூனைகள் குறித்து அவதானமாக இருக்க அறிவுரை கூறி, அவை தீண்டின் அதனைப் பெற்றோருக்கு உடனடியாக அறிய வைக்கவும், விளங்கப்படுத்தல் வேண்டும்.

நாய்க்கடி பொதுவாக சிறுவர்களிலேயே ஏற்படுவதால் பெற்றோர் இதுகுறித்து அவதானமாக இருத்தல் வேண்டும். குழந்தைகள் செல்லப்பிராணிகளிடத்து அவதானமில்லாமல் விளையாடும்போது, அவை குறிப்பாக உணவு உண்ணும்போது கோபமடைந்து உடலின் மிகவும் ஆபத்தான காயங்களுக்குரிய இடமான முகத்தில் கடித்துவிடும். செல்லப் பிராணிகளை முத்தமிடக்கூடாது. தெரியாத பிராணிகளிடத்தே அருகே செல்லக்கூடாது. தெருநாய்கள், காட்டு விலங்குகளுக்கு உணவு அளிக்க முற்படக்கூடாது. ஏனெனில் சிலவேளைகளில் கடித்துவிடும்.



### விலங்கின் விசர் ஏற்படாது இருப்பதற்கான நாய், பூனை வளர்ப்போர் செய்யவேண்டியவை

நாய், பூனைகளுக்கு தடுப்பு மருந்து ஏற்றுவதால், அவை பாதுகாக்கப் படுவதுடன் குடும்ப அங்கத்தவர்களும் பாதுகாக்கப்படுகின்றனர்.

### நாய்க்குட்டி, பூனைக்குட்டிகளுக் கான விலங்கின் விசர் தடுப்பு மருந்து

தாய் நாய்க்கு மருந்துபோட்டு இராவிடின் உடனே தடுப்பு மருந்து, பின் 3 மாதம் கழிய, பின் ஒழுங்காக வருடத்தில் தாய் நாய்க்கு அல்லது தாய் பூனைகளுக்கு முழுமையாக விலங்கின் விசர் தடுப்பு மருந்து போடப்படவேண்டும்.

தாய் நாய்க்கு தடுப்பு போட்டு இருப்பின் அவற்றின் குட்டிகளுக்கு 3 மாதத்தில் இருந்து வருடத்தில் ஒழுங்காக வீட்டில் உள்ள எல்லா விலங்குகளுக்கும் தடுப்பு மருந்து ஏற்றவேண்டும். எந்த ஒரு விலங்கினையும் கட்டாக்காலியாக்க வேண்டாம்.

மிருகங்களை கட்டாக்காலியாக விடாது இருக்க, அவற்றின் இனப் பெருக்கத்தினுள் கட்டுப்படுத்தலாம். காட்டு மிருகங்களை செல்லப்பிராணிகளாக்கக்கூடாது.

நாய், பூனைகளுக்கு விலங்கின் விசர் தடுப்பு மருந்தினை கால்நடை வைத்தியரின் உதவியுடன் அளித்தல் வேண்டும்.

---

## அம்பேத்கர் வீட்டை வாங்கியது இந்தியா

சட்டமேதை அம்பேத்கர் லண்டனில் ஆராய்ச்சி படிப்பு படித்தபோது எண் 10, கிங் ஹென்றி ரோடு என்ற முகவரியில் அமைந்துள்ள ஒரு வீட்டில் வசித்துவந்தார். 1921 மற்றும் 1922ஆம் ஆண்டுகளில், மாணவராக அவர் அங்கு வசித்துவந்தார். அது 3 மாடி கள் கொண்ட பங்களாவாகும்.

அதில் 6 படுக்கை அறைகள் உள்ள இந்த பங்களா 2 ஆயிரத்து 50 சதுரஅடியில் அமைந்துள்ளது. அந்த வீட்டின் உரிமையாளர், கடந்த ஆண்டு அதை விற்பனை செய்ய உள்ளார் என்ற தகவலை அறிந்த மராட்டிய மாநில அரசு, வீட்டை விலைக்கு வாங்க முடிவு செய்தது. இதையடுத்து, ரூ.31 கோடிக்கு விலைக்கு வாங்கப் போவதாக கடந்த ஜனவரி மாதம் அறிவித்தது.

இந்நிலையில், இழுபறி முடிவடைந்து மராட்டிய மாநில அரசு நேற்று அந்த வீட்டை விலைக்கு வாங்கியது. இதுதொடர்பான ஒப்பந்தத்தை மராட்டிய மாநில சமூக நீதித்துறை மந்திரி ராஜ்குமார் படோலேவும், வீட்டு உரிமையாளரும் பரிமாறிக்கொண்டனர்.

வீட்டின் விலையில் 10 சதவீத தொகை வீட்டின் உரிமையாளருக்கு பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், பத்திரப்பதிவு செய்யப்படும் போது முழுத்தொகையும் பரிமாற்றம் செய்யப்படும் என மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் ட்விட்டரில் தெரிவித்துள்ளார்.




## வழிகாட்டி நண்பன்




நாம் எங்காவது மொழி தெரியாத ஊர்களுக்கு சென்றால் விலாசம்கூட கேட்க முடியாமல் திணறிப்போவோம். ஒருவேளை நாம் செல்ல வேண்டிய இடத்துக்கு எப்படி போவது என்று எங்காவது எழுதப்பட்டிருந்தாலும் மொழி தெரியாமல் அலைந்து கொண்டிருப்போம். அப்படிப்பட்டவர்களுக்காக உருவாக்கப்பட்டது தான் வோர்ட் லென்ஸ் (Word Lens). அமெரிக்காவை சேர்ந்த கியூஸ்ட் விவல் என்ற நிறுவனம் இணைய வசதி இல்லாமலேயே ஒரு மொழியில் உள்ள வாசகங்களை மற்றொரு மொழிக்கு மாற்றும் மென்பொருளை கண்டுபிடித்தது.

எடுத்துக்காட்டாக, நீங்கள் சாலையில் சென்றுகொண்டிருக்கிறீர்கள். அப்போது ஒரு பலகையில் இந்தியில் எழுதப்பட்டுள்ளது. அந்த வாசகத்தை நீங்கள் புகைப்படம் எடுத்தால் நீங்கள் விரும்பிய மொழியில் அந்த வாசகத்துக்கு அர்த்தம் கிடைக்கும். இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்த மென்பொருளுக்கு அந்நிறுவனம் வைத்த பெயர்தான் வோர்ட் லென்ஸ். இந்நிலையில் வேர்ட் லென்ஸ் மென்பொருளை தங்களுடன் இணைத்துகொள்வதற்காக கூகுள் நிறுவனம் கடந்த 2014ஆம் ஆண்டு மே மாதம் கியூஸ்ட் விவல் நிறுவனத்தை வாங்கியது. பின்னர் தனது கூகுள் மொழிமாற்றி (Google Translate) மென்பொருளில் வோர்ட் லென்சை இணைத்துக்கொண்டு பல்வேறு மொழிகளை இலவசமாக மாற்றிக்கொள்ளும் வசதியை வாடிக்கையாளர்களுக்கு தந்தது.

முதலில் ஸ்பானிஸ் மொழியில் இருந்து ஆங்கிலத்துக்கும் ஆங்கிலத்தில் இருந்து ஸ்பானிஸ் மொழிக்கும் மொழிபெயர்க்கும் வகையிலேயே இது வடிவமைக்கப்பட்டது. தற்போது 27 மொழிகளை மொழிபெயர்க்கும்வகையில் இந்த மென்பொருள் மேம்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## இளம் பணக்காரன்





உலகின் இளம் பணக்காரர்கள் பட்டியலில் முகநூல் (facebook) நிறுவனரான மார்க் சக்கபேர்க் (mark Zuckerberg) முதலிடம் பெற்றுள்ளார்.

உலகளவில் 35 வயதிற்குட்பட்ட பணக்காரர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதில் பேஸ்புக் நிறுவனர்களில் ஒருவரான மார்க் சக்கபேர்க் முதலிடம் பெற்றுள்ளார்.

வெல்த்-எக்ஸ் என்ற பன்னாட்டு நிறுவனம் வெளியிட்டுள்ள பட்டியலில் அவருக்கு முதலிடம் கிடைத்துள்ளது. அவரது சொத்து மதிப்பு 41.6 பில்லியன் டொலர்களாகும். இந்தப் பட்டியலில் முகநூலின் மற்றொரு நிறுவனர் டஸ்டின் மொஸ்கோவிட்ஸ் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார். அவரது சொத்து மதிப்பு 9.3 பில்லியன் டொலர்களாகும். இளம் பணக்காரர்கள் பட்டியலின் முதல் 20 இடங்களில் பெண்கள் 6 பேர் மட்டுமே இடம்பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கனவாகிப்போன காதல்

சசிக்குமார் றசி,
அச்சுவேலி



**நேரம்** நடுநிசியை தாண்டியும் பிரதாப்பின் கண்களில் தூக்கம் வரமறுத்தது. புரண்டு புரண்டு படுத்தான். கண்களை இறுக இறுக மூடினான். ஆனாலும் முடியவில்லை. தூக்கம் வருவதற்கு பதிலாக அவள் முகமே அவன் முன்னாடி வந்துநின்றது. முப்பது வருடம் வரை யாரிடமும் பறிபோகாத அவன் மனம் முப்பது நிமிடத்தில் பறிபோனதை நினைத்து தனக்குள்ளே புலம்பினான். அவளது கொண்டை விழிகள். கருகருவென நீண்ட ஆறடிக் கூந்தல் கொவ்வை பழம் போன்ற அவள் இதழ்கள். நெற்றியிலே சுருண்ட முடி. பௌர்ணமி போன்ற நிலவு போன்ற அவள் முகம், செக்கச்செவ்வேல் என சிவந்தமேனி. பிறைபோன்ற நெற்றி. அதிலே கண்ணுக்கே தெரியாத சின்ன ஸ்ரிக்கர் பொட்டு. அமைதியும் அடக்கமும் கொண்ட அவள் சுபாவம். இவை எல்லாமே பிரதாப்பை கவர்ந்து இழுத்தது. மதுமிதா... மதுமிதா அவன் உதடுகள் அவள் பெயரை உச்சரித்தது.

தாய்க்கு ஒரே மகனான பிரதாப் ஐந்து வயசு இருக்கும்போதே தந்தையை இழந்தான். எவ்வளவோ கஸ்ரப்பட்டு கூலிவேலை செய்தே தாய் மரகதம் அவனை வளர்த்தாள். தாயின் அயராத உழைப்பும் முயற்சியும் பிரதாப்பை ஒரு முழுமனிதன் ஆக்கியது. அவன் படித்து இன்று வங்கி ஒன்றில் மனேஜ்ஜராக கடமையாற்றுகிறான். தாயின் அரவணைப்பில் வளர்ந்த பிரதாப் தாய்மீது அதிக பாசம் வைத்திருந்தான். இதனால் திருமண பந்தத்தில் இணையத் தயங்கினான். தனக்குவரும் மனைவி தாயைப் பிரித்துவிடுவாளோ என்கிற பயம் அவனை வாட்டியது. வயதான காலத்தில் அவனுக்கு ஒரு வாழ்க்கையை தேடிவிட்ப படாத பாடுபட்டாள் தாய். ஆனால் பிரதாப்போ கேட்கவில்லை. ஏதாவது சாக்குப்போக்கு சொல்லி காலத்தை இழுத்தடித்தான். அவன் அழகிலும் அந்தஸ்திலும் எத்தனையோ பெண்கள் அவனை வலைவீசினார்கள்.

ஆனாலும் அவன் யாருக்கும் விலைபோகவில்லை. ஆனால் இன்று மதுமிதா அவனை கொள்ளை கொண்டுவிட்டாள். இரண்டு நாட்களுக்கு முதல்தான் வன்னியில் இருந்து மாற்றமாகி பிரதாப்பின் வங்கிக்கு வந்தாள். மதுமிதா. அவளைப் பார்த்ததுமே அவன் வியர்த்துப்போனான். நாட்கள் நகர்ந்தன. பிரதாப்பின் காதல் ஒருதலைக் காதலாய் தொடர்ந்தது. அவனின் நடத்தை களில் மாற்றத்தை உணர்ந்த தாய் மரகதம் தம்பி பிரதாப் என்ன கொஞ்சநாளாக நீ ஒருமாதிரி இருக்கிறாய் ஒழுங்காக சாப்பிடு வதில்லை. தூங்குவதில்லை. உனக்குள் ஏதேதோ கதைக்கின்றாய். ஏனப்பா உடம்புக்கு ஏதும் சரி இல்லையா என ஆதரவோடு கேட்டாள். உடம்புக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை. மனசுக்குத் தான் அம்மா பிரச்சினை என்னப்பா சொல்லுறாய். ஆமாம். அம்மா நான் ஒரு பெண்ணை காதலிக்கின்றன். அந்த வார்த்தையை கேட்டதுமே மரத்தின் வாயில் பாலை வார்த்தது போல் இருந்தது. கலியாணமே வேண்டாம் என இருந்த பிரதாப் காதலிக்கிறான் என்றதும் ஆச்சரியமாக இருந்தது.

யாரப்பா அந்தப் பெண் அவள் உன்னை காதலிக்கிறாளா? தெரியாதம்மா. நான் அவள்கூடப் பேசவில்லை. ஆனால் எனக்கு கல்யாணம் என்று ஒன்று நடந்தால் அது அவள்கூடத்தான். அம்மா நடக்கணும் பிரதாப் உறுதியாக சொன்னான். என்னடா உனக்கு என்ன குறைச்சல்? அவ ஏன் உன்னை வெறுக்கப்போறா? இண்டைக்கே அவகிட்ட உன் காதலைப் பற்றி சொல்லடா. காதல் என்றாலே போர்க்கொடி தூக்கும். இந்தக் கால பெற்றவர்கள் மத்தியில் மரகதம் வித்தியாசமாக இருந்தாள். காதலுக்கு பச்சைக்கொடி காட்டினாள். அதற்குக் காரணம் அவள், அவன்மீது வைத்திருந்த பாசம். எங்கே தன்னை நினைத்து காலம்பூரா தனிமரமாய் வாழ்ந்து விடுவானோ என்கின்ற தவிப்பு.


ஓபீசுக்குள் நுழைந்த பிரதாப்பின் கண்கள் மதுமிதாவையே நோட்டம் போட்டது. இன்று எப்படியாவது தன் காதலைப் பற்றி சொல்வதென்று முடிவோடே அவளருகில் சென்றவன் மெடம் மதுமிதா இன்று லன்ஜ் ரைம் என்ர றூமுக்கு வாங்கோ. உங்கட கொஞ்சம் பேசனும் சரி சேர் சொல்லிவிட்டு அவன் உள்ளே சென்றான். மதுமிதாவுக்கு ஒரே குழப்பமாக இருந்தது.

லன்ஸ் நேரம் வந்தது. பிரதாப்பை சந்திப்பதற்காய் மதுமிதா சென்றாள். வாங்கோ மதுமிதா உக்காருங்கோ... இல்லை சேர் பரவாயில்லை. இல்லை மதுமிதா இருங்கோ. சற்றுத்தயங்கிய வாறு அமர்ந்தாள் மதுமிதா. உங்களோட பேஸ்னலா கொஞ்சம் கதைக்கவேணும். பரவாய் இல்லை சேர். ஏதுவாய் இருந்தாலும் சொல்லுங்கோ. அந்த நேரம் பார்த்து மதுமிதாவின் போனுக்கு அழைப்புவந்தது. அது மதுமிதாவின் தாயிடம் இருந்துவந்தது. போன் பேசிமுடிந்ததும் மதுமிதாவின் முகம் வெளுத்துப்போனது. இதை அவதானித்த பிரதாப், என்ன மதுமிதா ஏதாவது பிரச்சினையா? இல்லை சேர், அம்மாவுக்கு உடம்புக்கு முடியலையாம். கொஸ்பிற்றலுக்குக் கொண்டு போகவேணுமாம். அப்படியா சரி மதுமிதா நீங்க போட்டுவாங்கோ. நான் அப்புறம் பேசிறன் மதுமிதா. புறப்பட்டு சென்றாள். பிரதாப்புக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை சீ... இன்றும் மிஸ் பண்ணியிட்டதே...

அன்று வெள்ளிக்கிழமை. பிரதாப் பழக்கம்போல் பக்கத்து பிள்ளை யார் கோயிலுக்கு சென்றான். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரி அர்ச்சனை பொருட் களுடன் மதுமிதா வந்தாள். பிரதாப்புக்கு தன் கண்களையே நம்பமுடியவில்லை. ஹாய் மதுமிதா என்ன இந்தப் பக்கம். இந்த பக்கத்து தெருவிலேதான் எங்க வீடு இருக்கு. ஆ அப்படியா... என் வீடும் இந்த தெருவில்தான் இருக்கு. சரி மதுமிதா அண்டைக்கு உங்ககூட ஒரு விசயம் கதைக்க வேணும். ஒன்று சொன்னேன் அல்லவா. ஆமா சேர். மதுமிதா இனிமேல் எங்களுக்குள் இந்த "சேர்" என்கிற வார்த்தை வேண்டாம் பிரதாப் என்றே கூப்பிடுங்கள் அவன் புதிர் போட்டான். சரி பிரதாப் சொல்லுங்கள். மதுமிதா எனக்கு சுத்திவளைச்சு பேசதெரியாது நேரடி யாகவே சொல்கிறேன். உங்களை எனக்கு ரொம்ப பிடித்திருக்கு. எனக்கு மனைவியாக வறவா எப்படி எல்லாம் இருக்கவேணும் என்று ஒரு கணிப்பு வைத்திருந்தேன். அந்த கணக்கு இப்போதான் சரியாக வந்திருக்கு. எனக்கு மனைவியாகிற தகுதி உங்களுக்கு மட்டும்தான் இருக்கு மதுமிதா. மதுமிதாவுக்கு தலை எல்லாம் சுற்றியது. என்ன பேசுவதென்று தெரியாது வார்த்தைகள் தடுமாறியது. என்ன மதுமிதா ஏன் யோசிக்கிறீங்கள், பேசுங்கள். நீங்கள் தப்புக் கணக்குப்போட்டீங்கள் பிரதாப். ஏன் மதுமிதா உங்களுக்கு கணவனாக வாறதுக்கு இதைவிட என்ன தகுதி வேண்டும். எனக்கு, உங்களுக்கு எல்லாத் தகுதியும் இருக்க எனக்குத் தான் அந்தத் தகுதி இல்லை. நீங்கள் என்ன சொல்லுகிறீங்கள். மதுமிதா எந்தப் பெண்ணுக்கும் நடக்கக்கூடாத விசயம் என் வாழ்வில் நடந்தேறிவிட்டது. நான் ஓர் விதவைப் பெண். அந்த வார்த்தையைக் கேட்ட பிரதாப்பு க்கு வானமே இடிந்து தலைமேல் விழுவதுபோல் இருந்தது. ஆமாம் பிரதாப் வன்னி யுத்தம் எனக்கு தந்த பரிசு. நான் ஆனந்த் என்ற பையனை உயிருக்குயிராக காதலித்து திருமணம்செய்து கொண்டேன். திருமணமாகி மறுநாளே தாலியை அறுத்து போட்ட பாவி நான். எறிகணை வீச்சில் என்கணவர் இறந்து விட்டார். மதுமிதாவின் கண்களில் இருந்து கண்ணீர் குளமாய் வடிந்தது.

மதுமிதா இதை எல்லாம் ஒரு கெட்ட கனவாக நினைத்து மறந்துவிடுங்க. புதுவாழ்க்கையை ஆரம்பியுங்கள். என்னை பொறுத்த வரை நீங்கள்தான் என் மனைவி. இந்த முடிவை என்னால் மாற்ற முடியாது. மன்னித்திடுங்கள். பிர தாப் நீங்கள் என்னை காதலிக்கும் போது நான் ஓர் விதவை என்று உங்களுக்கு தெரியாது. ஆனால் இப்போ விதவை என்று தெரிந்ததும் உங்களால் அந்த காதலை தூக்கி எறியமுடியவில்லை. அதேபோல்தான் நானும் ஒரு நாள் அவர்கூட வாழ்ந்தாலும் அந்த நினைவுகளை என்னால் தூக்கி எறியமுடியவில்லை. காலம்பூரா அவள் நினைவோடு வாழ்வேனே தவிர இன்னொருத்தனுக்கு கழுத்தை நீட்டமாட்டேன். குட்பாய் பிரதாப்... மதுமிதாபோகும் திசையையே வெறித்துப்போய் பார்த்தவனாய் பிரதாப் நின்றாள். எங்கிருந்தோ வந்த அந்த பாடல் வரிகள் அவனுக்காய் பாடுவது போல் இருந்தது.

இறைவன் அமைத்துவைத்த மேடை நடக்கும் கல்யாண மாலை இன்னார்க்கு இன்னார் என்று எழுதி வைத்தானே தேவன் அன்று...



# கதிரியக்கத்தின் தாக்கம்!

செல்போன்கள் நம் வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. ஆறாம் விரலாக செயற்பட்டுகொண்டு இருக்கிறது. முதலில் ஒரேயொரு செல்போன் வைத்து இருந்தோம், அடுத்ததாக ஒருவர் இரண்டு செல்போன்கள் பயன்படுத்த தொடங்கினார்கள். இப்போது ஒரே செல்போன்களில் இரண்டு சிம் கார்ட்கள் பயன்படுத்துகிறோம். அப்படியிருந்தும் இரண்டு செல்போன்கள்தான் பயன்படுத்துகிறோம். ஆனால் செல்போன் கோபுரங்களால் ஏற்படும் விளைவுகளை பற்றி தெரிவதே இல்லை...

செல்போன்களில் பேசுவதற்கு தேவையான சிக்னல்களை இந்த கோபுரங்கள்தான் அளிக்கிறது. இதற்காக, அந்த கோபுரங்களில் இருந்து மின்காந்த அலைகள் மற்றும் கதிரியக்கம் வெளிப்படுகிறது. செல்போன்கள் அமைந்துள்ள இடத்தில் இருந்து ஒரு குறிப்பிட்ட தொலைவு வரையிலும் இந்த கதிரியக்கத்தின் தாக்கம் இருக்கும்.

இதன்காரணமாகவே, அதிகாலையில் மனதை மயக்கும்வண்ணம் கீதம் இசைக்கும் சிட்டுக்குருவிகள் கிராமங்களில்கூட இப்போது காணமுடிவதில்லை. அதுமட்டுமல்ல மைனா போன்ற பறவைகளும் அரிய வகை இனங்களாக மாறி கொண்டு இருக்கிறது. மின் கம்பங்கள் மற்றும் தொலைபேசி கம்பங்களில் கூடுகட்டி உயிர் வாழும் இந்த அப்பாவி உயிரினங்கள் அனைத்தும் செல்போன் கோபுரங்களை கண்டால் மட்டும் காத தூரம் ஓடுகின்றன.

நகர்ப்புறம் மட்டும் அல்லாமல், கிராமப்புறங்களிலும் எங்கு பார்த்தாலும் செல்போன் கோபுரங்கள் பெருகி இருப்பதால் இந்த பறவை இனங்கள் காணாமலே போய்விட்டன. பாடப் புத்தகங்களில் பார்க்கவேண்டிய அறிய இனமாக மாறிக்கொண்டு வருகின்றன. இது குறித்து பல எச்சரிக்கை தகவல்கள் வெளியானபோதிலும் யாருமே கண்டுகொண்டதாக தெரியவில்லை.

முந்தைய எச்சரிக்கையை யாரும் கண்டு கொள்ளாமல்விட்டதன் விளைவாக, பறவைகளிடம் இருந்து மனிதர்களை நோக்கி ஒரு அபாயம் திரும்பிக்கொண்டு இருக்கிறது. ஆம், செல்போன் கோபுரங்களில் இருந்து வெளியாகும் கதிரியக்க வீச்சினால் மனிதர்களின் உடலில் பல்வேறு பாதிப்புகள் ஏற்படும் என சர்வதேச அளவில் ஆய்வுகள் எச்சரிக்கை மணி ஒலிக்கின்றன.

மனிதர்களுக்கு உடல்ரீதியாகவும், மரபணு ரீதியாகவும் ஏற்படும் விளைவுகள் பற்றி இந்த யாரும் கருத்தில் கொள்வதில்லை. அதே நேரத்தில் செல்போன் கோபுரங்களில் இருந்து வெளியாகும் கதிர்வீச்சு வளையத்துக்குள்ளேயே தொடர்ந்து வசித்துவருபவர்களுக்கு புற்றுநோய் போன்ற நோய்களில் இருந்து பாதுகாக்கும் வகை யில் உடலில் இயற்கையாகவே அமைந்துள்ள எதிர்ப்புசக்தி குறைவதால் மலட்டுத்தன்மை போன்ற பல்வேறு அபாயங்கள் ஏற்படும் என தொழில்நுட்ப வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர்.

செல்போன் கோபுரங்களால் ஏற்படும் விளைவுகள் பற்றிய பிரச்சினையின் தீவிரத்தை நாம் இன்னும் முழுமையாக புரிந்துகொள்ளவில்லை. செல்போன் கோபுரங்கள் நிறுவுவதில் இலங்கை யைப் பொறுத்தவரை மிகவும் அபாயகரமான நிலை நீடிக்கிறது. செல்போன் கோபுரங்கள் அவுட்சோர்சிங் முறையில் கொடுக்கும் அவலம் இருக்கிறது. இதன்காரணமாக, ஒரே செல்போன் கோபுரத்தை 2 அல்லது 3 செல்போன்கள் நிறுவனங்கள் பகிர்ந்துகொள்கின்றன. எனவே கதிரியக்க வீச்சின் வெளிப்பாடு அதிகரிக்கிறது. உலகில் எந்த ஒரு நாட்டிலும் இப்படி ஒரு நடை முறை கிடையாது.

### தீர்வு

குறைந்த அளவு கதிரியக்கத்தை வெளிபடுத்தும் சிறிய வகை அன்டெனாக்களை, குறைந்தபட்சம் 30 மீ. சுற்றளவிலான பாதுகாப்பு வளையத்துக்குள் அமைக்கலாம். மக்கள் வசிக்கும் வீடுகள் அடுக்குமாடி குடியிருப்புகளின் கூரைகள், பள்ளிகள், மருத்துவமனைகள் போன்றவற்றில் செல்போன் கோபுரங்களை வைப்பதை தவிர்க்கலாம். ▪



# அனைத்தையும் தாங்கினால்தான் பெண்ணா?

ஒரு நாள் மதிய உணவின் போது என்னுடன் வேலை செய்யும் தோழிகள் இருவர். அவர்களுடைய தோழியைப் பற்றிப் பேசிக்கொண்டு இருந்தார்கள். இருவரும் மணமானவர்கள். தங்கள் தோழிக்கு அவள் கணவனால் நடக்கும் கொடுமைகளைப் பற்றிக் கவலையுடன் பேசிக்கொண்டனர்.

"அவளுடைய கணவன் அவளை தினமும் அடிக்கிறான். அவளுடைய ஏ.டி.எம். கார்டைப் பிடுங்கி வைத்துக்கொண்டு சம்பளம் முழுவதையும் அவனே செலவு செய்கிறான். அவளுடைய சம்பளத்தில்தான் குடும்பம் நடக்கிறது. வீட்டுவேலைகள் எல்லாவற்றையும் அவளே செய்யவேண்டும். அவனோ வேலைக்குப் போகாமல் ஊர் சுற்றிக்கொண்டிருக்கிறான்" என்று அவர்கள் பேசியதைக் கேட்கவே கஷ்டமாக இருந்தது. கணவனால் மனைவி கொடுமைப்படுத்தப்படுகிற சம்பவங்களை நான் எங்கள் ஊரில்தான் பார்த்திருக்கிறேன். படித்து, வேலைக்குச் சென்று தன் சொந்தக்காலில் நிற்கும் பெண்களுக்கும் இதே நிலைமையா என்று ஆச்சரியமாக இருந்தது. யாரென்றே தெரியாத அந்தப் பெண்ணை நினைத்துப் பரிதாபமாகவும் இருந்தது. அந்தச் சம்பவத்துக்குப் பிறகு அந்தப் பெண் குறித்து என் அலுவலகத் தோழிகளிடம் விசாரித்து வைப்பேன். நான் அடிக்கடி கேட்கவே, ஒரு நாள் என்னுடைய தோழி பரபரப்பாக வந்து, "அவள் என்ன செய்தாள் தெரியுமா?" என்றாள். பதற்றத்துடன் அவள் சொல்வதைக் கேட்டேன்.

"அவள் இப்போது கர்ப்பமாக இருக்கிறாள். ஆனால், வீட்டை விட்டு வெளியே வந்து விடுதியில் தங்கியிருக்கிறாள்" என்று சொன்னாள். அவள் தன் உடல் நிலை குறித்துக் கவலைப்படாமல் இருப்பதைப் பற்றிதான் இவர்கள் கவலைப்படுக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டேன். ஆனால் அவர்கள் கவலை வேறு.

"அவளுக்குக் கொழுப்பு அதிகமாகிவிட்டது. எவ்வளவு சொன்னாலும் திரும்ப வீட்டுக்குப் போக முடியாதுன்னு சொல்றா" என்று அவர்கள் சொன்னதும் நான் அதிர்ந்தேன். இத்தனை நாட்களாக அவள் பாவம் என்று பேசிக்கொண்டிருந்த வாய், திடீரென்று அவளுக்குக் கொழுப்பு என்று சொல்கிறதே என்று நினைத்தேன். அதை மறைத்துக்கொண்டு, "இதில் என்ன தவறு? கணவனுடைய சித்திரவதை தாங்கமுடியாமல் தானே இந்த முடிவெடுத்து இருக்கிறாள்?" என்று கேட்டேன்.

"ஆமாம் தவறுதான். அவள் அலுவலகம் முடிந்து சாயங்காலம் தானே வீட்டுக்குச் செல்கிறாள். இரவு மட்டும்தான் அந்த வீட்டில் அவள் தங்கப் போகிறாள். அதிகபட்சம் நான்கு மணிநேரம். அந்த நான்கு மணி நேரம் அவளால் பொறுத்துக்கொள்ள முடியாதா? (என்னே இவர்களின் கணக்கு). நாளைக்குப் பிள்ளை பிறந்து அப்பா எங்கே என்று கேட்டால் என்ன செய்வாள்?" என்று என்னிடம் வாதிட்டனர். அதற்கு மேல் அவர்களிடம் பேசிப் பயனில்லை என்று புரிந்துவிட்டது.

குழந்தைக்கு அப்பா தேவை என்பதற்காக எப்படிப்பட்ட திருமண வாழ்க்கையையும் பெண்கள் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டுமா?

சமீபத்தில் 'ஓகே கண்மணி' படம் பார்த்தேன். தான் நினைத்ததைச் செய்யும் நாயகி. ஆனால் அவளுக்குத் தன்னைப் போலவே தன் காலில் நிற்கும் தன் அம்மாவைப் பிடிக்காது. காரணம் அப்பாவை விட்டுப் பிரிந்தது. எந்தப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளாத, தன்னை விட்டுப் பிரிந்த அப்பாவைப் பிடிக்கும். ஆனால் தன்னை வளர்த்து ஆளாக்கிய அம்மாவைப் பிடிக்காது-நம் சமூகம் அம்மாவுக்கென வைத்திருக்கும் நெறிகளை அவள் உடைத்துவிட்டாள் என்ற மகளுடைய நினைப்புதான் அதற்குக் காரணம். இயக்குநர் நம் சமூகத்தின் மனச்சாட்சியை அப்படியே பிரதிபலித்திருப்பார்.

ஒரு பெண் அனைத்துச் சித்திரவதைகளையும் பொறுத்துக்கொண்டு வாழ்ந்தால் அவள் தெய்வம். இல்லையென்றால் அவள் பெண்ணே இல்லை. சமூகத்தின் இந்தப் பார்வை என்று மாறும்?



தாயா, தாரமா என்னும் கேள்விக்கு அக்காலத்தில் தாய் சொல்லைத் தட்டாதே என்னும் பதில்தான் தலைசிறந்ததாக இருந்தது.

துடித்தேன் நான்! அதைக் கேட்ட என் தந்தையும் துடித்தார்.

"வேதங்களும், மரபுகளும் ஆதரிக்காத ஒன்றைச் செய்து நரகப் படுகுழியில் நான் விழமாட்டேன். பாண்டவர் களே! உங்களில் யார் ஒருவர் வேண்டுமானும் என் மகளை மணந்துகொள்ளுங்கள்! ஒருவனுக்கு ஐந்து கன்னிகள் மணவாழ்க்கைப்படலாம். ஆயினும், ஒரு கன்னியை ஐவர் மணப்பதா?" என்று பொங்கி எழுந்து, "கன்னியின் அண்ணனும், கன்னியின் மாமியும் இதை முடிவு செய்யட்டும்!" என்று தனது பொறுப்பிலிருந்து நழுவினார்.

அப்பொழுதும் என் விருப்பத்தை யாரும் கேட்கவில்லை.


அப்பொழுது அங்கு வந்து சேர்ந்த வியாச மாமுனிவரி டம் வேதங்களைத் தொகுத்து இவ்வுலகுக்கு வழங்கிய அந்த உத்தமரிடம் அந்தணருக்கும், மீனவப் பெண்ணுக்கும் பிறந்த பேரறிவாளரிடம் பாண்டுவின் தந்தையிடம் அருச்சுனனின் பாட்டனிடம் இந்த வேதனை-யைப் பகிர்ந்துகொண்டான் என் அண்ணன்.

"மாமுனிவரே! நீங்களே சொல்லுங்கள்! அண்ணனின் மனைவி அன்னையாவாள்! தம்பியின் மனைவி தனது மகளுக்கு இணையாவாள். அப்படியிருக்க, அண்ணன் தம்பிகளான ஐவருக்கு ஒரு கன்னியைப் பகிர்வது பாவம் ஆகாதா? நெறிமுறைகளுக்கு உகந்ததா? வேதங்களைத் தொகுத்தவரே! நீரே இதற்கு விடை அறிவீர்!" என்று அவரி டம் அறிவுரை வேண்டினான்.

முக்காலமும் உணர்ந்த அம்முனிவர் முன்னர் நடந்தவற்றை மொழிந்தார்.

"இக்கன்னி பாஞ்சாலி, முன்பிறப்பில் கணவனை வேண்டி, இறைவன் சிவபெருமான் நோக்கித் தவமியற்றினாள். ஐந்து குணங்கள் நிரம்பிய ஒரு கணவன் வேண்டும் என்று இறைஞ்சாமல், அறநெறி அறிந்த கணவன் வேண்டும், காற்றைப் போலப் வலிமை மிக்க கணவன் வேண்டும், இந்திரனைப் போன்று வீரமிக்க கணவன் வேண்டும், அழகுமிக்க கணவன் வேண்டும், சாத்திரம் பயின்ற கணவன் வேண்டும் என்று தனித் தனியாக வேண்டினாள்.

"வேண்டுவோருக்கு விரும்புவதை வரமாக அளிக்கும் முக்கண்ணனும், 'பெண்ணே, நீ வேண்டியபடி ஐந்து கணவர்களை அளித்தேன்!' என்று அருளினான்.



# பாஞ்சாலியின் புலம்பல்

"இறைவா! இது என்ன சோதனை? நான் ஒரு கணவனை வேண்டினால், ஐந்து கொழுநன்களை அளிக்கிறீர்களே! இவ்வுலகு என்னைக் கற்பிழந்த காரிகை என்று தூற்றாதா?' என்று கதறி அழுதாள்.

"இறைவனும், 'பெண்ணே! உன்னுள் ஐந்து பூதங்களையும் அடக்கி ஆளும் தெய்வப் பெண்கள் உட்புகுந்து ஒன்றாகச் சங்கமிப்பர்! உனது பிறப்பும் பூவுலக மாதர்மூலம் நிகழாது, நெருப்பின்மூலமாகவே நிகழும், ஐந்து தேவர்களின் அம்சமான மனிதர்களை நீ மணப்பாய்! பொன்னையே பரிசுத்தமாக்கும் தீயில் நீ பிறப்பதனால், மாசற்றவளாக விளங்குவாய்! உலகப் பெண் களுக்கு விதிக்கப்படும் நியதி உன்னைக் கட்டுப்படுத்தாது!' என்று வரமளித்து அருளினான்.

"எனவே, அனைத்துக்கும் விதிவிலக்கு இருப்பதுபோல, இதுவும் ஒரு விதிவிலக்கே யாகும்! வருந்தற்க! நியதிக்கு அப்பாற்பட்ட இத்திருமணம் நடக்கட்டும். ஒருவரின் மனைவி யாக அவள் விளங்கும்போது, உலகநெறிகளை மற்றவர் பின்பற்றவேண்டும். ஒருவரை நீங்கி மற்றவரிடம் அவள் புகும்போது மீண்டும் கன்னித் தன்மையை அடைவாள்!" என்று அறிவுரை நல்கினார்.

இறைவனே விதித்தபடி நடக்கட்டும் என்றுதான் விட்டுவிட்டேன். ஐவருக்கும் மனைவியானேன். ஆனால் நான் செய்தது புதுமை அல்ல. எனக்குமுன் இப்படி பல கணவன் மணம் நடந்திருக்கிறது என்றும் உரைக்கப்பட்டது. இறைவனே வேதங்களைப் படைக்கிறான் என்று அனைத்து சமயங்களும் பகருகின்றன. வேதமுதல்வனே விதித்தது எப்படி முறை அற்றது ஆகும்?


இது மட்டும்தானா நான் அனுபவித்த இக்கட்டான நிலை? எந்தப் பெண்ணுக்கும் வரக்கூடாத இழிவல்லவா எனக்கு வந்து சேர்ந்தது!

வஞ்சக சகுனியிடம் சூதாட்டத்தின் மீது கொண்ட ஈர்ப்பால் செல்வம், வேலையாட்கள், அரசு, உடன்பிறப்புகள் மட்டுமன்றித் தன்னையும் இழந்த என் முதற்கணவர் யுதிட்டிரர், என்னையும் பணயம் வைத்து இழந்தார். தன்னை இழந்தபின்னர் தாரத்தை பணயம் வைக்கும் உரிமை தனக்கு இல்லை என்பதை அந்த நீதிமான் அறியாது போனது ஏனோ?

இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சிக்குத்தானே காத்திருந்தான் துரியன்!

"எமக்கு அடிமையான பாஞ்சாலியை இங்கு வரும்படி ஆணையிட்டதாகச் சொல்லி, இங்கு வரச்சொல்லு!" என்று தனது தேரோட்டியை அனுப்பினான் அந்தச் சண்டாளன்.

மாதவிடாய்க் காலம் ஆனதால், ஒற்றை ஆடை உடுத்தி, நெகிழ்வான நிலை யில் இருக்கிறாள் பாஞ்சாலி. இந்நிலையில் இருக்கும் அவளை பலர் வீற்றிருக்கும் இக்கொலு மண்டபத்திற்குக் கொணர்வது முறையில்லை!" என்று என்னவர் எடுத்துச் சொன்னதும் எக்காளமிட்ட அவன் செவிகளில் ஏறவில்லை. (தொடரும்...)



# சிந்தியா பதில்

✪ சிந்தியா! அமெரிக்காவின் பிரதி இராஜாங்க செயலாளர் நிஷா பிஷ்வால் வருகையால் இலங்கை யில் நடக்கப்போவது என்ன?

எம்.திரு, யாழ்ப்பாணம்.

பதில்: அமெரிக்கா இலங்கையில் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்கான அத்திவாரத்தை இட்டுக்கொள்வதும், அதற்கு சமிக்ஞையாக இலங்கையின் உள்ளக விசாரணைக்கு தாம் ஆதரவளிப்பதாக உணர்த்துவதும், அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு போதனையையும், எச்சரிக்கையும் கொடுப்பதுமான நோக்கங்களை அமெரிக்கா நிறைவேற்றிக் கொண்டுள்ளது.

✪ சிந்தியா! இலங்கைக்கு இந்தியா, இலவச ரோந்து கப்பலை வழங்கியதால் தமிழக மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்களே?

ச.அரவிந்தன், கொழும்பு -06.

பதில்: சோழியன் குடுமி சும்மா ஆடுமா என்பார்கள். அதுபோல் இந்தியா இலங்கைக்கு ரோந்துக் கப்பலை வழங்குகின்றது என்றால் அதற்கான நோக்கம் ஆயிரம் இருக்கும். இரண்டு முக்கிய காரணங்களை பார்த்தால் இந்தியா கொடுக்காவிட்டால் சீனாவோ, பாகிஸ்தானோ ஒன்றுக்கு பத்தாக இலவசமாக இலங்கைக்கு கொடுக்க தயாராக இருக்கின்றார்கள். அந்த நாடுகள் அதை வழங்கினால் அதில் இந்திய கடற்பிராந்திய ஆதிக்கம் உண்டு. இந்தியாவுக்கு தேசிய பாதுகாப்பு குறித்த அச்சம் உண்டு, மாறாக தாமே அதை வழங்கினால் நிம்மதி உண்டு, நன்றிக்காக இந்திய மீனவர்கள்மீது அதிலிருந்து கொண்டே தாக்கமாட்டார்கள் என்ற சிறுநம்பிக்கையும் இருக்கும். இப்படி வெளியில் சொல்லமுடியாத காரணங்கள் உண்டு. தமிழ் நாட்டில் உணர்ச்சிக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவத்தை விடவும், இந்திய தேசிய முடிவுகளே முக்கியமானவையாகும்.

✪ சிந்தியா! அண்மையில் நடந்த அரசியல் ஜோக் ஒன்று கூறுங்கள் சிந்தியா?


எம்.நிசான், வவுனியா.

பதில்: ஜோக் என்று கூறமுடியா விட்டாலும், மக்கள் நிராகரித்தவர்களை தேசிய பட்டியலில் எம்.பி.யாக்கி மக்கள் முகத்தில் கரியை பூசிய சம்பவங்களை நினைத்து சிரிப்பதா?, அழுவதா? என்பதுதான் புரியவில்லை.

✪ சிந்தியா! மூன்றாம் பாலினத்தை சமூகத்தில் தீண்டத்தகாதவர்களாக பார்ப்பது ஏன்?

எஸ்.சாலினி, கண்டி.


பதில்: அது ஒரு சிக்கலான பிரச்சினைதான். ஆணும் பெண்ணுமாக பிறந்தது அவர்களின் குறைபாடு இல்லை. அவர்களையும் ஏற்றுக்கொள்ளும் மனோ நிலை நம்மிடையே வளர வேண்டும். நாம் யாரையும் நிராகரிக்கும் உரிமை யற்றவர்கள். நமக்கும் பல குறை பாடுகள் உண்டு. அதை புரிந்து கொண்டும், ஏற்றுக்கொண்டும் வாழ்வதைப்போல், அவர்களையும் புரிந்துகொண்டு வாழவேண்டும்.



✪ சிந்தியா! காக்கா முட்டை, பாகுபலி ஆதிய படங்கள் ஒஸ்கார் மேடையில் கால் பதிக்க காத்திருக்கிறதாமே?

என்.ஹாசன், பதுளை.

பதில்: தகுதியான படங்கள்தான். ஆனால் காக்கா முட்டை ஒரு வியட்நாம் படத்தின் தழுவல் என்றார்கள். அதுபோல் பாகுபலியைப் போல பல பிரமாண்டங்களை ஒஸ்கார் விருதுகள் கண்டிருக்கின்றன. அப்படியெல்லாம் ஒப்பிட்டுப்பார்த்தால் காக்கா முட்டையும், பாகுபலியும் பின்வாங்கிவிடும். வேறு மொழிப் படங்கள், புதிய முயற்சிகள் என்று இதர காரணங்கள் இந்தப் படங்களுக்கு வாய்ப்புக்களை வழங்கலாம். காத்திருப்போம்.



✪ சிந்தியா! தற்போது காதலுடன் சேர்ந்த காமம் முக்கியம் பெறுகிறதே சிந்தியா?

த.சத்தியன், யாழ்ப்பாணம்.

பதில்: எப்போதும் காதலும், காமமும் நெருக்கமாகவே இருந்து வருகின்றது. அதை அறியாமையும், அவசரமும், சிதைத்துவிடுகின்றது. இந்தத் தவறு முற்றாக திருந்தியும் விடாது, சிதையாமலும் இருக்காது. எல்லாம் ஆதாம், ஏவாள் காலத்து கதை. அந்தக் கனி ஆரம்பித்து வைத்த ஆட்டம். ஒரு பாடல் வரி எப்போதும் அழகாக கேட்கும், " காலம் உள்ள காலம்வரை வாழும் இந்தக் காதல். இதுதான் தேவன் ஏற்பாடு" புரிகின்றதா?

# காதிலை பூதந்தசாமி

**வணக்கமுங்கோ. தேர்தல் முடிஞ்சிட்டுது. கூட்டமைப்பின்ர ஐக்கியமெல்லாம் குலைஞ்சு போயிட்டுது. மீண்டும் தமிழரசுக் கட்சி முருங்கைமரத்தில ஏறிட்டுது எண்டு கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் புலம்பத் தொடங்கிட்டினமுங்கோ.**

கூட்டமைப்பின் தலைவரும், தலைவரின்ர வாரிசும் எதிர்பார்த்த மாதிரி பிரேமச் சந்திரன் இம்முறை தட்டுப்பட்டுப் போயிட்டார். அவர் எப்புடி தட்டுப்பட்டுப் போனார் எண்ட கேள்விகள் இன்னும் புத்திஜீவிகளின் தலையை உருட்டிக் கொண்டுதான் இருக்குது.

கூட்டமைப்புக்குள்ளேயே கொஞ்சம் தீவிரமாக தேசியம் பேசிக்கொண்டும், உரிமை பேசிக்கொண்டும் இருந்தவர். கூட்டுக்குள்ள இருந்தாலும், சம்மந்தமானவரும், அவருடைய வாரிசும் மட்டுமே தமிழ் மக்களின் தலைவிதியை தீர்மானிக்கும் சக்திகளாக சர்வாதிகாரப் போக்கில் செயற்படுகின்றனர் என்று துணிச்சலாக விமர்சிக்கின்றவர்.

அப்படியானவரையே தமிழ் மக்கள் ஆட்டத்தில அவுட் பண்ணியிருக்கினம் எண்டால் தமிழ் மக்கள் என்ன நினைக்கினம் எண்டதையே புரிஞ்சு கொள்ள முடியேல்லையே, ஒருவேளை தீவிரமான தேசிய நிலைப்பாட்டையும், உள்ளக விமர்சனப்போக்கையும் விரும்பவில்லையோ.

இல்லாட்டில் சம்மந்தமானவரும், அவருடைய வாரிசும் தங்களுக்கு தீர்வைப் பெற்றுத்தருவினம் வேறு யாரும் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை எண்டு யோசிக்கினமோ,

ஒருவேளை இப்படியான மனோ நிலையாலதான் தேசிய தீவிரவாதிகளாக காட்டிக்கொண்டு களத்தில் பாய்ந்து குத்துக்கரணங்களை அடித்த தமிழ்த் தேசிய முன்னணிக்காரரை தேர்தலில தமிழ் மக்கள் சீண்டியும் பார்க்கினமில்லையோ?

இப்படியெல்லாம் புத்திஜீவிகள் தலையைப்போட்டு பிச்சுக்கொண்டு இருக்கினமுங்கோ. அதுமட்டுமில்லையுங்கோ, தமிழ் மக்கள் தேர்தலில யாருக்கு வாக்களிக்கவேண்டும், அல்லது யாருக்கு வாக்களிப்பது என்ற முடிவை ஏற்கெனவே எடுத்துவிட்டார்களா? அல்லது தமிழ் மக்களுக்கு அரசியல் தெளிவு ஏற்படவில்லையா? போன்ற கேள்வி களைக் கொண்டிருந்த பத்தி எழுத்து ஜாம்பவான்களுக்கே தமிழ் மக்கள் தலையை சுத்திவிட்டிருக்கினமுங்கோ.

தமிழ் மக்களை நம்பலாமா?, முடியாதா? எண்டு புத்திஜீவிகளும், பத்தி எழுத்தாளர்களும் ஒருபக்கம் குழம்பிப்போயுள்ளனர். மறுபக்கம் தமிழ் மக்கள் சுரேஸையும் தூக்கிட்டினமே. இன்னொரு பக்கம் தமிழ் மக்கள் நிராகரிச்சவையையும் அரசியல் பிரதிநிதிகளாக்கிவிட்டிருக்குது. இப்படி நம்மைச் சுற்றி நினைத்துப் பார்க்காத பல சம்பவங்கள் நடந்துகொண்டு இருக்குதுங்கோ.

எம்.பி. பதவி இல்லாட்டில் சுரேசு ஒரு தலைவரே இல்லை எண்ட ரேஞ்சிலத்தான் கூட்டமைப்பு காய்களை நகர்த்தத் தொடங்கியிருக்குதுங்கோ. வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கூட்டமைப்பு பிரதிநிதிகளைத் தான் சந்திக்க நேரம் ஒதுக்கிச்சினமே தவிர, எம்.பியாக இருக்கிறவை மட்டும் வாங்கோ, முதலமைச்சராக இருக்கிறவை வாங்கோ எண்டு ஒண்டும் கண்டிஷன் போடவில்லையுங்கோ. ஆனால் சம்மந்தமானவரும், அவருடைய வாரிசும் தங்களுக்குத் தோதான ஆட்களை கூட்டிக்கொண்டு போனால்தான் சரியெண்டு எம்.பி. பதவி இல்லாத காரணத்தைக்கூறி சுரேஸை வெட்டிவிட்டிருச்சினமாமுங்கோ.

இனிமேல் போராடினேன் என்றும், கட்சி நடத்தினேன் என்றும், தமிழ் மக்களோடு அழுதேன் புலம்பினேன் என்றும் யாராவது கூறிக்கொண்டு ஊருக்குள்ள நடமாடினால் சனம் கண்டுகொள்ளவும் மாட்டினம், ஊர் நாய்கூட திரும்பியும் பார்க்காது எண்டு தமிழ் மக்களின் அரசியல் டெவலப் ஆகிட்டுதுங்கோ.

தேசியப் பட்டியலில சரி ஒரு எம்.பி. பதவியை தாங்கோ எண்டு எவ்வளவோ கேட்டுப் பார்த்தும் சும்மா கலந்தாலோசனை செய்யிறம் எண்டு கதைசொல்லிக்கொண்டு இருந்துவிட்டு, கடைசியில தமிழரசுக் கட்சியின்ர முடிவையே எடுத்திருக்கும் குள்ளநரித்தனத்தை சகிக்கமுடியாமல் சுரேஸார் கடுப்பில இருக்கிறாராமுங்கோ.

சுரேசின்ர குற்றச்சாட்டுக்களுக்கெல்லாம் தான் பதிலளிக்கவேண்டிய அவசியமில்லை எண்டு சம்மந்தமானவர் பி.பி.சி.க்கு சொல்லி இருப்பதும் அவரின் சர்வாதிகாரத்தைக் காட்டுகின்றது என்று கூட்டுக்குள்ள இருக்கும் ஏனைய கட்சிகள் சொல்லினமுங்கோ.

இந்த நிலைமையில தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் தலைநகரில கூடிப் பேசியிருக்கினமுங்கோ. இந்தச் சந்திப்பில தமிழரசு கட்சியை யாப்போடு பதிவு செய்யவேணும், இல்லாட்டில் தமிழரசுக் கட்சிக்கு அடிமையாக இருக்காமல் நாங்கள் புதிய வழியை நாடவேணும் எண்டவிதமாக கடுமையான விவாதிப்புக்களைச் செய்திருக்கினமாமுங்கோ.

சம்மந்தமானவருக்கும், அவருடைய வாரிசுக்கும் சரியான கடிவாளத்தைப் போடாமல் இருந்தால் அவங்கள் கூட்டமைப்பின் இதர கட்சிகளை துலைச்சுப் போடுவாங்கள். தமிழரசுக் கட்சியை பலப்படுத்தி எங்களை செல்லாக்காசாக்கிப் போடுவாங்கள் எண்டும் விவாதங்கள் காரசாரமாக நடைபெற்றதாமுங்கோ.

இதெல்லாம் பதவிகொடுக்காத வெப்புசார வீராப்புக்கள்தான். அடுத்த தேர்தலில இவங்கள் எல்லாம் ஒற்றுமையாகி தேர்தல் கேப்பாங்கள் எண்டு தமிழ்ச்சனம் கண்டுகொள்ள மாட்டினம் எண்டுதானே நினைக்கிறீயள். எனக்கென்னவோ வேறுவிதமாக யோசிக்கத் தோணுதுங்கோ.

**"யாவும் கலப்படமற்ற கற்பனை"**

## வரலாறு படைத்த வல்லுநனர்கள் ஒப்பற்ற தலைவன் மாசேதுங்



இராணுவத்தினரும் வரி வசூலிப்போரும் மிச்சமிருப்பதை அள்ளிக்கொண்டு போய்விடுவார்கள். வெள்ளம், பஞ்சம், வியாதி ஆகிய இயற்கைதரும் துன்பங்கள், வேறு, இத்தனையையும் மௌனமாக, விதியின் சதி என்று ஏற்றுக் கொண்டு, உழைத்து ஓடாகிக்கொண்டே இருந்தான் சீனக் குடியானவன். இத்தகைய அநீதியை, கொடுமையை மாசேதுங் ஏற்றுக்கொள்ள மறுத்தார். இந்த இளம் புரட்சியாளரால் பொறுமைமிக்க தந்தையோடு ஒத்துப்போக முடியவில்லை. ஆகவே 1918 இல் வீட்டைவிட்டு வெளியேறினார். பீஜிங் போனார்.

பீஜிங்கில் உள்ள சர்வகலாசாலை லைபிரரியில் ஒரு வேலை கிடைத்தது. மாஸேதுங்குக்கு ஆசியராகவேண்டும் என்று இளமையின் கனவுகளில் இவர் ஹுனானில் சாதாரண பள்ளிகளில் கல்விகற்றார். பிறகு பீஜிங்கில் உள்ள தேசிய கலாசாலையில் மாணவனாக இருந்தபோது ரஷ்யாவில் நிகழ்ந்த போல்ஷ்விக் புரட்சியைப் பற்றிக் கேள்விப்பட்டார். கம்யூனிஸ்ட் கொள்கைகளைப் பற்றிய எல்லாத் தகவல்களையும் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியவர்களின் தத்துவங்களையும் தெரிந்துகொண்டார். 1919 இல் மாசேதுங் ஒரு கம்யூனிஸ்டாக மாறினார். வறுமையிலிருந்தும் கொடுங்கோல் ஆட்சியிலிருந்தும் சீனாவுக்குக் கம்யூனிஸ மார்க்கமே விடுதலை அளிக்கும் என்று உறுதியாக நம்பினார் மாஸேதுங். 1921இல் சீன கம்யூனிட் கட்சியைத் தோற்றுவித்து, தம்மைப் போன்ற இளைஞர்களைச் சேர்த்துக்கொண்டு, கம்யூனிஜ்டு கொள்கைகளைப் பரப்பவும் அங்கத்தினர்களைச் சேர்க்கவும் ஆரம்பித்தார்.

(தொடரும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(03.09.2015 தொடக்கம் 09.09.2015 வரை)

### மேடம்

அரசியல்வாதிகளிடம் இருந்து எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். கணவன், மனைவி உறவுகளில் பிரச்சனைகள் வந்துநீங்கும். உடம்பில் தலை மற்றும் முகம் ஆகிய உபாதைகள் வந்து தீரும். உற்றார் உறவினர்களின் வரவால் மனமகிழ்ச்சியும் நிம்மதியும் வந்துசேரும். வங்கிகளின்மூலமாக எதிர்பார்த்து இருந்த கடன்தொகைகள் கிடைக்கும். கோர்ட் வழக்கு சம்பந்தமாகிய விசயங்களில் சற்று எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நல்லது. திருமணம் ஆகாதவர்களுக்கு திருமண காரியம் கைகூடும். புதிய நண்பர்கள் சேர்க்கையால் கூட்டுத்தொழில் முயற்சிகளில் எதிர்பாராத இலாபம் அடையலாம். விட்டுப்போன பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கும். மற்றவர்களின் விசயங்களில் அநாவசியமாகத் தலையிட்டு வீண் சிக்கலில் மாட்டிக்கொண்டு அவதிப்படாதீர்கள்.

### இடபம்

வீடுகளைப் புதுப்பித்துக் கட்டப் போட்ட திட்டங்களில் காலதாமதம் ஏற்படும். வங்கிகளில் இருந்து எதிர்பார்த்து இருந்த பணம் கிடைக்கும். பிள்ளைகளால் தனவரவும், மனநிம்மதியும் உண்டாகும். கண்களில் கவனம் தேவை காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல தகவல்கள் வந்துசேரும். மிகுந்த பிரயாசையின் மேல் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைச் சமாளித்துக்கொள்வீர்கள். பிள்ளைகளின் சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கான முயற்சிகளில் நல்ல செய்திகளைக் கேட்பீர்கள். தென்திசையில் இருந்து எதிர்பாராத நல்ல செய்திகள் வந்துசேரும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து நல்ல முடிவுகள் கிடைக்கும். ஒரு சிலருக்கு வீடு மாற்றங்கள் ஏற்படலாம்.

### மிதுனம்

நீண்டகாலமாக இருந்துவந்த பிணிகளுக்கு புதிய மருத்துவர்களின் உதவியால் நோய் நீங்கும். தொலைதூரப் பயணங்களில் மிகுந்த கவனமுடன் சென்று வருதல் நல்லது. உணவு உண்ணுதல் மற்றும் நித்திரை போன்றவற்றில் காலதாமதம் ஏற்படலாம். ஒரு சிலருக்குப் புதிய வீடு மாற்றம் உண்டாகும். தாய்வழிச் சொந்த பந்தங்களால் ஆதரவுகள் வந்துசேரும். புதியதாகக் கடன்வாங்க செய்த முயற்சிகளில் வெற்றிபெறச் சற்று காலதாமதம் ஆகலாம். நாட்பட்ட சொத்து விசயமான அரசு வழக்குகளில் சாதகமான நல்ல தீர்ப்புகளை எதிர்பார்க்கலாம். காணாமற்போன பொருட்கள் காவல் துறையினர்களால் திரும்பக் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது.

### கடகம்

நண்பர்களின் உதவியால் புதிய தொழில் துவங்கப்போட்ட திட்டங்கள் தடையின்றி நிறைவேறும். குடும்பத்தில் காரணமற்ற மனக்கசப்புகள் வந்துபோகும். வங்கிகளின் உதவியால் எதிர்பார்த்திருந்த கடன்தொகைகள் தாமதமின்றி உடன் கிடைக்க வாய்ப்பு உள்ளது. கல்வித்துறையைச் சார்ந்தவர்கள் சற்று எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நல்லது. வெளிநாடுகளில் இருந்து நல்ல செய்திகளைக் கேட்பீர்கள். லோட்டரி போன்ற விசயத்தில் பணம் பொருள்களை ஏமாற்றம் அடையாமல் இருக்கவும். விபரீதமான எண்ணங்களை விட்டுச் செயற்பாட்டில் கவனம் செலுத்துங்கள். விவசாயத்தில் புதிய முறைத் திட்டங்களின்மூலம் மாற்றம்செய்ய எண்ணுவீர்கள். வராத பணம் மற்றும் பொருட்கள் திரும்பக் கை வந்துசேரும்.

### சிங்கம்

அரசியல் வாதிகள் மிகவும் எச்சரிக்கையுடன் பணியாற்றுதல் சிறந்ததாகும். தீராத பழைய வழக்குகளில் நல்ல முடிவுகளை எதிர்பார்க்கலாம். வராத கடன் கொடுத்து இருந்த பணம் திரும்பக் கை வந்துசேரும் காலமாகும். குழந்தைகளால் பெயர், புகழ் ஏற்படலாம். உற்றார் உறவினர்களால் மனநிம்மதி இன்மையும், காரணமற்ற பொருட்செலவுகளும் உண்டாகும். அரசியல்வாதிகளால் சில எதிர்பார்க்காத ஆதாயங்கள் அடைவீர்கள். தாயின் உடல்நிலையில் ஏற்படும். வடக்குத் திசையில் இருந்து சில நற்செய்திகள் வந்துசேரும். விட்டுப்போன பழைய வழக்குகள் மீண்டும் தொடர்ந்து அவற்றில் வெற்றிபெறுவீர்கள். பொருளாதாரம் சுமாராகக் காணப்படும். சந்திக்கவேண்டிய நபர்களை சந்திப்பதில் காலதாமதம் ஏற்படலாம்.

### கன்னி

புதிய நண்பர்கள் சேர்க்கையை தவிர்த்தல் நல்லது. திருமணம் போன்ற சுபகாரியங்கள் சம்பந்தமாக நீண்டதூரப் பயணங்களை மேற் கொள்வீர்கள் புதிய நண்பர்கள் சேர்க்கையால் எதிர்பாராத தனலாபம் அடைய வாய்ப்பு உள்ளது. வண்டி வாகனங்களில் மிக எச்சரிக்கையுடன் யாத்திரை செய்துவருதல் நல்லது. செய்தொழிலில் பங்காளிகளால் எதிர் பார்த்த பணம் கைக்கு வந்துசேரும் காலமாகும். உடம்பில் எலும்பு, நரம்பு சம்பந்தம் ஆகிய பிணிகள் வந்துபோகும். ரேஸ்,லோட்டரி போன்றவற்றின்மூலம் திடீர் தனவரவு உண்டாகும். மாணவர்கள் கல்வியில் நல்ல மதிப்பெண்களையும், பரிசு மற்றும் பாராட்டுதல்களையும் பெறக்கூடிய காலமாகும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

### துலாம்

ஒரு சிலருக்கு வீடு மற்றும் தொழிற்சாலைகள் இடமாற்றம் ஏற்படலாம். செய்தொழிலில் புதிய கூட்டு முயற்சிகளைத் தவிர்க்கவும். தேவையில்லாமல் பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்க வாய்ப்பு உள்ளது. அடிமையாட்களால் பொருட்செலவுகளும் மனநிம்மதிக் குறைவும் ஏற்படலாம். உறவினர்களின் வருகையால் பொருள்வரவு உண்டாகும். காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல செய்திகள் கிடைக்கும். குல தெய்வ வழிபாடு செய்துவருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். வெளிநாடு சென்றுவருதல் சம்பந்தமான முயற்சிகளில் நல்ல செய்திகள் வந்துசேரும். சம்பந்தம் இல்லாத நபர்களால் காணாமற்போன பொருட்கள் திரும்ப வீடு வந்துசேரும். புதிய தொழில்களை ஆரம்பம் செய்ய எண்ணுவீர்கள்.

### விருச்சிகம்

விருந்தினர் வரவால் மனமகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாக வாய்ப்பு உள்ளது. செல்வ செல்வாக்கு, புகழ்கூடும். புதிய வீடு, நிலம் வாகனங்களை வாங்கக் கூடிய காலமாகும். மற்றவர்களுக்காக சொத்து சம்பந்தமான விசயங்களுக்கு ஜாமீன் போட்டு வீண் பிரச்சினைகளை விலைக்கு வாங்காதீர்கள். இதுநாள்வரையில் இருந்துவந்த பொருளாதார நெருக்கடிகள் மாறி தேவையான பொருள்வரவு உண்டாகும். குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவருவதற்கான வாய்ப்பு உள்ளது. வீடு மற்றும் வாகனங்களைப் பழுதுபார்ப்பதன் மூலம் பொருட்செலவுகள் ஏற்படலாம். பெரிய மனிதர்கள் சந்திப்பால் சில காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தராத வாரமாகும்.

### தனுசு

பொருளாதார நெருக்கடியில் மனைவி அல்லது மனைவிவழிச் சொந்தபந்தங்களால் மாற்றம் உண்டாகி மனநிறைவை அடைவீர்கள். காணாமற்போன பொருட்கள் சம்பந்தமில்லாத நபர்களால் வீடு வந்துசேரும். மனத்தைரியமுடன் எடுத்த காரியத்தைச் சிரத்தையுடன் செய்து முடிப்பீர்கள். உடல்நிலையில் அலேர்ஜி மற்றும் தொற்று நோய் போன்ற உபாதைகள் வரக்கூடும் என்பதால் உண்ணும் உணவில் கவனம் தேவை. புதிய வீடு, நிலம் வாங்க எதிர்பார்த்திருந்த கடன்கேட்ட பணம் கை வந்துசேரும். தாயின் உடல்நிலையில் இருந்துவந்த பாதிப்புகள் நீங்கி மருத்துவச்செலவுகள் குறையும். வீடுகளில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லது. திடீர் என்று லோட்டரிமூலம் பணம் கிடைக்கும் என்று கருதி ஏமாற்றம் அடையவேண்டாம்.

### மகரம்

வேண்டாத விசயங்களில் தலையிட்டுச் சிக்கலில் மாட்டிக்கொள்ளாது இருக்கவும். தந்தை, மகன் உறவில் இருந்துவந்த பிரச்சினைகள் தீரும். தங்கம் வெள்ளி போன்ற நகை வியாபாரிகள், அலங்காரப் பொருள் வியாபாரிகள், திருமணத் தகவல் மையங்களை நடத்துபவர்கள், சினிமா மற்றும் நாடகத் துறைகளைச் சார்ந்தவர்கள், கார், லொறி, ஆடு, மாடு போன்ற வாகன சம்பந்தமான தொழில் செய்வோர்கள் ஆகியோர்கள் நல்ல இலாபம் பெறுவார்கள். நண்பர்களால் புதிய தொழில் முயற்சிகள் மற்றும் புதிய கடன்வாங்குவது போன்ற முயற்சிகளில் வெற்றிபெறுவீர்கள். விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது. வேலையில்லாத படித்த இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் சம்பந்தமாக பிரயாணங்களை மேற்கொள்ளுவீர்கள்.

### கும்பம்


பிள்ளைகளால் பொருள்வரவு உண்டாகுவதுடன் அவர்களாலேயே காரணமற்ற பொருட்செலவுகளும் வந்துசேரும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் கவனமுடன் பேசிப் பழகவும். உடம்பில் மேகம், உஷ்ணம் ஆகிய உபாதைகள் வந்துபோகும். கணவன், மனைவி உறவுகளில் கவனமுடன் இருத்தலோடு, முன்கோபம் தவிர்த்தல் நல்லது. வீடு மற்றும் தொழிற்சாலைகளைத் திருத்திக்கட்டுவதன் மூலம் பொருட்செலவுகள் வர வாய்ப்புகள் உள்ளன. வேலை இல்லாத படித்த இளைஞர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் வந்துசேரும். ரேஸ் லோட்டரி போன்ற சூதாட்டங்கள்மூலமாகப் பணம் ஏமாற்றம் அடையாமல் இருப்பது நல்லதாகும். உற்றார் உறவினர்களால் மனச்சஞ்சலம் வந்துசேரும்.

### மீனம்

விவசாயம் செய்வோர்களுக்கு விவசாயம் நன்கு பலிதமாகும். காதல் விசயங்களில் மிகுந்த மனச் சந்தோசம் ஏற்படும். நீண்டதூரப் பயணங்களின்போது பெரிய மனிதர்கள் சந்திப்பு ஏற்பட்டு அவர்களால் சில காரியங்களைச் சாதித்துக்கொள்வீர்கள். இதுவரை இருந்துவந்த பொருளாதார நெருக்கடிகள் மாறி மனச்சந்தோசம் அடையலாம். புதிய வீடு, நிலம் வாங்குவதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளில் வெற்றிகள் பெறுவீர்கள். தூரத்து உறவினர்களின் வரவால் எதிர்பாராத பொருட்செலவுகள் உண்டாகும். பழைய கடன்களை அடைத்துப் புதிய கடன்வாங்குவீர்கள். பிறர் விசயங்களுக்காக ஜாமீன் போடுவதைத் தவிர்க்கவும். வெளிநாட்டில் வசிப்பவர்கள் தங்களது தாய்நாடு சென்று திரும்ப வாய்ப்புள்ள காலமாகும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)





## அதிசயச் சிறுவன்

இங்கிலாந்தில், கிரேட்டர் மான்செஸ்டர் நகரில் வசித்துவரும் கெய்ல் லேலெண்ட் மற்றும் டேனியல் தம்பதியருக்கு ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்தது. தனது குடும்பத்திற்கு புதிய வரவாக வந்த அந்த குழந்தைக்கு ரைஸ் என்று பெயர் சூட்டி வளர்த்துவந்தனர்.

பிறந்து ஆறு மாதமான பின்புதான் ரைசின் உடலில் ஏதோ மாற்றம் உண்டாவதையும், உணவு உட்கொள்வதற்கே சிரமப்படுவதையும் அறிந்த அவனது பெற்றோர், பதட்டத்துடன் மருத்துவமனைக்குச் சென்றனர். அவனை பரிசோதித்த டாக்டர்கள் ஆறு மாதத்திற்கு பின்பு அவனது உடல் எடை கொஞ்சம்கூட அதிகரிக்கவில்லை என்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

எனவே, அவன் எந்தவிதமான நோயால் பாதிக்கப்பட்டுள்ளான் என்பதை தீவிரமாக ஆராய்ந்தனர். அப்போது, ரைசின் மூளையில் தன்னிச்சையாக செல்லும் கட்டளைகளில் குறைபாடு இருப்பதைக் கண்டறிந்தனர். இந்த பாதிப்பால் ரைசின் மூளையிலிருந்து தானாக செல்ல வேண்டிய செரிமானத்திற்கான கட்டளை அந்த குறிப்பிட்ட உறுப்புக்கு செல்லவில்லை. இந்த காரணத்தால், அவன் உண்ணும் உணவுகள் செரிமானமாகாது. எனவே, அவனுக்கு பசியைப் பற்றிய நினைவே இருக்காது. இங்கிலாந்து நாட்டிலேயே இந்த நோயால் பாதிக்கப்பட்ட ஒரே சிறுவன் ரைஸ்தான். இதுவரை 13 அறுவை சிகிச்சைகளை சந்தித்துள்ள ரைசின் பெரும்பாலான நாட்கள் மருத்துவமனையிலேயே கழிந்தது. இதில் துயரம் என்னவென்றால் பிறந்தது முதல் அவன் ஒருபோதும் உணவு உட்கொண்டதே இல்லை.

## சுற்றுலாவுக்குத் தயாரா?

சீனாவில் வருகிற ஒக்டோபர் மாதம் தேசிய தினம் கொண்டாடப்பட உள்ளதை முன்னிட்டு கர்ஸ்ட் பள்ளத்தாக்கிற்கு மேலே உள்ள உலாங் தேசிய புவியியல் பூங்காவில் முழுக்க முழுக்க கண்ணாடியால் மட்டுமே ஆன நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இதில் நடக்க, சாகசத்தில் விருப்பமுள்ள, பலவீனமற்றவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கடல் மட்டத்தில் இருந்து 4,700 அடி உயரத்தில், 200 அடி நீளத்திற்கு இந்த கண்ணாடி நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது.

3 அடுக்குகள் கொண்ட இந்த கண்ணாடித்தளம் 10 டன் எடை கொண்டது. மலையை ஒட்டி, 3 அடி அகலத்தில், 2.5 அங்குல கண்ணாடியால் அமைக்கப்பட்டுள்ள இந்த திகில் நடைபாதையில் நடப்பவர்கள், அருகிலுள்ள தியான்மென் மலையின் எழில்கொஞ்சும் அழகை ரசிக்கலாம். கண்ணாடி பாதையின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்காக சுற்றுலா பயணிகள், காலணிகளை கழற்றிவிட்டு நடக்க பூங்கா நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. இந்த பாதை குறித்த தகவல்கள், புகைப்படங்களுடன் இணையத்தளத்தில் வெளியானதையடுத்து, சுற்றுலா பயணிகள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.









## இளவரசனைப் போல்...

ஒரு அமெரிக்க வாலிபர் இளவரசனாக ஆசைப்பட்டு ஒருவாரத்துக்கு நிஜ இளவரசனின் உடையணிந்து வந்து தனது ஆசையை வீடியோவாக பதிவுசெய்து உலகுடன் பகிர்ந்துகொண்டுள்ளார். பிரிட்டனின் ஜி.க்யு. பத்திரிகையால், இங்கிலாந்தின் 49ஆவது சிறந்த உடையணியும் ஆணாக இளவரசர் ஜோர்ஜ் (வயது 2) சமீபத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் அணிந்த உடைகளும், ஷூக்களும் உலகின் பல மூலைகளிலும் டிரெண்ட் ஆகியுள்ளது.

இதைத்தொடர்ந்து, ராஜ வம்சத்தில் பிறக்காத, மேக்ஸ் க்னோப்லாச்(23) என்கிற பத்திரிகையாளர், தானும் இளவரசராக இருந்தால் எப்படி இருக்கும்? என்பதை அறிந்துகொள்ளும் ஆர்வத்தில் இளவரசர் ஜோர்ஜ் போல ஒரு வாரத்துக்கு உடையணிந்து நியூயோர்க் நகரசாலைகளில் மக்களுக்கு காட்சியளித்தார். முதல் நாளன்று இளவரசர் ஜோர்ஜின் தங்கை பிறந்தபோது அவர் அணிந்திருந்த நீல ஸ்வெட்டரை அணிந்து, 91 டிகிரி வெயிலில்

அறுவலா பயணிகள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.



# இளவரசனைப் போல்...

ஒரு அமெரிக்க வாலிபர் இளவரசனாக ஆசைப்பட்டு ஒருவாரத்துக்கு நிஜ இளவரசனின் உடையணிந்து வந்து தனது ஆசையை வீடியோவாக பதிவுசெய்து உலகுடன் பகிர்ந்துகொண்டுள்ளார். பிரிட்டனின் ஜி.க்யு. பத்திரிகையால், இங்கிலாந்தின் 49ஆவது சிறந்த உடையணியும் ஆணாக இளவரசர் ஜோர்ஜ் (வயது 2) சமீபத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் அணிந்த உடைகளும், ஷூக்களும் உலகின் பல மூலைகளிலும் டிரெண்ட் ஆகியுள்ளது.

இதைத்தொடர்ந்து, ராஜ வம்சத்தில் பிறக்காத, மேக்ஸ் கனோப்லாச்(23) என்கிற பத்திரிகையாளர், தானும் இளவரசராக இருந்தால் எப்படி இருக்கும்? என்பதை அறிந்துகொள்ளும் ஆர்வத்தில் இளவரசர் ஜோர்ஜ் போல ஒரு வாரத்துக்கு உடையணிந்து நியூயோர்க் நகரசாலைகளில் மக்களுக்கு காட்சியளித்தார். முதல் நாளன்று இளவரசர் ஜோர்ஜின் தங்கை பிறந்தபோது அவர் அணிந்திருந்த நீல ஸ்வெட்டரை அணிந்து, 91 டிகிரி வெயிலில் நின்றிருந்தவரை, அந்த வழியே சென்றவர் "சூடாக இல்லை?" எனக் கேட்டுச் சென்றாராம்.

விளையாட்டாக அவர் செய்த இந்த லீலையை நியூயோர்க் நகர பரபரப்பில் மக்கள் பெரிதாக கண்டுகொள்ளவில்லையாம். எனினும், இளவரசனைப்போல எல்லோரும் வாழ முயற்சித்துப் பார்க்கவேண்டும். இது ஜாலியாகத்தான் இருக்கிறது. என்றார்.



அண்மையில் நூற்றிப் பத்து அடி உயரத்தில், இருபத்தைந்து மீற்றர் நீளத்திலும், ஐந்து மீற்றர் அகலத்திலும், மூன்று மீற்றர் ஆழமும் கொண்ட கண்ணாடி நீச்சல் குளத்தை இரு பத்தடுக்கு மாடி குடியிருப்பு கட்டடங்களுக்கு இடையே நவீனகால என்ஜினீயர்கள், அருமையாக உருவாக்கியிருந்த செய்தியைக் கேள்விப்பட்டிருப்பீர்கள்.


அந்தவகையில், நியூ ஜெர்சியில் உள்ள முன்னாள் வங்கி அதிகாரி ஒருவர், தனது வீட்டில் வயலின் வடிவத்தில் வித்தியாசமான ஒரு நீச்சல் குளத்தை அமைத்துள்ளார். இதுமட்டுமல்லாமல், 57 மாடிகள் கொண்ட சிங்கப்பூரின் பே சேன்ஸ் ஹோட்டலின் மொட்டை மாடியில் அமைந்துள்ள நீச்சல்குளம்.

பாலியில் உள்ள உபுட் ஹோட்டலில் காட்டு மரங்களைவிட உயரத்தில் உள்ள நீச்சல் குளம், ஆஸ்திரேலியாவின் பாண்டி கடற்கரையில் உள்ள ஐஸ்கட்டி நீச்சல் குளம் என்று நம்மை வியக்கவைக்கும் நீச்சல் குளங்கள் எக்கச்சக்கமாக இருப்பது ஆச்சரியமாகவும், அற்புதமாகவும் இருக்கிறது.





[illegible] அதிகமான மக்கள்தொகை கொண்ட மாகாணங்களில் மிசவ்ரி மாகாணமும் [illegible] சார்லேன் பிரான்ஹம் (40). [illegible] பேரனையும் கண [illegible] லதான் அது 50 கி[illegible] எடையுள்ள பூதககட்டியாக உருவெடுத்தது. இதல் [illegible] தனது உடல் எடையான 198 கிலோவு [illegible] மேலும் சுமார் 50 கிலோ கட்டியுடன் சேர்ந்து சுமார் 250 கிலோ உடல் எடையுடன் எழுந்து நிற்பதற்கே சார்லேன் மிகவும் சிரமப்பட்டார். ஒருவழியாக ஹெய்டருக்கு கலிபோர்னியாவில் உள்ள பேஸ்கர்பீல்ட் மெமோரியல் மருத்துவமனையில் பணிபுரிந்துவரும் டாக்டர் விப் தேவ என்பவரின் உதவி கிடைத்தது. இதைத்தொடர்ந்து, பேகர்ஸ்பீல்ட் மெமோரியல் மருத்துவமனையில் சார்லன் அனுமதிக்கப்பட்டார். பின்பு டாக்டர் விப் தேவ் கொண்ட குழு, இந்த சத்திரசிகிச்சையை வெற்றிகரமாக முடித்து, சார்லன் வாழ்க்கையை முடக்கிய 50 கிலோ எடையுள்ள கட்டியை அகற்றியது. அந்த கட்டியை இரண்டு டாக்டர்கள் சேர்ந்து வெளியே தூக்கியதாக டாக்டர்கள் கூறினர்.






இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி என்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் செப்ரெம்பர் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.